Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 29 சனிக்கிழமை (12.04.2014) பக்கங்கள் 20 ஓசை - 193



அலுத்து விட்டது

10



4 ஆம் இடம்

14

## பண்டிகைக்கால முற்பணம் ஆசிரியர்களுக்கு கிடைக்கும்

(அச்சுவேலி)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அதிபர், ஆசிரியர்ளுக்கு வழங்கப்படாது நிறுத்தப்பட்டிருந்த பண்டிகைக் கால முற்பணக் கொடுப்பனவுகள் மீண்டும் அவர்களுக்கு கிடைப்பதற்கான வழிவகைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அதிபர், ஆசிரியர்களுக்கு பண்டிகைக் கால முற்பணக் கொடுப்பனவாக 5000 ரூபா பணத்தினை மாதாந்த சம்பளத்துடன் வட்டியில்லாது வழங்குவதற்காக .விபரங்கள் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் வலயக்கல்வி அலுவலகங்களிற்கு உரிய நேரத்தில் பண ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமையினால். மாதாந்த சம்பளத்துடன் அம்முற்பணம் வழங்கப்படவில்லை.

எனினும் ஆசிரியர் சங்கங்கள் மேற்கொண்டிருந்த நடவடிக்கை காரணமாக உடனடியாக இப்பண்டிகைக்கால

19 ஆம் பக்கம் பார்க்க

## எறிகணைக் குண்டுகளை எடுத்துச்சென்ற மூவர் கைது

(பளை)

ஷெல் குண்டுகளுடன் முஸ்லிம் இளைஞர்கள் மூவர் பளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் வான் ஒன்றில் ஷெல் குண்டுகளை ஏற்றிச் சென்றதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

34, 29, 21 வயதான இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

## வரன்முறை தவறிய பேச்சு கரைச்சி தவிசாளரின் அநாகரிகம்

### கிளி. புத்தாண்டுச் சந்தையில் மக்கள் முகம்சுழிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற வாழ்வின் எழுச்சி புதுவருட சந்தை திறப்பு விழா நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள் உட்பட பல பிரதிநிதிகள் உள்ளடங்கியிருந்த அரங்கில் கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் குகராசா மிக அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது சபையின் முன் எழுந்து நின்று அவர் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களை வெளியிட்டதனால் மக்களும் பிரதிநிதிகளும் முகம் சுழித்தனர்.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் உரையாற்றிய பின்னர் மாவட்ட அரசாங்க அதிபர் உரையாற்றத் தொடங்கினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# கோபி உட்பட மூவர் சுட்டுக்கொலை





## மூவரும் தேடப்பட்டவர்களே

(கொழும்பு)

புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் அளிக்கவும், முன்னாள் போராளிகளை மீள ஒருங்கிணைக்கவும் முயற்சித்து வருகிறார் என்று பாதுகாப்புப் படைகளால் தேடப்பட்டுவந்த கோபி உட்பட மூவர் நெடுங்கேணி வெடிவைத்தகல் என்ற காட்டுப் பகுதியில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை ஒன்றின்போது சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் மறைந்திருந்த காட்டுப்பகுதியை நேற்று முன்தினம் இரவு படையினர் சுற்றிவளைத்தனர். இதன்போது இவர்கள் அங்கிருந்து தப்பியோட முற்பட்டபோது சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

பாதுகாப்புப் படையினரால் அண்மைய வாரங்களாக தேடப்பட்டு வந்த கோபி என்றழைக்கப்படும் கஜீபன் பொன்னையா செல்வநாயகம், மற்றும் தேவியன் என்றழைக்கப்படும் சுந்தரலிங்கம் கஜீபன் ஆகிய இருவர் உட்பட, மூன்றுபேர் இலங்கையின் வடக்கே வவுனியா மாவட்டம் நெடுங்கேணி பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்திருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் இப் போதைய உயர் மட்ட உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்பட்ட இவர்கள் இராணுவத்தினர் நெடுங்கேணியில் மேற்கொண்டிருந்த சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கையொன்றில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோது இராணுவத்தினர் மேற்கொண்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச சபையை முடக்குகிறது வடக்கு மாகாண சபை

### வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் குமுறல்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபை தொடர்பில் பலவிதமான செய்திகள் நாளுக்குநாள் வந்தவண்ணமே உள்ளன. எனினும் இப் பிரதேச சபையை செயற்பட விடாமல் வடமாகாண சபையே முடக்கி வைத்துள்ளது என்று இப்பிரதேச சபையின் எதிர்க் கட்சி உறுப்பினர் இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையை இயக்குவதற்கு ஏற்ற சூழல் இன்னும் இல்லை என்றும், வடமாகாண சபை செயற்படுவதற்கு மகிந்த அரசு பல முட்டுக்கட்டைகளை போடுகிறது என்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளிடமும் பத்திரிகைகளுக்கும் பேட்டியளித்துக் கொண்டிருக்கும் வடமாகாண முதலவரும் ஆயர்களும் உட்பட வடமாகாண சபையினர் அனைவரும் தமிழ் மக்கள் மீது அரசியல் சவாரி செய்து வருகின்றனர்.

மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள், பொறுப்புக்களிலிருந்து தாம் தப்பித்துக்கொள்வதற்கு அரசு மீது குற்றம் சுமத்

19 ஆம் பக்கம் பார்க்க

## விவசாய நூல் வெளியீடு

(கொழும்பு)



பாரம்பரிய விவசாய நுண்ணறிவினை வாழ்வாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தும் நோக்கிலான அணுகுமுறை என்ற நூலினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டு வைத்தார்.

கொழும்பு தேசிய நூலக ஆவண காப்பக அரங்கத்தில் இந்நூல் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

துரைசுவாமி குமரன் தங்கராசாவினால் ஆக்கப்பெற்ற இந்நூல் பாரம்பரிய விவசாயத்தை நுண்ணறிவின் மூலமாக துறைசார்ந்தோரது வாழ்வாதாரத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். குடா நிலத்தடி நீரில் நைத்திரேற் செறிவு அதிகம்

### ஆய்வில் வெளிவந்தது தகவல்

(கொழும்பு)

விஞ்ஞானரீதியான ஆய்வில் யாழ். குடாநாட்டு குடிதண்ணீர் அருந்துவதற்கு உகந்ததல்ல என்றும், மாறாக இரணைமடு குடிதண்ணீர் குடிப்பதற்கு உகந்த நைத்திரேற்று அளவை கொண்டது என்பது விஞ்ஞானரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். - கிளிநொச்சி குடிநீர் விநியோக பொருளியல் நிபுணரும் பேராசிரியருமான இ.நந்தகுமாரன் தெரிவித்தார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் யாழ். - கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டம் தொடர்பான கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் ஒரு லீற்றர் தண்ணீரில் 14.5 மில்லிலீற்றர் நைத்திரேற்று உண்டு. ஆனால் இரணைமடுக் குளத்தின் நன்னீரில் 6.10 மில்லிலீற்றர் நைத்திரேற்று மட்டுமே உள்ளது. ஒப்பீட்டளவில் பல மடங்கு நைத்திரேற்று அளவு இரணைமடு குளத்தில் குறைவாக உள்ளது.

ஐ.நா. சாசனத்தில் 40 மில்லிலீற்றருக்கு குறைவான அளவு

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே
கல்விமுரசின் பயிற்சிப் பரீட்சை
வெவ்வேறு தரங்களுக்கான வினாத்தாள்

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 10 இலட்சம் ரூபா காசோலை மோசடி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கற்கோவளப் பகுதியில் வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி பத்து இலட்சத்து 25 ஆயிரம் ரூபா காசோலையை மோசடி செய்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ள தாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து புலனாய்வுப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் மேலும் பல தகவல்கள் தெரியவந்துள்ளதாக தெரிவித்த அவர்,

பெண் ஒருவரே இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார். எனினும், அப்பெண் கைது செய்யப்படவில்லை. அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும் கடந்த மூன்றாம் திகதி கரவெட்டிப் பகுதியில் மற்றுமொரு காசோலை மோசடிச் சம்பவம் ஒன்று பதிவாகியிருப்பதாகவும் தெரிவித்த அவர், சுமார் ஒன்பது இலட்சம் ரூபா காசோலை மோசடிச் சம்பவம் ஒன்றும், முறைப்பாட்டுக்காரர் மற்றும் சந்தேக நபர் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் குறிப்பிட்டார். இச் சந்தேக நபரும் கைது செய்யப்படவில்லை. புலனாய்வு நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். (பா)

# அபிவிருத்திக் குழு தெரிவு

(வடமராட்சி)

கல்வியமைச்சின் புதிய சுற்று நிருபத்திற்கு அமைய தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் புதிய பாடசாலை அபிவிருத்திக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பொதுக்கூட்டம் வித்தியாலய அதிபர் ஏ.சிவநாதன் தலைமையில், நடைபெற்றது.

வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஏ.பகீதரன் இப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு:

ஏ.சிவநாதன் (அதிபர்) தலைவராகவும், இலங்கை போக்குவரத்துச் சபை வடமாகாண உதவி விநியோக அதிகாரசபை களஞ்சியக் காப்பாளர் பொன். கதிர்காமநாதன் செயலாளராகவும், பெற்றோர்களான ஏ. ஆழ்வாப்பிள்ளை, எம்.நவரத்தினராசா, திருமதி எஸ்.பத்மலோஜினி, பழைய மாணவர்களான எஸ்.திருச்செல் வம் கே. சண்முகநாதன், ஆசிரியர்களான என்.சிவலிங்கம், ஆர்.இராஜேந்திரம், ஏ.பிறைசூடி, திருமதி ஏ.கார்த்திகேசு ஆகியோரும்,

கணக்குப் பரிசோதகராக என்.சோதிரூபனும் தெரிவு செய்யப்பட்டனர். (01)

# பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு திறன்விருத்தி பயிற்சி நெறி

பெண் தொழில் முயற்சியாளருக்கான தொழில் முயற்சியாண்மை திறன் விருத்தி பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது.

தொழில் முயற்சியொன்றை ஆரம்பிக்க விருப்பமுள்ள பெண் முயற்சியாளரின் தொழில் முயற்சியாண்மைத் திறனை விருத்தி செய்வதற்கும், தெரிவு செய்த தொழிலைச் சிறந்த முறையில் கொண்டு நடத்துவதற்கான முகாமைத்துவத்திறனை விருத்தி செய்வதற்குமான பயிற்சி நெறியானது யாழ்.மாவட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் எதிர்வரும் மே 5 ஆம் திகதி முதல் மே 9 ஆம் திகதி வரை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் பெண் தலைமைத்துவமுடையோர், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர் மற்றும் இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட, தொழில் முயற்சியை ஆரம்பிக்க விருப்பமுள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியின் பின்னர் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான மேலதிக உதவிகளும் வழங்கப்படும்.

எனவே மேற்குறித்த பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் பெண் தொழில் முயற்சியாளர்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# நிர்வாகிகள் தெரிவு

இலங்கை அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்க நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவுசெய்யபபட்டுள்ளனர்.

எஸ்.கதிரமலை தலைவராகவும், எஸ்.சந்திரலங்கம் உபதலைவராகவும், ஸ்ரீ.இரகுநாதன் செயலாளராகவும், எஸ்.கணேசன் உபசெயலாளராகவும், எஸ்.ஸ்ரீகண்ணன் பொருளாளராகவும், எஸ்.கே.சற்குணம் கணக்காய்வாளராகவும், ஏ.என்.எஸ். திருச்செல்வம், திருமதி எஸ். உருத்திரகுமாரன் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (01)

## சிறுவிளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு; பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

□ □ □ □

### சிறுநீரகம் தேவை

B+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தொடர்பு : 0750979195 (C/3399)

# புதிய அதிபர் பதவியேற்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் புதிய அதிபராக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவதயாளினி தேவராஜா பொறுப்பேற்றுள்ளர்.

இவரின் புதிய பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை தேவாலயத்தில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை போதகர் அருட்திரு கே.எம். றெஜினோல்ட் ஈஸ்வரன் அடிகளார் தலைமையில் ஆராதனைகள் இடம்பெற்றன.

இவ்விசேட ஆராதனைகளில் கலந்து கொண்ட புதிய அதிபர் தேவதயாளினி தேவராஜா ஊர்வலமாக பாடசாலை வரை அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சம்பிரதாயபூர்வமாகப் பதவியேற்றார்.

பாடசாலைக்கு திறமைமிக்க தகுதியான செயற்திறனுள்ள அதிபரை நியமித்தமைக்காக பிரதேச கல்வியியலாளர்கள், பாடசாலைச் சமூகத்தினர் கல்வித் திணைக்களத்திற்கு நன்றி தெரிவித்துள்ளனர். (01)

# காட்டுமலை கந்தசுவாமி கோயிலில் சித்திரைப் புத்தாண்டு விசேட பூசை

(அச்சுவேலி)

அச்சுவேலி அருள்மிகு நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் சித்திரைப் புத்தாண்டு தின விசேட பூசை வழிபாடுகள் புத்தாண்டு தினத்தன்று திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு உதயோற்சவப் பூசைகளுடன் ஆரம்பாகி வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து முருகப்பெருமான் வீதியுலா வரும் திருக்காட்சியும் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து முற்பகல் 10.00 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டு மூலஸ்தான வேற்பெருமானுக்கு 1008 சகஸ்ர சங்காபிசேகமும் இடம்பெறவுள்ளது.

எனவே முருகன் மெய்யடியார்களை அபிசேக நிகழ்வுகளில் கலந்து கொண்டு பெருமான் அருட்கடாட்சத்தை வேண்டி மகிழுமாறு வேண்டப்படுகின்றனர். (03)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1050

திகதி 10.04.2014

வெற்றி எண்கள்: 18 25 28 46 — ஆங்கில எழுத்து: A

ஜக்பொட் பரிசு ரூ. 2,67,51,960/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,67,51,960/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 50,000/= | ரூ. 7,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 260 | 1,000/= | ரூ. 2,60,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 439 | 1,000/= | ரூ. 4,39,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11754 | 60/= | ரூ. 7,05,240/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6129 | 40/= | ரூ. 2,45,160/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 153586 | 20/= | ரூ. 30,71,720/= |
| ஆங்கில எழுத்து | 22398 | 20/= | ரூ. 4,47,960/= |
| | | மொத்தம் ரூ. | 68,69,080/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| காலி | 706051224-2-42 |
| புன்னார் | 706051077-0-30 |
| கொழும்பு | 706055666-4-14 |
| கம்பஹா | 706046103-5-05 |
| கேகாலை | 706050856-7-37 |
| களுத்துறை | 706041398-3-03 |
| பொலன்னறுவை | 706054716-5-05 |
| கொழும்பு | 706055065-8-48 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,69,080/=


எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 27,052,520/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.04.21 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3388)


# மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் மாவட்ட மட்டக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் ஆடை வடிவமைத்தல், அழகியல், மனையியல் கண்காட்சி யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

நேற்றுக்காலை 11.00 மணியளவில் ஆரம்பமான இக்கண்காட்சியினை யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மகளிருக்கான ஆடை வடிவமைத்தல், ஐசிங்கேக், கைவினை, புத்தாக்கம் மற்றும் மனையியற்துறை தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர்களின் பயிற்சியின் பயனாக உருவாக்கப்பட்ட பொருட்களின் காட்சியே நேற்று இடம்பெற்றது.

இதில், யாழ்.மத்திய கல்லூரி அதிபர், கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ)

# ரெலிக்கொம் வயர்கள் திருட்டு


ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமான வயர்கள் திருடர்களினால் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் புலனாய்வு மேற்கொண்டு வருவதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். (பா)

# குளத்தின் நீர்மட்டம் வற்றியதால் நாகபடுவான் விவசாயிகள் அவதி

## கிளி.மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 9 பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர் மட்டம் 2 அங்குலம் மாத்திரம் இருப்பதால் விவ்சாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.விகிர்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள 10 அடி கொள்ளளவுடைய மேற்படி குளத்தின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதுடன், இன்னும் ஓரிருவாரத்தில் குளம் வறண்ட நிலமாக மாற்றமடையவுள்ளது.

அக்குளத்தினை நம்பி 367 விவசாயிகள் காலபோக நெற்செய்கையினை மேற்கொண்ட போதிலும் மழையின்மையினால் அதனை அறுவடை செய்யமுடியாதுள்ளதாகவும் இக்குளத்தின் நன்னீர் மீன்பிடியினை நம்பி 86 குடும்பங்கள் இருக்கின்றபோதும் இக் குளம் முற்றாக வற்றுவதினால் மீன்பிடியாளர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்றார்.


மேலும், இப்பகுதியில் வசிக்கும் மக்கள் கால்நடைகளை வளர்த்து வருகின்றமையினால் கால்நடைகளுக்கான உணவு மற்றும் அவற்றிற்கான நீர் என்பன சவால் நிறைந்ததாகக் காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மின்னல் தாக்கியதால் வீடு எரிந்து நாசம்

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடியுடன் கூடிய மழைபெய்ததால் கடந்த செவ்வாய்க்கிழமை அரசகுளம் என்னும் இடத்தில் உள்ள வீடொன்றின் மீது இடிமின்னல் தாக்கியதால் வீடு எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது கடும் வெப்பம் ஏற்பட்ட நிலையில் பி.ப. 2 மணியளவில் கனத்த மழை பெய்துள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்த வேளையில் திடீரென ஓமந்தை அரசகுளம் பகுதியிலுள்ள ஈஸ்வரநாதன் தவரூபன் என்பவரின் வீட்டின் மீது இடிமின்னல் விழுந்துள்ளது. இச் சந்தர்ப்பத்தில் வீட்டில் யாரும் இல்லாததனால் உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை எனவும் வீட்டிலிருந்த விலை மதிக்கக்கூடிய பொருட்களும் முக்கிய ஆவணங்களும் தீயில் கருகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (70)

## முன்பள்ளிக் கட்டடத்திற்கு முல்லையில் அடிக்கல் நாட்டுவிழா



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு தேவிபுரம் "செந்தமிழ்" முன்பள்ளிக்கு வேள்ட் விஷன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முன்பள்ளிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அடிக்கல்லினை வடமாகாண கல்வி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எஸ்.சிவநாதன் நாட்டிவைத்தார்.

மேற்படி முன்பள்ளியினை அமைப்பதற்கு வேள்ட் விஷன் நிறுவனம் கட்டட உபகரணங்களை வழங்கவுள்ளதுடன், நிர்மாண வேலைகளை அந்த முன்பள்ளி சார் நலன் விரும்பிகள் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அடிக்கல் நாட்டு விழாவில் வேள்ட் விஷன் அதிகாரிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## விஞ்ஞானப் பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மகிந்தோதய திட்டத்தின் கீழ் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் க.பொ.த.(உ/த) 2016 ஆம் ஆண்டிற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்போது கணித விஞ்ஞான வர்த்தகம் ஆகிய பிரிவுகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இந்த வகுப்புக்களில் தகமையுடைய மாணவர்களை இணைந்து கொள்ளுமாறும் கோட்டக்கல்வி சமூகம் அறிவித்துள்ளது. இதற்காக புதிய விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்டத்தில் மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

(மன்னார்)



மன்னார் மாவட்டத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 85 மாணவர்களுக்கு "மஹபொல" புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மேல், வடமாகாணசபை உறுப்பினர் றிப்கான பதியுதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




## இந்தியா கைவிடாது... அமெரிக்கா கைவிடாது... தமிழர்களைச் சனியனும் கைவிடாது....

'சாய்.... என்ன மாதிரிச் சனங்களின்ரை காதில பூவை வைக்கிறாங்களப்பா...' என்று கவலைப்படுகிறார் ஒரு நண்பர்.

என்னுடைய கவலை வேறு. 'இந்தச் சனங்கள் தங்களின் காதுகளில் ஓட்டைபோட்டு மற்றவர்கள் பூவைச் செருகுவதை வலு இன்பமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று.

இல்லையென்றால், 'இந்தியா வரும் – உதவும்' என்றும் 'அமெரிக்கா வரும் – உதவும்', 'அமெரிக்காக்காரன் விடமாட்டான்' என்றும் 'ஐ.நா. வரும் – உதவும்' என்றும் எத்தனை புலுடாக்களை இந்தத் 'தமிழ் மண்ணாங்கட்டிகள்' [தமிழ்த்தலைமைகள் என்றும் பாடம்] சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இப்படி வந்த இந்தியாவைத்தான் நாங்கள் எப்படிக் கையாண்டனாங்கள்? தமிழருக்கு ஆதரவாக வந்த இந்தியாவை சிங்களத்தலைமைக்கு – கொழும்பு அரசாங்கத்துக்கு – ஆதரவாக மாற்றிய பெருமை எங்களைத் தவிர வேறு யாருக்குண்டு?

இதுக்குப் பிறகு, நோர்வேயின் அனுசரணையோடு வந்த சமாதானப் பேச்சு வார்த்தையைக் கூட முறிச்சுக் குப்பைக் கூடைக்குள் போட்டு விட்டுப் பதுங்குகுழிக்குள் இறங்கிச் சவக்குழிக்குப் பலியாகிச் சுடலை [முள்ளிவாய்க்கால்] வரை போனோமே....!

விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த ஒரு அமைப்பை உலகம் தடைசெய்து ஒடுக்குமுறை அரசை ஆதரித்தது என்றால்... உலகம் எப்படிச் சிந்திக்கிறது? என்று எங்களுக்கு விளங்கியிருக்க வேண்டும்.

இதையெல்லாம் கணக்கில் எடுக்காமல் உலகத்தைத் தப்பாய்க் கணக்குப் போட்டு, வந்த வினையையே அறுவடை செய்தோம். அந்த அறுவடையே பிணவாடையாக இருந்தது.

இதிலிருந்து நாங்கள் புரிந்து கொள்ள வேண்டியதாக இருந்தது என்ன?

அமைதியாக வாழ விரும்பினால் சுதந்திரமாக நடமாடலாம். வெளிப்படையாகத் திரியலாம். காயங்களும் வலிகளும் இல்லாமல் சந்தோசமாக வாழலாம்.

அமைதியைக் குலைத்தால், அமைதிக்கெதிராகச் சிந்தித்தால் நெருக்கடிகளும் பிரச்சினைகளுமே நம்மைச் சூழும். சொந்த வீட்டிற்கூட இருக்க முடியாது. அமைதிக்கெதிராகச் சிந்தித்தால் அது நம்முடைய மடியினுள்ளே பாம்பைப் பிடித்து நாமே விட்டமாதிரித்தான்.

ஆனால், ஒடுக்குமுறையும் இனப்பாரபட்சமும் அரசியல் அந்தஸ்தும் இல்லாமல் எப்படி நாங்கள் அமைதியாக இருக்க முடியும் என்று நீங்கள் கேட்பதும் முணுமுணுப்பதும் தெரிகிறது.

இந்தக் கேள்விகளும் முணுமுணுப்பும் எனக்குள் மட்டுமில்லையா?

இந்தக் கேள்விகளுக்கான – இந்தப் பிரச்சினைகளுக்கான பதில்களை நாங்கள் யாரிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதே என்னுடைய கேள்வி.

மீண்டும் அந்நியர்களிடம், அந்நியச் சக்திகளிடம்... தானா!

அப்படியென்றால் கதை கந்தல்தான். மீண்டும் கோவிந்தாதான். மீண்டும் மீண்டும் வேதாளம் முருங்கையில்தான்...

வன்னியில் மூன்று இலட்சம் சனங்கள் அவலப்பட்டுக்கொண்டிருந்த போது 'வணங்கா மண் கப்பல் இந்தா வருது, அமெரிக்கப்படைகள் அந்தா வருது' 'ஐ.நா.வின் மீட்பு அணிகள் கிட்ட வந்து கொண்டிருக்கு' 'பாரதிய ஜனதாவின் வெற்றி உறுதி என்றால் புலிகளின் வெற்றியும் உறுதி' 'அமெரிக்காவில் ஒபாமாவின் வெற்றி – ஈழத்தில் எங்களின் வெற்றி' என்று எத்தனை புலுடாக்களையெல்லாம் விட்டார்கள். மன்னிக்கவும், இப்படி எத்தனை பூக்களை இந்தச் சனங்களின் காதுகளில் செருகினார்கள்.

இப்படிப் பூக்களைச் செருகிச் செருகியே ஒரு அம்பாரம் பூக்கொத்து தமிழர்களின் காதுகளில் இப்பொழுது இருக்கிறது. போதாக்குறைக்கு காதுகளில் துளைபோட்டுப் பூவைச் செருகும் அளவுக்கும் நிலைமை முன்னேறியிருக்கிறது.

உலகம் அறத்தின்படி இயங்குகிறதா? அல்லது நலன்களின்படி இயங்குகிறதா?

அறத்தின்பாற்பட்டு உலகம் இயங்கினால், உலகத்தில் கண்ணீரோடும் கம்பலையோடும் அலைகின்ற மக்களுக்கெல்லாம் கௌரவமான தீர்வும் கண்ணியமான வாழ்க்கையும் நீதியும் எப்பவோ கிடைத்திருக்கும்.

நலன்களின் தேவைக்கேற்றமாதிரி உலகம் இயங்கிக் கொண்டிருக்கிற படியால்தான் அந்த நலன்களின்படி நீதியும் நியாயமும் நிறுத்துக் கொட்டப்படுகிறது. யார் யாரெல்லாம் – எங்கெங்கேயெல்லாம் நலன்களுக்கு வாய்ப்பளிக்கக் கூடிய நிலை இருக்கிறதோ அதன்படியே இந்த வல்லாதிக்கச் சக்திகளின் தராசு நிறுக்கும். அப்படித்தான் அது நிறுத்துக்கொண்டிருக்கிறது.

இதெல்லாம் மிகச் சாதாரணமாகவே எல்லோருக்கும் தெரிந்த – தெரிய வேண்டிய அரசியல் அனுபவமும் அறிவும்.

இதற்கெல்லாம் அரசியலில் அப்புக்காத்துமாராகவோ ஆய்வாளராகவோ இருக்க வேண்டியதில்லை.

நல்லாய்த்தானிருக்கிறது, இந்தியா எங்களைக் கைவிடாது... அமெரிக்கா எங்களைக் கைவிடாது.... ஐ.நா. எங்களைக் கைவிடாது... சனியனும் தமிழர்களைக் கைவிடாது... என்ற கதை.

உன் கவலைகள் உன்னை அழுத்தும் போது, அவசியமானால் ஓய்வெடுத்துக் கொள். ஆனால் ஒருபோதும் மனம் தளராதே. - பொன்மொழி.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com


## இனிய தமிழ் மக்களே!

நம் தமிழ்ச்சமூகத்தில் பொதுவாக, நிகழ்வுகளின் காரணிகளை, வரலாற்றுப் பின்புலங்களை, சாதக பாதகங்களை – அவற்றின் சமகால, எதிர்கால விளைவுகளை, தருக்கரீதியாக அவதானித்து நம்மை, நம் எதிர்வினைகளை வளர்த்தெடுத்துக் கொள்வது என்பது நடப்பதில்லை.

நிதானம், சமனத்தன்மை போன்றவை சார்ந்த அணுகுமுறைகளெல்லாம் நமக்கு ஒத்துவருவதில்லை. எடுத்ததற்கெல்லாம் உணர்ச்சிகரமாக வீறுகொண்டு எழுவதிலேயே குறியாக இருக்கிறோம். மேலும் மேலும் அடிவாங்கி விழ நேர்ந்தாலும் வீறுடன் இருப்பதாகச் சும்மாவேனும் காட்டிக்கொள்ளும் புளகாங்கிதம் போதும் நமக்கு.

வன்முறை நமக்கு வெற்றியைத் தரவில்லை; வன்முறையை நம்பிச்சென்று நாம் பட்ட அவலங்கள் ஏதோ பல நூற்றாண்டுகளுக்கு முந்திய கதை அல்ல, இதோ நான்கு வருடங்களுக்கு முன்புதான் நடந்தது. அந்த வாதையும் பதற்றமும் இன்னும் வடியாமலேதான் பெரும்பான்மைத் தமிழ்மக்கள் இருக்கிறார்கள்.

திரும்பவும் இப்போது தமிழ்த் தரப்பிலிருந்து யாரேனும் வன்முறையைக் கையிலெடுத்து நிலைமைகளைக் குழப்ப நினைத்தால், உடனடியாக நாம் அதற்குக் கண்டனம் தெரிவித்து நிறுத்தச் சொல்ல வேண்டியதுதானே முறை? நமது சமூகத்தின் – தமிழ் இளைஞர்களின் பாதுகாப்பை யோசிக்கும் தலைமையும் அறிஞர்களும் அப்படி நடந்துகொண்டால்தானே புத்திசாலித்தனம்!

மாறாக, “அரசாங்கமே உன் பொய் நாடகத்தை நிறுத்து” என்று ஏதோ நம் சமூகமே அரசாங்கத்திற்கு எதிராகத்தான் கொதித்துக் கொண்டு இருக்கிறது எனக் காட்ட முற்படுவது, அரசு தன் கெடுபிடிகளை அதிகப்படுத்துவதற்குத் தூண்டிவிடும் நாலு வருடங்களுக்கு முந்திய அதே பழைய போராட்ட உத்தியல்லவா!

நாம் எமது சமூகத்தினுள் முளைவிடும் வன்முறையை (அது அரசே இட்டுக்கட்டியதாக வேண்டுமென்றாலும் இருந்துவிட்டுப் போகட்டுமே!) அலட்சியப்படுத்திவிட்டு அரசைக் கண்டிப்பதிலேயே குறியாக இருப்பது, வலிந்து எதிர்த்தரப்பை துவந்த யுத்தத்திற்கு அழைக்கும் போக்காகி விடாதா!

இதற்கு, உடனேயே, “யுத்தத்தை உண்டாக்குபவர்களும் தூண்டுபவர்களும் அவர்கள்தான்” என்று வீரவசனம் பேசி பழையபடி ஆனாவிலிருந்து எல்லாவற்றையும் ஆரம்பிக்கும் விறுத்தத்திலா நமது மக்களின் யதார்த்த நிலைமை இருக்கிறது?

மக்கள் உள்ள பகுதியில் வைத்து எதிரியை மறைந்திருந்து தாக்கினால், அவன் பதிலடியாக அந்த மக்களைத் தாக்குவான். அப்போது அந்த மக்கள் எல்லோரும் நமக்கு ஆதரவாக மாறி விடுவார்கள். நமது போராட்டம் வளரும் என்கிற கெரில்லா உத்தியைப் பாவிக்கும் காலத்திலா நாம் இருக்கிறோம்?

எந்த நம்பிக்கையில் மீண்டும் தமிழ்மக்களை அரசுக்கெதிராக கொதிக்க வைத்து சவாலுக்குச் சவால் நிலைமையை உருவாக்குகிறார்கள் இந்தத் தலைவர்களும் ஊடகங்களும்? நமக்கு ஏதேனும் ஒண்டென்றால் அமெரிக்கா பாய்ந்து வந்து காப்பாற்றும் என்றா?

இன்றும், நம் தரப்பிலிருந்து யாராவது அரசுக்கு எதிராகப் பேசினால், தாக்கினால் நிலைமைகளைச் சீரழிக்கும் அதன் பின்விளைவை உணராமல், உள்ளுக்குள் வெறுமனே சந்தோசமடையும் “தமிழ்ரோச” குணத்தை வைத்துக்கொண்டு இங்கே என்ன செய்யப் போகிறோம்?

இந்தத் தலைவர்களும் ஊடகங்களும் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள்? எதை இங்கே மீண்டும் மீண்டும் விதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவே மாட்டீர்களா, இனிய தமிழ் மக்களே!

- ஆசிரியர்.

# பொறியியலாளர்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்ய துரித ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் பொறியியலாளருக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் எதிர்வரும் ஆண்டுகளில் யாழ்ப்பாணம், கொழும்பு, களனி, மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் பொறியியல் பீடங்களை ஆரம்பிக்க உள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவி பேராசிரியர கனிஷ்கா ஹிரிம்புருகம தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பொறியியல் கற்கை ஆரம்ப நெறிக்கான ஸ்ரீலங்கா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (SLTC)த்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து மேற்கொள்ளப்படவுள்ள பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கு, பெருமளவில பொறியியலாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். புதிதாக திறந்து வைக்கப்படும் இந்த தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பொ்றியியல் பாடத்தைக் கற்க பெருமளவு மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி குமார ஹிரும்புருகம

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் உருவாக்கப்படவுள்ள கொழும்பு பல்கலைக்கழக பிரிவில் மாணவர்களுக்கு மேலதிகமாக தகவல் தொழில்நுட்பவியல் பாடநெறி கற்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

இதனிடையே உயர்கல்வி அமைச்சின் தகவலின் படி தற்சமயம் மொரட்டுவ, றுகுணு, பேராதெனியா மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் பொறியியல்துறை பீடங்கள் உள்ளன. மொரட்டுவ பல்கலைக்கழகம் வருடாந்தம் 125 சிவில் பொறியியலாளர்களையும் 100 தகவல்தொடர்பாடல் பொறியியலாளர்களையும் உருவாக்கின்றது. எனவே பொறியியல் பீடங்களுக்கான வசதிகளை மேலும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பல்கலைக்கழகங்களில் பிரயோக விஞ்ஞானம், கணனி விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் புள்ளிவிபரவியல், முகாமைத்துவ தகவல் தொடர்பாடல் உட்பட வேறும் பல கற்கைநெறிகள் கற்பிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# காலவரையறையற்ற பணிப்பகிஷ்கரிப்பு மருத்துவர்கள் எச்சரிக்கை

காலவரையறையின்றி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென கோரி இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர். மருத்துவர்களின் சேவை தொடர்பிலான முன்மொழிவுகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட போதிலும் அவை அமுல்படுத்தப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

இடமாற்றம், சம்பள உயர்வு, விடுமுறை போன்ற பல்வேறு விடயங்களுக்கு இந்த முன்மொழிவு அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என குறிப்பிடப்பட்டுள்ளது. தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் காலவரையறையின்றி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட நேரிடும் என அரசாங்க மருத்துவர் பேரவை அறிவித்துள்ளது.

# இளைஞர், யுவதிகள் பலிக்கடாவாக சொகுசு வாழ்க்கையாளரே காரணம்

## கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(கொடிகாமம்)

வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்பவர்களே யுத்தத்தை விரும்புவதுடன், அதற்காக இங்குள்ள இளைஞர், யுவதிகளை பலிக்கடா ஆக்குவதாகவும் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கே.எதிரிசிங்க தெரிவித்தார்.

கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவு சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

30 வருடங்களுக்கு முன்னர் சகோதரர்களாக ஒன்றுபட்டு நாட்டில் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் குடும்பங்கள் கொடிய யுத்தத்தினால் பிரிந்ததுடன், இன ரீதியாகவும் பிரிக்கப்பட்டோம்.

யுத்தத்தில் எவரும் வெல்லவில்லை. மாறாக நாட்டில் வாழ்ந்த அனைவரும் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டோம். யுத்தத்தினால் இரு தரப்பிலும் பலர் உயிர் இழந்தனர். தமிழ் மக்களாகிய நீங்கள் பெரும் துயரங்களை அனுபவித்தீர்கள்.

தற்போது சட்டவிரோதச் செயற்பாடுகள் பரவலாக இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளை களைய பொதுமக்களின் பங்களிப்பு பொலிஸாருக்கு அவசியமாகவுள்ளது. கசிப்பு உற்பத்தி, வீடுகளுக்குள் புகுந்து திருடுதல், சில இடங்களில் குழு மோதல்கள் என பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் தயாராகவுள்ளனர். இருப்பினும், பொதுமக்கள் போதிய ஒத்துழைப்பு வழங்காமையால் எம்மால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவதில்லை.

மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் தெரியப்படுத்தக்கூடிய வகையில், ஒவ்வொரு பிரிவிலும் உதவிப் பொலிஸ் பரிசோதகரின் மேற்பார்வையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், ஒவ்வொரு பிரிவிலும் 25 பேர் கொண்ட சிவில் பாதுகாப்புக் குழுவினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் பொலிஸாருக்கு உடனுக்குடன் தகவல்களை வழங்குவதற்காக கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் அலுவலகங்களிலும் அந்தந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் உதவிப் பரிசோதகரினதும் தொலைபேசி இலக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (11)

# அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் கொண்டு சென்றவருக்கு பிணை

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கைதான நால்வரில் ஒருவருக்கு 100,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், ஏனைய மூவரையும் தலா 100,000 பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து 384 பியர் ரின்கள், 750 மில்லிலீற்றர் சாராயம் 12 போத்தல்கள், 180 மில்லிலீற்றர் சாராயம் 500 போத்தல்கள் ஆகியவற்றை தனியார் பஸ் வண்டியொன்றில் கிளிநொச்சிக்கு கொண்டுசென்ற குற்றச்சாட்டில் குறித்த நால்வரும் கடந்தபுதன்கிழமை இரவு பரந்தன் சந்தியில் கிளிநொச்சி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், குறித்த பஸ் வண்டியை சோதனை செய்து அதிலிருந்த மதுபான வகைகளைக் கைப்பற்றினர்.

நால்வரில் ஒருவர் தான் குற்றவாளியெனவும் மற்றைய மூவரும் தாங்கள் சுற்றவாளியெனவும் நீதிமன்றத்தில் கூறினர்.

இந்நிலையில், குற்றத்தை ஒத்துக்கொண்ட நபருக்கு 100,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ஏனைய மூவரையும் தலா 100,000 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

இந்த வழக்கின் பூரண விசாரணை எதிர்வரும் யூன் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

**"சாத்திரி" எனப்படும் ஸ்ரீகௌரிபால் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவர். 1984ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து புலிகள் அமைப்பில் "சியாம்" என்கிற புனைபெயரில் இயங்கினார். புலிகள் அமைப்பில் வெடி பொருள் பிரிவில் பணியாற்றியதால் "சக்கை" என்கிற பெயரும் சேர்ந்து "சக்கை சியாம்" என பலராலும் அழைக்கப்பட்டார். புலிகளின் சர்வதேசப் பிரிவிலும் பணியாற்றி அதில் இருந்து வெளியேறிய பின்னர் பிரான்ஸ் நாட்டில் வசிக்கத் தொடங்கியதும் "சாத்திரி" என்கிற புனைபெயரில் பத்திரிகைத் துறையிலும் எழுத்துத் துறையிலும் வலம் வருகிறார்.**

காலையில் பேச்சுவார்த்தைகளின் போது மேசையில் புலிகள் தரப்பு தாங்கள் சமாதானத்திலும் பேச்சு வார்த்தையிலும் உறுதியாக இருக்கிறோம் வன்முறையில் எமக்கு விருப்பம் இல்லையென்று சர்வதேசத்திடம் கூறிவிட்டு, மாலையில் புலம்பெயர் தமிழர்களின் கூட்டங்களில் தமிழ்ச்செல்வன் உரையாற்றும் போது இனி வரப் போவதுதான் இறுதி யுத்தம். யுத்தம் மூலமே தீர்வு எனவே தமிழர்கள் அனைவரும் தாராளமாக நிதியை வழங்குங்கள் எமக்கு பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையில்லையென்று

அதேநேரம் பொட்டம்மானை இந்தியா உடனே தூக்கில் போட முடியாது. எனவே பல பிரபலமான வக்கீல்களை வைத்து வாதடியிருக்கலாம். ஆனால், மீண்டும் மீண்டும் பொட்டம்மானை இந்தியாவிடம் விசாரணைக்காக ஒப்படைக்குமாறு வைத்த கோரிக்கை புலிகளின் தலைமையால் நிராகரிக்கப் பட்டிருந்தது. இவையும் பேச்சு வார்த்தைகள் இறுக்கமடையக் காரணமாக அமைந்தது.

**கே.பி விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து ஏன் நீக்கப்பட்டார்?**


# "அவங்கள் விசரங்கள் கிடக்கட்டும்" என்று சர்வதேசத்தை அலட்சியப்படுத்தினர் புலிகள்

## சாத்திரி நேர்காணலிலிருந்து....

**புலிகளின் போதைப் பொருள் கடத்தல் எந்தெந்த நாடுகள் ஊடாக நடை பெற்றது என சொல்ல முடியுமா?**

ஆசியாவில் ஏன் உலகிலேயே மலிவாகவும், இலகுவாகவும் போதைப் பொருட்கள் கிடைக்குமிடமாக ஆப்கானிஸ்தான் விளங்குகிறது. இங்கு ஏற்றுமதிக்கெனவே போதைப் பொருட்களை பயிரிடுகிறார்கள். அமெரிக்க சோவியத் யூனியன் பனிக்கால யுத்தத்தின்போது ரஷ்ய இராணுவத்தினரிற்குள் பரப்புவதற்காக அமெரிக்க உளவமைப்பே இந்தப் போதைப் பொருள் உற்பத்தியினை ஆப்கானிஸ்தானில் ஊக்குவித்திருந்தனர்.

ஆப்கானிஸ்தான் மற்றும் ஆப்கான் எல்லையாக உள்ள பாகிஸ்தான் கிராமங்களில் உற்பத்தியாகும் போதைப் பொருட்களிற்கும். இமய மலைச் சாரலில்



KP Castro

இயற்கையாக விளையும் கஞ்சாவிற்கும் மேலை நாடுகளில் ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. அவை தரை மற்றும் கடல் வழியாக மும்பைக்கு கொண்டு வரப்பட்டு அவை சரக்கு கப்பல்கள் மூலம் மேற்கு நாடுகளிற்கு பயணமாகும்.

எண்பதுகளின் ஆரம்பத்திலேயே சிறிய அளவில் புளொட் அமைப்பும் புலிகளும் போதைப்பொருள் கடத்தலை தொடங்கியிருந்தாலும் 84 ஆம் ஆண்டு புலி உறுப்பினர்கள் சிலர் மும்பையை மையமாக வைத்து கடத்தலை தொடங்கிய பின்னரே பரவலடைந்தது. சாதாரண கப்பல்கள் மூலமாக போதைப்பொருள் கடத்தலானது தொடங்கப்பட்டது. பின்னர் அவர்களே சொந்தமாக கப்பல்களை வாங்கி உலகளாவிய ரீதியில் செய்யத் தொடங்கியிருந்தனர்.

இது பல குழுக்களாக இயங்கியது. அதில் தெற்கு புன்னாலைக் கட்டுவனை சேர்ந்த சிறி என்பவர் முக்கியமானவராக நேபாளத்தில் இருந்து இயங்கினார். ஒரு தடவை இந்திய எல்லைப் படையினருடன் நடந்த மோதல் ஒன்றில் கொல்லப்பட்டுவிட்டார் .

**இப்படியாக எத்தனை பேர் இறந்து போயிருப்பார்கள் என நினைக்கிறீர்கள்?**

நூற்றியிருபதிற்கும் அதிகமானவர்கள் இறந்திருப்பார்கள். புலிகளின் தலைமை அவர்களை மாவீரர்களாக அறிவித்திருக்காவிட்டாலும், புலிகளின் ஆயுதத் தேவைகளிற்காக போதைப் பொருள் வியாபாரத்திலும் ஆயுதக் கடத்தல்களிலும் ஈடுபடும்போது கடலில் இறந்து போனவர்களிற்காக அவர்களோடு சேர்ந்து இயங்கிய நண்பர்கள் சிலர் நிக்கோபர் தீவுக்கூட்டத்தில் மனிதர்களற்ற ஒரு சிறு தீவில் அவர்களிற்கு ஒரு நினைவிடம் எழுப்பி அதில் அவர்களது பெயர்களை பதிவு செய்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

**வெளிநாடுகளில் புலிகள் மீதான தடை ஏற்பட்டதற்கு, எவை காரணங்களாக இருந்ததாக கருதுகிறீர்கள்?**

புலிகளைத் தடைசெய்யும் எண்ணம் சர்வதேசத்தில் பெரியளவில் உருவாகக் காரணம் புலிகளின் கரும்புலித் தாக்குதலில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதும், தொடர்ந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்கள, தமிழ் ஆயுதம் தாங்காத அரசியல்வாதிகள் கொல்லப்பட்டதுடன், தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளை புலிகள் தரப்பே குழப்பியதுமே மிகப் பாரதூரமான குற்றங்களாக சர்வதேசம் பார்த்தது.

அது மட்டுமல்ல இறுதியாக நடந்த பேச்சு வார்த்தைகளின்போது இந்தத் தடைகளை நீக்கி சுதந்திரமாக பேச்சு வார்த்தையில் புலிகள் ஈடுபடுவதற்கு சர்வதேசமும் இந்தியாவும் இரண்டு விடயங்ளை நிறைவேற்றுமாறு புலிகளிடம் கேட்டிருந்தார்கள். அவையிரண்டையும் புலிகளின் தலைமை நிராகரித்து விட்டிருந்தது மட்டுமல்லாமல்

> **2001 ஆம் ஆண்டு புலிகளின் பெரு வெற்றிக்குப் பின்னர் அதற்குள் எழுந்த அதிகார போட்டிகள் காரணமாக புலிகளின் தலைமையோடு அருகாகவும், நெருக்கமாகவும் தலைவரை புகழ்ந்து கொண்டு இருந்தவர்களின் கைகளிற்கு அதிகாரங்கள் கை மாறத் தொடங்கியிருந்தது. இந்து புகழ்ச்சியானது பிரபாகரன் என்பவர் தலைவர் என்பதைத் தாண்டி தேசியத் தலைவர், சூரியத்தேவன், முருகன் என்று கட்டவுட்டுகளாகவும் கவிதைகளாகவும் பாடல்களாகவும் வெளிவரத் தொடங்கியுமிருந்தது.**

உரையாற்றுவார்.

அப்போது கைதட்டல் வானைப் பிளக்கும். இப்படிப் பேசவேண்டாம் வெளிநாட்டு புலனாய்வு பிரிவுகள் இவற்றை பதிவு செய்யும் என்று பல தமிழ் பத்திரிகையாளர்கள் தமிழ்ச்செல்வனிடம் எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அதற்கு அவரின் பதில் "அவங்கள் விசரங்கள் கிடக்கட்டும்" என்பதாகவே இருந்தது. இதனால்தான் சர்வதேசம் புலிகளிடம் கடுமையாக நடந்து கொள்ளவேண்டி வந்தது.

**சர்வதேசமும் இந்தியாவும் புலிகள் மீதான தடையை எடுப்பதற்கு இரண்டு விடயங்களை முன் வைத்ததாக கூறினீரகளே, அவை என்ன?**

பேச்சுவார்த்தை காலத்தில் புலிகளோடு அதிகார பூர்வமாக சர்வதேச தரப்பில் ஒரு குழு பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருந்த போது இன்னொரு குழுவினர் புலிகளின் இன்னொரு வெளிநாட்டு பிரிவினருடன் இரகசியமாக நோர்வேயில் பேச்சுவார்த்தை ஒன்றையும் நடாத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் புலிகளிடம் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர். முதலாவது கரும்புலிகள் அமைப்பை முற்று முழுதாக கலைத்து விடவேண்டும். இரண்டாவது வான் புலிகள் அமைப்பை கட்டியெழுப்பும் முயற்சிகளை தற்காலிகமாக கைவிடவேண்டும் என்பதே. இந்தக் கோரிக்கைகளை புலிகளின் தலைமை மறுத்து விட்டிருந்தது.

அடுத்ததாக உலக நாடுகளில் இருந்து புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு முதலாவதாக இந்தியா தனது தடையை நீக்கவேண்டும். அதற்கு ராஜீவ் காந்தியின் கொலை ஒரு பெரும் தடையாகவும், இந்தியாவிற்கு பெரிய கௌரவப் பிரச்சினையாகவும் இருந்தது. புலிகள் மீதான இந்தியாவின் தடையை நீக்குவதற்கு பொட்டம்மானை தம்மிடம் ஒப்படைத்து விடுமாறு இந்திய அரசு சார்பில் கோரிக்கை வைத்தார்கள். பொட்டம்மானை ஒப்படைத்ததன் பின்னர் தலைவர் பிரபாகரனை இந்தியத் தரப்பு கேட்கக் கூடாது என்று எழுத்து மூலம் தரவேண்டும் என்றும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டவர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர்.

இந்த விபரங்களும் புலிகளின் தலைமைக்கு அறிவிக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையும் சுவரில் எறிந்த பந்தைப் போல புலிகளின் தலைமையால் நிராகரிக்கப்பட்டு திரும்பி வந்ததும் பெரும் பின்னடைவாக அமையக் காரணமாக அமைந்தது.

**விடுதலைப் புலிகளின் முக்கிய தூண்களில் ஒருவரான பொட்டம்மானை, இந்திய அரசு சரணடையச் சொல்வதை எந்த விதத்தில் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கருதுகிறீர்கள்?**

ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைக்காக ஆயிரக் கணக்கான இளம் சந்ததியினர் மாவீரர்களாகியும் தங்கள் பெயர்களே வெளி உலகத்திற்கு தெரியாமல் பல கரும்புலிகள் உயிரைக் கொடுத்தும் உள்ளனர். அதே இனத்தின் விடுதலைக்காக அந்த மக்களின் எதிர்காலத்திற்காக பல தடைகள் நீங்கி அதற்காக இன்னொரு பாதை திறப்பதற்காகவும் பொட்டம்மானை இந்தியாவிடம் விசாரணைக்காக ஒப்படைத்திருப்பதில் தவறேதும் இல்லை என நினைக்கிறேன்.

2001 ஆம் ஆண்டு புலிகளின் பெரு வெற்றிக்குப் பின்னர் அதற்குள் எழுந்த அதிகார போட்டிகள் காரணமாக புலிகளின் தலைமையோடு அருகாகவும், நெருக்கமாகவும் தலைவரை புகழ்ந்து கொண்டு இருந்தவர்களின் கைகளிற்கு அதிகாரங்கள் கை மாறத் தொடங்கியிருந்தது. இந்தப் புகழ்ச்சியானது பிரபாகரன் என்பவர் தலைவர் என்பதைத் தாண்டி தேசியத் தலைவர், சூரியத்தேவன், முருகன் என்று கட்டவுட்டுகளாகவும் கவிதைகளாகவும் பாடல்களாகவும் வெளிவரத் தொடங்கியுமிருந்தது.

அதேநேரம் போராட்டத்தையும் மக்கள் விடுதலையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தலைமைக்கு துதி பாடாமல் தூரமாக இருந்து இயங்கிக் கொண்டிருந்தவர்கள் பலரும் ஓரம் கட்டப்பட்டனர். பரப்புரை, வர்த்தகம், நிதி, வெளிநாட்டு அரசுகள் அமைப்புக்களுடனான தொடர்புகள், ஆயுதபேரம் வாங்குதல் வழங்கல், ஆவணங்களை தயாரித்தல், மருத்துவம் மற்றும், மருந்து தொழில் நுட்ப உபகரண பிரிவு என பல குழுக்களாக இயங்கிய வெளிநாட்டு பிரிவுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து அதனை அனைத்துலக செயலகத்தின் கீழ் கொண்டு வந்து ஒரு நிறுவனமயமாக்கல் முறையாக்கி புலிகளின் முதுகெலும்பு என சொல்லக் கூடிய வானளாவிய அதிகாரங்கள் அனைத்தையும் கஸ்ரோ பொறுப்பெடுத்திருந்தார்.

**கே.பியை தொடர்ந்து வெளிநாட்டு நிருவாகப் பொறுப்புக்கு தலைமையேற்ற கஸ்ரோவின் செயற்பாடுகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஒரு நாளின் 24 மணி நேரத்தில், சில நேரங்களில் 20 மணிநேரங்கள் விழித்திருந்து இயங்க வேண்டியதுதான் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவு. ஆனால் ஒரு நாளைக்கு வெறும் அரை மணி நேரம் மட்டுமே எழுந்து உட்காரக் கூடிய கஸ்ரோவிடம் அனைத்துலக செயலக பொறுப்பு போய் சேர்ந்ததும், அவரின் கீழான அனைத்து பொறுப்புக்களும் புதியவர்களிடமும் புலிகள் அமைப்பால் வெளிநாடுகளிற்கு அனுப்பி கல்வி பயின்றவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது.

கணனித் தொழில் நுட்ப அறிவும், ஆங்கில அறிவும் இருந்தால் ஆயுதங்களை வாங்கி விடலாமென புதியவர்கள் நினைத்தார்கள். நவீன ஏவுகணைகள் வாங்குவதற்காக புதிய ஆயுத முகவர்களை தேடிப் போனார்கள். ஒரு காலத்தில் போலி மனிதர் என பழைய கட்டமைப்பினர் ஒதுக்கி வைத்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பாதிரியாரையும் மீண்டும் தங்களுடன் இணைத்தார்கள். அவரும் பல ஆயுத முகவர்களை புதியவர்களிற்கு அறிமுகப்படுத்தினார். கஸ்ரோ தலைமையிலான புதியவர்கள் ஆயுத முகவர்கள் என நம்பி பேரங்கள் நடாத்திய அனைவருமே வெளிநாட்டு உளவமைப்புகளின் ஆட்களாக இருந்தனர். அவர்களால் இறுதியில் பணத்தையும் இழந்ததோடு, ஆயுதங்களை கொண்டு போய் சேர்க்கவும் முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக புலிகள் தரப்பில் ஆயுத பேரத்தில் ஈடுபட்ட அனைவரும் கைதாகி சிறைகளில் வாடுகிறார்கள்.

# சர்வதேச சுயாதீன விசாரணைக்கு விருப்பம் கொள்ளாத இலங்கையர்

## ஆய்வில் வெளிவந்த தகவல்

(கொழும்பு)

மனித உரிமை நிலைமைகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை நடாத்தப்படுவதனை இல்ங்கை மக்கள் விரும்பவில்லை என ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வெளியாகும் வர்த்தக சஞ்சிகையான எல்.எம்.டி என்னும் சஞ்சிகையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ஓர் சுயாதீன நாடு எனவும், விசாரணைகளை உள்ளக ரீதியாக நடாத்தப்பட வேண்டுமெனவும் மக்கள் விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை நிலைமைகள் குறித்து பலம்பொருந்திய நாடுகள் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.




விசாரணைகளில் பங்கேற்ற 95 வீதமான மக்கள் சர்வதேச சுயாதீன விசாரணைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். ஆய்வில் பங்கேற்ற மூன்றில் இரண்டான மக்கள் அரசாங்கம் மனித உரிமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

23 வீதமான மக்கள் மனித உரிமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதியாக சொல்ல முடியாது என குறிப்பிட்டுள்ளனர். எவ்வாறெனினும், அனைத்து இன மக்களும் ஒரே விதமாக நடத்தப்பட வேண்டுமென மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மனித உரிமை தேவைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும், அரசியல் தலையீடுகள் குறைக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இன மத முரண்பாடுகளை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளனர்,

# கூட்டமைப்பின் 3 உறுப்பினர்களை கைது செய்யுமாறு கோரிக்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த சிறி வர்ணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமசந்திரன், எம் ஏ சுமந்திரன் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆகியோரே கைது




செய்யப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக, சர்வதேச யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற பிரேரணைக்கு இவர்கள் அழுத்தம் கொடுத்ததாக ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த சிறி வர்ணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

# வேலைவாய்ப்பற்றோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

இலங்கையில் வேலை வாய்ப்பற்றிருப்போரின் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி வேலையற்றோரின வீதம் 4.1 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

புள்ளிவிபரத் திணைக்கள விபரங்களின் படி கடந்த வருடத்தில் இறுதிக் காலாண்டுப் பகுதியில் வேலைவாய்ப்பற்ற பெண்கள் 6.4 வீதமாகவும் ஆண்கள் 2.8 வீதமாகவும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிருகங்களின் இடத்தில் மனிதர்கள் வசித்தலாகாது

## சீறுகிறது பொதுபலசேனா



மிருகங்கள் இருக்க வேண்டிய பிரதேசத்தில் மனிதர்கள் இருக்கலாகாது என்று வில்பத்து சரணாலயப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் வீடுகளை நேரில் சென்று பார்வையிட்ட பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வில்பத்து சரணாலயத்தின் வடக்கு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் இந்த வீடுகளை நிர்மாணிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதியுதவி வழங்குவதாகவும் முசலி பிரதேச செயலாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த சரணாலயத்தின் வடக்கு பிரதேச காணிகளை பலவந்தமாகப் பிடித்து, அங்குள்ள காடுகளை அழித்து வருவதா கக் கூறி, பொது பல சேனா அமைப்பினர் குறித்த பிரதேசத்தைப் பார்வையிடச் சென்றுள்ளனர்.

அவ்வமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் உட்பட பலர், கடந்த செவ்வாயன்று மேற்படி பிரதேசத்துக்குச் சென்று அங்குள்ள பொதுமக் களைப் பார்வையிட்டதுடன், மிருகங்கள் இருக்க வேண்டிய பிரதேசத்தில் மனிதர்கள் இருக்கலாகாது எனக் குறிப்பிட்டார்.

இதன்போது, சிலாவத்துறை பொலிஸார், கடற்படையினர் மற்றும் இராணுவத்தினரும் பொது பல சேனா அமைப்பினரும் குறித்த பிரதேசத்துக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

# பொதுபலசேனாவின் செயற்பாடு அரசு மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பின் செயற்பாடுகள் சம்பந்தமாக அரசாங்கம் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடந்த சம்பவம் தொடர்பில் கொழும்பில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுபலசேனா அமைப்பு நடந்து கொண்ட அராஜகமான நடவடிக்கை தொடர்பில் அரசாங்கம் இதுவரை வாய்த் திறக்கவில்லை. ஜாதிக பல சேனா அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் புகுந்த பொதுபல சேனா அமைப்பினர் அதனை குழப்பினர். இந்தச் சம்பவத் திற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்கவேண்டும்.


இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் இரத்தம் சிந்தும் சூழ்நிலைகளை உருவாக்கும். பயங்கரவாதத்தில் இருந்து விடுதலை பெற்ற நாட்டிற்குள் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் வளர்ந்து வரும் நிலையில், மீண்டும் இனவாதத்திற்கு பாதை அமைக்கும் இப்படியான சம்பவங்களை அனுமதிக்க முடியாது.

பொதுபலசேனா இதற்கு முன்னர் பல முறை இவ்வாறு நடந்து கொண்டது. மேற்படி சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் செயற்படும் விதத்தை வன்மையாக கண்டிக்கிறோம். நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்கப் போவதாக முஸ்லிம் அமைச்சர்கள் கூறுகின்றனர். என்றோ ஒரு நாள் நாடாளுமன்றத்திற்கு வரும் இந்த அமைச்சர்கள், புதிதாக நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்க வேண்டியதில்லை.

முஸ்லிம் அமைச்சர்கள் அரசாங்கத்தின் சிறப்புரிமைகளை



யும் சலுகைகளையும் பெற்றுக் கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண முயற்சிப்பதில்லை. தீர்வைக் காண முயற்சிக்காத முஸ்லிம் அமைச்சர்கள், பிரச்சினையை வைத்து அரசியல் செய்ய முயன்று வருகின்றனர் எனவும் கபீர் ஹசீம் குற்றம் சுமத்தியுள்ளார்.



தமிழ் சிங்கள புதுவருடத்தின் நிகழ்வுகள் தொகுக்கப்பட்ட பாரம்பரிய அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தங்கல்ல கால்டன் இல்லத்தில் வைத்து சம்பிரதாய முறைப்படி நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. கலாசார அமைச்சினால் ஏறபாடு செய்யப்பட்ட இந்த நிகழவில் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ கலாசார அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்

# இலங்கை வீரர்கள் கௌரவிப்பு கூட்டமைப்பு புறக்கணிப்பு




(கொழும்பு)

உலக ருவென்ரி 20 கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கை அணி வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாடாளுமன்றில் நடைபெற்ற வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் வருகை தரவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு கிண்ணத்தை வென்ற இலங்கை அணி வீரர்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் அறிக்கைகளையும் வெளியிட்டனர்.

எனினும் அந்தச் சமயத்தில் கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினரும் அங்கு இருக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

# போதையில் சாரதிகள் கைது செய்ய பலூன்கள்

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புதுவருட காலத்தில் மதுபோதையில், வாகனம் செலுத்துவோரை கள நிலையில் பரிசோதித்து கைது செய்வதற்காக 60 ஆயிரம் பலூனகள் பொலிஸ் திணைக்களத்தால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சாரதிகள் மது போதையில் வாகனம் செலுத்துகிறார்களா என்று பரிசோதிப்பதற்காகவே இந்த பலூன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

# ஆஸிக்கான உதவித் தூதராக லக்ஷ்மன் ஹிலுகல நியமனம்



தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹிலுகல அவுஸ்ரேலியாவுக்கான பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்

எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி அவுஸ்ரேலியாவின் கான்பெராவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவருக்கான இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் கலைக்கப்பட்டதனை அடுத்து அதன் பணிப்பாளராக இருந்த லக்ஷ்மன் ஹிலுகல இரண்டு முறை தற்கொலை செய்ய முயற்சித்ததாக தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரியில் வாழ்வின் எழுச்சி

# புதுவருடச் சந்தை திறப்பு

## வடமாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு



(பூநகரி)

தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டுத் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் புதுவருட சந்தை பூநகரிப் பிரதேசத்தில் நடைபெற்றுவருகின்றது.

கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வைபவரீதியாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் சந்தையைத் திறந்துவைத்து வியாபார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் மக்களுக்கு குறைந்த விலையில் தரமான பொருட்களைக் கொள்வனவு செயவதற்கான வழியை ஏற்படுத்தும் வகையிலும் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 2014 ஆம் ஆண்டுக்கான புதுவருட சந்தை கடந்த ஐந்தாம் திகதி தொடக்கம் இயங்கிவருகின்றது.

இன்று வரை பிரதேச ரீதியாக இயங்குவது என்ற திட்டத்திற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்திலும் கடந்த திங்கள் தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளது.

குறித்த நாளன்று கண்டாவளைப் பிரதேசத்திலும் மறுநாள் பச்சிலைப் பள்ளி பிரதேசத்திலும் ஆரம்பமாகி இயங்கிய நிலையில் தற்போது பூநகரியிலும் புதுவருட சந்தை இயங்க ஆரம்பித்துள்ளது.

இச்சந்தைகள் பிரதேச ரீதியாக உற்பத்தியாகும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்திருந்தன.

இதற்கமைவாக பூநகரி பிரதேசத்தில் ஆரம்பமான சந்தையில் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்காக சந்தைப்படுத்தப்பட்டிருந்தன. இப்பொருட்களை பெருமளவான மக்கள் மற்றும் அரசதிணைக்களங்களின் அலுவலர்கள் போட்டி போட்டுக் கொள்வனவுகளில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில், பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சிறீஸ்கந்தராசா, பூநகரி பிரதேச சபை உறுப்பினர் குகேந்திரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன், மாவட்ட சமுர்த்தித் திட்ட இணைப்பாளர் சிவகுமார், பூநகரிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சொக்கநாதன் மற்றும் அரச திணைக்களங்களின் பிரதிநிதிகளும் அலுவலர்களும் பெருமளவான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# 100 - 110 ரூபாவுக்கு அரிசி விற்பனை;

# கொழும்புத்துறை மக்கள் குற்றச்சாட்டு

(கொழும்புத்துறை)

புங்கன்குளம், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் தற்போது நாட்டரிசியின் விலை 90 ரூபாவாகவும், சம்பா அரிசியின் விலை 100 - 110 ரூபா வரை விற்பனைசெய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அரிசிமீதான நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும் புங்கன்குளம், கொழும்புத்துறை, பாண்டியந்தாழ்வு பகுதிக்ளில் உள்ள கடை உரிமையாளர்கள் அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக்கூறி நாட்டரிசி 90 ரூபா - 95 ரூபாவரையும், சம்பா அரிசி 100 - 110 ரூபா வரையும், சிவப்பரிசி 90 ரூபா வரையிலும் விற்பனை செய்து வருகின்றனர் என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி அரிசியின் விலை குறைவடையப் போவதாக அரசாங்கம் அறிவித்திருந்த போதும் திடீரென ஏன் விலை அதிகரித்துள்ளது என மக்கள் கேள்வி எழுப்பிய போது கடை உரிமையாளர் சிலர் தாம் அரிசியைக் கொள்வனவு செய்த விலைக்கே நஷடத்துடன் விற்பனை செய்துவருகின்றோம் என்று கூறியது மட்டுமல்லாது விரும்பினால் வாங்கிச் செல்லுங்கள் இல்லை என்றால் எமக்கு விற்பனை செய்யத் தெரியும் எனவும் அதட்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 70 - 80 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த அரிசி 3 நாட்களாக திடீரென விலையேற்றப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகவும் கவலை தெரிவித்தனர்.

# முரசின் இன்றைய பலன்



(12.04.2014 சனிக்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 29 ஆம் திகதி.
சித்தம் / துவாதசி.
பூர நட்சத்திரம் மு.இ. 08.31 வரை. பின் உத்தரம்.
இராகு காலம் 09.06 - 10.36 வரை. சுபநேரம் 03.06 - 04.36 வரை.
ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதிர்பார்த்திருந்த காரியம் வெற்றியைத்தருதல், தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட பின்னடைவு சுமுகமாக முடிவடைதல். |
| ரிஷபம் | உறவினர் வருகையினால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படல், வழக்கத்திற்கு மாறான பணியினால் மனச் சஞ்சலமேற்படல். |
| மிதுனம் | ஆவணங்களின் பற்றாக்குறையினால் தேடிவந்த பணி அற்றுப்போதல், நீண்ட நாட்களாக வேதனை யடைந்து கொண்டிருந்த சம்பவத்திற்கு முற்றுப்புள்ளி ஏற்படல். |
| கடகம் | கடந்த கால உழைப்பிற்கு நற்பலன் கிட்டுவதினால் மகிழ்ச்சி ஏற்படல், தொழில் மற்றும் வியாபாரம் செழித் தோங்க வாய்ப்புக்கள் உருவாகும். |
| சிம்மம் | தொழிலில் சில தடைகள் வந்து மனநிலையைப் பாதித்து விடும், வரவை விடச் செலவு கூடுவதினால் கடன்பட வேண்டியிருக்கும். |
| கன்னி | சுற்றுச்சூழல் அறிந்து பேசுவதினால் கவிநிலை தக்க வைத்தல், தொழிலில், வியாபாரத்தில் நடைமுறை சீர்பெற புதிய நுட்பத்தைப்பயன்படுத்தல். |
| துலாம் | முன்பு கோரிய உதவி தற்போது எதிர்பாராமல் கிடைத்தல், பணி இலகுவாக நிறைவேற சக ஊழியர்கள் ஒத்துழைத்தல். |
| விருச்சிகம் | சிறிய செயல் கூட கடினமாகத் தோன்றி அவஸ்த்தைப்பட வைத்தல், தொழிலில் புதிய யுக்தியைக் கையாள முயல்வதினால் சிறப்படைதல். |
| தனுசு | பிறரின் குடும்ப விவகாரம் பற்றி விமர்சிக்க முனையவேண்டாம், தொழிலில் ஏற்பட்ட பிரச்சினை தீர நண்பருடன் கலந்தாலோசித்தல். |
| மகரம் | நண்பருடன் கருத்து முரண்பாடு வராதபடி பார்த்துக்கொள்ளுங்கள், எதிரியின் அடாவடித்தனத்தினால் பிரச்சினை தீர காவல்துறை சென்று முறையிட எண்ணுதல். |
| கும்பம் | எதிர்மறையாகப் பேசுபவரிடம் நீங்கள் மறு வார்த்தை பேசுவதைத் தவிர்க்கவும், பதவி முன்னேற்றம் பரீட்சைச் சித்தியினால் ஏற்படல். |
| மீனம் | குறித்த நேரத்தில் வேலையை முடித்துக்கொடுக்காமல் திண்டாட்டம் ஏற்படும், மாணவர்களுக்கு பரீட்சை முடிவினால் சஞ்சலமான் உணர்வுகள் ஏற்படும். |

# கொழும்புத்துறை ச.ச.நிலையத்தின்

# சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள்

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் 63 ஆவது நிறைவை முன்னிட்டு சனசமூக நிலையத்தின் விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் எற்பாட்டில் சித்திரைப்புத்தாண்டு நிகழ்வு மிக விமர்சையாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் ச.லினோர்த்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஆசிரியர் இ.கமலநாதன், கௌரவ விருந்தினராக ஜே-61 கிராம அலுவலர் க.விஜயரட்ணம் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது பாரம்பரிய விளையாட்டுக்கள், பல விதமான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

சித்திரை வருடப்பிறப்பன்று பிற்பகல் 5 மணிக்கு நிலையத் தலைவர் ச.லினோர்த்தன் தலைமையில் நடைபெறவுள்ள அரங்க நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபையின் பொது சனத் தொடர்பு அதிகாரி எஸ்.லோகசிவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் செயலகத்தின் நிர்வாக அலுவலர் எஸ். விஜயரங்கன், ஜே-62 கிராம அலுவலர் செல்வி இ.கமலவேணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)




# ஜய வருடம் உங்களுக்கு எப்படி?

**மகரம்**

உங்கள் முயற்சிகள் பகீரதப்பிரயத்தனத்தின் பின்னரே வெற்றியைத்தரும். திருடரினால் உடைமைகளுக்குச் சேதமுண்டாகலாம். செய்தொழிலில் போதிய கவனம் எடுங்கள். வியாழக்கிழமைகளில் தெட்சணா மூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடு செய்து வர தலைக்கு வந்ததுன்பம் தலைப்பாகையுடன் போய்விடும். 13.06.2014 இன் பின் குருமாற்றம் குபேர வாழ்வினைத்தந்துவிடும். ஈடுபடும் துறைகளில் புகழும், மதிப்பும், இலாபமும் ஏற்படும். புதிய ஜீவன் உருவாகும். மாமன்மாரின் உதவியினால் நன்மை கிட்டும். வாகனயோகமும், புதியமனை அமைக்கும் வாய்ப்பும் உண்டாகும். வருடமுடிவில் சனீஸ்வரன் இலாப நிலைக்கு (11 இல்)வர சரித்தழத்துக்கு உங்களை எண்ணவைக்கும்.

சனீஸ்வரன் 10 இல் நிற்பதினால் செய்தொழிலில் போதிய கவனம் எடுக்கவும். புதிதாக தொழில் ஆரம்பிக்க விரும்பின் திசாபுத்தி நன்றாக இருக்கவேண்டும். விளையாட்டுத்துறையில் சாதனையும் பரிசில்களும் பெறுவர். மாதாவின் நோய்களில் அதிகூடிய கவனம் எடுக்கவும். இராகு கேது என்பன நற்பலன்களை அள்ளிவீசும் நிலையில் இருப்பார்கள். தொழில் நிமித்தம் அடிக்கடி பயணங்கள் தொடரும். கடன் வசூலிக்க தனித்துச் செல்லவேண்டாம். கன்னியர் உறவினால் மானபங்கம் ஏற்படும். உங்களைப் பற்றிய வதந்திகள் பரவலாம். மின் ஒழுக்கில் கவனமெடுங்கள்.

ஜோதிர் வித்யாரத்னா.
வி.ஏ.சிவராசா

(தொடரும்)

## கெவின் எண்ணம் ஈடேறுமா?

(புதுடில்லி)

இங்கிலாந்து டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பிடிக்க முடியும் என்று அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியில் இருந்து நீக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. எனினும், அணியில் மீண்டும் இடம் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என்ற எனது விருப்பம் நிறைவேறும் என்றே நினைக்கிறேன்.

முன்னாள் கப்டன் ஸ்ட்ராசுடன் கருத்து வேறுபாடு இருந்தாலும், அவர் எனது நல்ல நண்பர். ஐ.பி.எல். தொடரில் டில்லி அணிக்காக சிறப்பாக விளையாடுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 8,181 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இங்கிலாந்து தரப்பில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் அவர் 4ஆவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கத்துக்குட்டிகளுக்கும் டெஸ்டில் வாய்ப்பு
## ஐ.சி.சி. வகுக்கிறது புதிய விதி

(டுபாய்)

கத்துக் குட்டி அணிகளுக்கு டெஸ்ட் போட்டியில் விளையாட வாய்ப்புக் கிடைக்கும் வகையில் சர்வதேச கிரிக்கெட் சபை புதிய விதிமுறையை அறிமுகம் செய்திருக்கிறது.

டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தை ஏற்கனவே இந்தியா, அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான், இலங்கை உட்பட 10 நாடுகள் பெற்றுள்ளன. இதில் சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் முறையே கடைசி இடத்தை வகிக்கின்றன.

தற்போது சர்வதேச கிரிக்கெட் சபையின் உறுப்பு நாடுகளாக உள்ள கத்துக்குட்டி அணிகளும் டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெறும் வகையில் டுபாயில் கடந்த இரண்டு நாட்கள் நடந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) செயற்குழுக் கூட்டத்தில் புதிய விதிமுறை கொண்டு வர முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதன்படி ஐ.சி.சி. சார்பில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஐ.சி.சி. டெஸ்ட் சலஞ்ச் போட்டி நடாத்தப்படவிருக்கிறது. முதலாவது டெஸ்ட் சலஞ்ச் போட்டி 2018ஆம் ஆண்டு நடாத்தப்படவுள்ளது. இந்தப் போட்டியில் 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாத கடைசியில் டெஸ்ட் தர வரிசையில் 10ஆவது இடத்தில் இருக்கும் அணியும், 2015 முதல் 2017 வரையில் நடைபெறும் கண்டங்களுக்கு இடையிலான கோப்பை போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் அணியும் மோதும். உள்ளூர், வெளியூர் அடிப்படையில் தலா இரண்டு டெஸ்ட் போட்டிகள் நடைபெறும். இதில் வெற்றி பெறும் அணி டெஸ்ட் போட்டியில் விளையாடும் அந்தஸ்தைப் பெறும்.

புதிய விதிமுறையின் படி சிறிய அணிகளான அயர்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை டெஸ்ட் அந்தஸ்தைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கண்டங்களுக்கு இடையிலான போட்டி 2004ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. இதில் அயர்லாந்தே ஆதிக்கம் செலுத்தி வருவதால் அந்த அணிக்கு டெஸ்ட் ஜக்பொட் அடிக்க அதிக வாய்ப்பு உள்ளது.



## வேகமான மனிதருக்கு விதிக்கப்பட்டது தடை

உலகின் மிக வேகமான மனிதர் என்று முன்னர் அறியப்பட்டிருந்த தடகள வீரர் அசா..பா பவலுக்கு 18 மாதத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தான ஆக்ஸிலோ..ப்ரைன் எனும் மருந்தை அவர் பயன்படுத்தியிருந்தது கண்டறியப்பட்டதால் அவர் மீதான இந்தத்தடையை ஜமேக்கா நாட்டு அதிகாரிகள் விதித்துள்ளனர்.

31 வயதாகும் அவர் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜமேக்கா தேசிய தடகளப் போட்டிகளின் போது தடை செய்யப்பட்ட இந்த மருந்தை பயன்படுத்தியிருந்தது தெரியவந்துள்ளது.

எனினும் இந்தத் தடை பின் திகதியிட்டு விதிக்கப்பட்டுள்ளதால் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அது முடிவுக்கு வருகிறது.

தன்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்து அசா..பா பவல் விளையாட்டுத் துறைக்கான சர்வதேசத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யத் திட்டமிட்டுள்ளார்.

அவரைப் போலவே தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப்பயன்படுத்தியதால் மற்றொரு ஜமேக்க வீரரான ஷெரோன் சிம்ஸனுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கிளாஸ்கோ நகரில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளில்இருவரும் பங்குபெற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

உலகளவில் உசைன் போல்ட்டின் ஆளுமை ஏற்படும்வரை குறுந்தூர ஓட்டத்தில் ஆடவர் பிரிவில் அசா..பா பவலின் ஆதிக்கமே இருந்து வந்தது.

கடந்த 2007 ஆம் ஆண்டு 100 மீற்றர் தூரத்தை 9.74 விநாடிகளில் ஓடி அவர் உலக சாதனை படைத்திருந்தார். ஆனாலும் அவர் அதற்கும் குறைவான நேரமான 9.72 நொடிகளிலும் ஓடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஓய்வு சரியான முடிவு

(கொழும்பு)

குமார் சங்கக்கார, ஜெயவர்த்தனவின் ஓய்வு முடிவு, சரியான நேரத்தில் எடுக்கப்பட்டது என இலங்கை அணியின் முன்னாள் வீரர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர்கள் ஜெயவர்த்தன, சங்கக்கார சமீபத்தில் நிறைவடைந்த ருவென்ரி-20 உலகக் கோப்பைத் தொடருடன், இவ்வகை போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ரணதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ருவென்ரி-20 போட்டி இளம் வீரர்களுக்கானது. ஜெயவர்த்தனவும், சங்கக்காரவும் ஓய்வு பெறுவது என்பது, சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு.

மற்றவர்களை விட வீரர்களுக்குத் தான் எப்பொழுது ஓய்வு பெறுவது சரியாக இருக்கும் என்பது தெரியும். ருவென்ரி-20 கிரிக்கெட் என்பது இளைஞர்களுக்கான விளையாட்டு என்பதை கடந்த காலங்களில் பார்த்திருக்கிறோம்.

எனவே அவர்கள் இருவரும் எடுத்த முடிவு சரியானது தான். ருவென்ரி-20 உலகக் கோப்பையில் இளம் வீரர்களும், மூத்த வீரர்களும் ஒருங்கிணைந்து தங்களது பங்களிப்பை அளித்தனர். இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடி வருவது, எதிர்கால இலங்கை கிரிக்கெட்டுக்கு நல்ல அறிகுறியாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒலிம்பிக் சாதனை வீரரின் கையில் இல்லை இயக்கம்



ஒலிம்பிக் சாதனை நீச்சல் வீரர் இயன் தோப் தனது இடது கையின் இயக்கத்தை இழந்து, இனி நீச்சல் போட்டிகளில் பங்கு பற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். விபத்து ஒன்றில் கை மூட்டில் ஏற்பட்ட உபாதைக்கு, சத்திர சிகிச்சை செய்து கொண்ட பின்னர், அந்த இடத்தில் ஏற்பு ஏற்பட்டதன் விளைவாக அவருடைய இடது கை இயக்கத்தை இழந்துள்ளது. அவரின் உயிருக்கு ஆபத்து என செய்திகள் வெளிவந்த நிலையில் அவரின் முகாமையாளர் இந்தச் செய்தியினை உறுதிப்படுத்தியுள்ளார். இருப்பினும் இயன் தோப்புக்கு இந்தச் செய்தியை யாரும் இன்னமும் சொல்லவில்லை எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய வீரரான இயன் தோப், '1998ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டிற்குள் 9 ஒலிம்பிக் பதக்கங்களை வென்றவர் என்பதுடன் 2001ஆம் ஆண்டு சம்பியன்சிப் போட்டிகளில் 6 தங்கப்பதக்கங்களை வென்று, ஒரு வருடப் போட்டியில் கூடுதல் பதக்கங்களை பெற்றவர் என்ற சாதனையை தனதாக்கினார். 11 சர்வதேச பட்டங்களை இவர் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2006ஆம் ஆண்டு சர்வதேசப் போட்டிகளில் இருந்து விலகிய 31 வயதான தோப், மீண்டும் 2011ஆம் ஆண்டு போட்டிகளில் பங்குபற்ற ஆரம்பித்தார். இருப்பினும் ஆரம்ப காலங்கள் போன்று மீண்டும் போட்டிகளில் சோபிக்க முடியவில்லை. இந்த வருடம் கொமன் வெல்த் போட்டிகள், அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றத் தயாராக இருந்த நிலையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

## அதிர்ச்சித் தோல்வி

சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் காலிறுதியில் மெஸ்சியின் பார்சிலோனா அணி, அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

கிளப் அணிகள் பங்கேற்கும் ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதன் காலிறுதி. இரண்டாவது சுற்றுப் போட்டியில் பார்சிலோனா, அத்லெட்டிகோ மட்ரிட் அணிகள் மோதின. போட்டியின் 5ஆவது நிமிடத்தில், மட்ரிட் வீரர் கோகே, ஒரு கோல் அடித்தார். மெஸ்சி, நெய்மர் என, நட்சத்திர வீரர்கள் இருந்த போதும், இதற்குப் பதிலடி கொடுக்க பார்சிலோனா அணியினால் முடியவில்லை.

முடிவில் 1-0 என்ற கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் அணி வென்றது. இதற்கு முன் நடந்த காலிறுதி முதல் போட்டி 1-1 என, சமநிலையானது. இதையடுத்து 2-1 என்ற முன்னிலை அடிப்படையில், சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிக்கு, 40 ஆண்டுகளில் முதன் முறையாக அத்லெட்டிகோ மட்ரிட் அணி முன்னேறியது.

## ஜோன்சன் ரெடி

காயம் காரணமாக ருவென்ரி-20 உலகக் கோப்பைத் தொடரில் பங்கேற்காத, அவுஸ்ரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜோன்சன் ஐ.பி.எல். தொடருக்கு தயாராகி விட்டார்.

அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன். கடந்த ஆறாவது ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக பங்கேற்ற பின், இவருக்கு ஏறுமுகம் தான். ஆஷஸ் தொடரில், இங்கிலாந்து அணியை புரட்டி எடுத்தார். பின் தென்னாபிரிக்க மண்ணில் தென்னாபிரிக்காவை மிரட்டினார். திடீரென வலது கால் பெருவிரலில் காயம் ஏற்பட, பங்களாதேஷில் நடைபெற்ற ருவென்ரி-20 உலகக் கோப்பைத் தொடரில் பங்கேற்க இயலாமல் போனது. இதனால், அவுஸ்ரேலிய அணிக்கு பெரும் இழப்பாக அமைய, சூப்பர்-10 சுற்றுடன் திரும்பியது.

இவர் குறித்து, அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை (சி.ஏ.,) வெளியிட்ட அறிக்கையில், வலது கால் விரல் காயத்தில் இருந்து, ஜோன்சன் முழுமையாக மீண்டு விட்டார். எதிர் வரும் 16ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்சில் ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்காக பங்கேற்கவுள்ளார், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சச்சின் தலைமையில் பிரெட் லீ

சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப் அணியில் பிரெட் லீ விளையாடவுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தின் 200ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப் அணிக்கும், ரெஸ்ட் ஓப் த வேல்ட் அணிக்கும் இடையே யூலை 5ஆம் திகதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் மெல்பேர்ன் அணிக்கு சச்சின் தலைமை வகிக்கிறார். ரெஸ்ட் ஓப் த வெல்ட் அணிக்கு அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தலைமை வகிக்கிறார். இதில் இரு அணிகளிலும் பிரபல முன்னாள், இன்னாள் வீரர்கள் பங்கேற்று விளையாடவுள்ளனர்.

இப்போட்டியில் விளையாடுவதை அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ, இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், இங்கிலாந்து முன்னணி வீரர் கெவின் பீற்றர்சன் ஆகியோர் உறுதி செய்துள்ளனர். இதில் பிரெட் லீ சச்சின் தலைமையிலான அணியிலும், முத்தையா முரளிதரன், பீற்றர்சன் ஆகியோர் வோர்ன் தலைமையிலான அணியிலும் விளையாடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராவிட், இங்கிலாந்து அணியின் துணைப் பயிற்சியாளராக உள்ள போல் கோலிங்வூட் ஆகியோரும் சச்சினின் அணியில் விளையாடவுள்ளனர்.

இப்போட்டியில் பங்கேற்பது குறித்து பிரெட் லீ கருத்துத் தெரிவிக்கையில், மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப் எனக்கு வாழ்நாள் உறுப்பினர் என்ற கௌரவத்தை வழங்கியுள்ளது. மேலும் இப்போது மெல்பேர்ன் அணிக்காக விளையாடும் வாய்ப்பையும் வழங்கியுள்ளது. மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப்பின் 200ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் இந்தக் கிரிக்கெட் போட்டி மிகவும் சிறப்பு வாய்ந்தது.

நீண்டகாலத்துக்குப் பின் சமகால வீரர்களுடன் சேர்ந்து விளையாடும் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. இதில் விளையாடுபவர்களுக்கும், இரசிகர்களுக்கும் இப்போட்டி மிகவும் இனிய அனுபவமாக இருக்கும் என்றார்.





பயிற்சி முகாமில் வளவாளர்களால் விளக்கமளிக்கப்படுவதைக் காணலாம்

# தெரிவு செய்யப்பட்ட வீர,வீராங்கனைகளுக்கான இரு நாள் பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கான இரு நாள் பயிற்சி முகாம் நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பயிற்சி முகாமில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட வீர,வீராங்கனைகள் அழைக்கப்பட்டனர்.

இதில் தடகளம், கால்பந்து, வலைப்பந்து போன்ற போட்டிகளுக்கான செயல்முறை மூல விளக்கம், உணவுக் கட்டுப்பாடு ஆகியவை குறித்து பூரண விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி முகாமின் வளவாளர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன்ராஜ், யாழ். மாவட்ட கால்பந்து பயிற்றுநர் முகுந்தன், வலைப்பந்து பயிற்றுநர் ஈசா, இலங்கை வலைப்பந்தாட்ட அணித் தலைவி தர்சினி, மன்னார் மாவட்ட விளையாட்டு செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் உட்படப் பலர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

இப்பயிற்சி முகாம் குறித்து கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன்ராஜ், இனங்காணப்பட்ட 100இற்கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் இப்பயிற்சி முகாமில் பங்கேற்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. இங்கு பயிற்சிகளைப் பெற்ற வீர, வீராங்கனைகள், எங்களால் கற்றுக் கொடுக்கப்பட்ட நுணுக்கங்களை தொடர் பயிற்சியாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு தொடர் பயிற்சியாக அவர்கள் செய்யத் தவறும் பட்சத்தில் இந்தப் பயிற்சி முகாமிற்கூடாக எந்தப் பயனையும் பெற்றுக்கொள்ள முடியாது. இரு நாள் பயிற்சி முகாமிற்கும் பெருமளவு பணத்தை நாங்கள் செலவு செய்திருக்கின்றோம். எங்கள் மாவட்டத்திலுள்ள வீர,வீராங்கனைகள் அடுத்த நிலையை விரைவில் எட்ட வேண்டும். அது அவர்களின் தொடர் பயிற்சிகள் மூலமே சாத்தியமாகும் என்றார். (எஸ்.பி.)

## இளைஞர் கழக பெரு விளையாட்டு முடிவுகள்

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகளின் விபரம் வருமாறு

கரப்பந்து (ஆண்கள்) :1ஆம் இடம் மட்டுவில் ஐங்கரன் இளைஞர் கழகம், 2ஆம் இடம் மீசாலை சீமா இளைஞர் கழகம்

கிரிக்கெட் (ஆண்கள்) :1ஆம் இடம் மட்டுவில் வளர்மதி இளைஞர் கழகம் 2ஆம் இடம் சாவகச்சேரி சிவன் இளைஞர் கழகம்

கால்பந்து (ஆண்கள்) :1ஆம் இடம் நாவற்குழி அண்ணா இளைஞர் கழகம், 2ஆம் இடம் கோவிலாக்கண்டி மகாவிஷ்ணு இளைஞர் கழகம்

வலைப்பந்து (பெண்கள்): 1ஆம் இடம் கொடிகாமம் திருநாவுக்கரசு இளைஞர் கழகம் 2ஆம் இடம் சாவகச்சேரி டிறிபேர்க் இளைஞர் கழகம்.

கபடி (ஆண்கள்): 1ஆம் இடம் சாவகச்சேரி டிறிபேர்க் இளைஞர் கழகம் 2ஆம் இடம் மட்டுவில் மோகனதாஸ் இளைஞர் கழகம்

கயிறிழுத்தல் (ஆண்கள்) : 1ஆம் இடம் கைதடி சரஸ்வதி இளைஞர் கழகம் 2ஆம் இடம் மட்டுவில் வளர்மதி சிவன் இளைஞர் கழகம். (48)

விளையாட்டு செய்திகள்

## மானிப்பாய் இந்துவில் இன்று இளைஞர் கழக கால்பந்து

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள சகல அணிகளையும் உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகஸ்தர் கேட்டுள்ளார். (48)



## உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கமும் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு கூடைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியும் மோதின.

முதல் சுற்றினை உடுவில் மகளிர் கல்லூரி அணி 15:03 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. தொடர்ந்து இரண்டாவது சுற்றினையும் 7:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் அணி வென்றது. இறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 22:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

# கிண்ணம் வென்றது நாச்சிக்குடா சென். மேரிஸ்




(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் திருநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு 9 வீரர்கள் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியும், வட்டக்கச்சி இளந்தளிர் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் பெரும் முயற்சியை வட்டக்கச்சி இளந்தளிர் அணி மேற்கொண்டபோதும், சென். மேரிஸ் அணியின் பலமான பிற்கள் எல்லையைத் தாண்டி உட்செல்ல முடியவில்லை. இறுதியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியின் சிறந்த வீரராக நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியின் ஜினோன், தொடர் நாயகனாக அதே அணியின் வீரசிங்கம், சிறந்த கோல்காப்பாளராக வட்டக்கச்சி இளந்தளிர் அணியின் விஜிந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக குணா, திவாகர், சதீஸ் ஆகியோர் கடமையாற்றினர். இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட சங்கத் தலைவர் ஜோயல்பியசீலன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுவிஸ்கரன், வடமாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கிக் கௌரவித்தனர். (48)

# இறுதியில் குருநகர் கார்மேல் போய்ஸ்

(கொக்குவில்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட வடமாகாண அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு குருநகர் கார்மேல் போய்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமாகாண மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை நடாத்தி வருகின்றது. அணிக்கு ஆறு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி, ஐந்து ஓவர்களைக் கொண்டதாக நடாத்தப்பட்டது.

இச்சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கலைவாணி மைதானத்தில் நடைபெற்றன. இதில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியும், அரியாலை சரஸ்வதி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அரியாலை சரஸ்வதி அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய குருநகர் கார்மேல்போய்ஸ் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அயன் ஏழு சிக்ஸர் அடங்கலாக 44, செல்டன் இர்ண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 77 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை சரஸ்வதி அணி நான்கு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 28 ஓட்டங்களைப் பெற்றுப் படுதோல்வியடைந்தது. இதன் மூலம் 49 ஓட்டங்களால் கார்மேல் போய்ஸ் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# சொன்னார்கள்...



● ஒவ்வொரு படம் நடிக்கும் போதும் பயம் வந்திருக்கிறது, இனிமேல் சினிமாவை விளையாட்டாக எடுத்துக்கொள்ள முடியாதபடி. "தீயா வேலை செய்யணும் குமாரு" கொஞ்சம் வெற்றிக் களிப்பு கொடுத்ததும், அடுத்து எப்படி? என்ற கேள்வி முதன்மையாக நின்றது. இதுவரை என் மீது இருந்த பார்வைகளை சுத்தமாக துடைத்தெறிய வேண்டும் என்று சொல்லி நான் ஒப்புக்கொண்ட படம்தான் வசந்தபாலன் இயக்கத்தில் "காவியத் தலைவன்". மற்றும் "ஜிகர்தண்டா", கார்த்திக் சுப்ராஜ் இயக்கத்தில். இந்த, படங்கள் எனக்கு வேறு ஒரு கலர் கொடுக்கும்.

சினிமா துரத்திப் பிடிக்கிற கனவல்ல. இழந்து பெறுகிற வரம். இதோ இந்த உயரத்துக்கு வர "பாய்ஸ்", "ஆயுத எழுத்து" போன்ற படங்கள் எனக்கு விசிட்டிங் கார்ட்தான். ஆனால் அதை மட்டுமே நான் தடமாக வைத்துக் கொள்ளவில்லை. நல்ல சினிமாக்களை நானும் கவனிக்கிறேன். ஆனால் அது மாதிரி சினிமாவில் என்னால் நடிக்க முடியுமா என்று தெரியவில்லை. என்னால் படிக்காதவன் மாதிரியோ, அண்ணனுக்கு நல்ல தம்பியோ, தங்கைக்கு நல்ல அண்ணன் மாதிரியோ நடிக்க முடியாது. எல்லா விதமான சினிமாக்களிலும் நடிக்கும் நடிகர்கள் இங்கே குறைவுதான்.... விக்ரம், சூர்யாவுக்கு பின் அந்த இடம் இன்னும் காலியாகவே இருக்கிறது....

**- சித்தார்த்**

● பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன், காதல் ரோஜாவே என்ற தமிழ்ப் படத்தில் அறிமுகமானேன். அதன்பின், வெளிநாடு சென்றுவிட்ட என்னை மீண்டும் விஸ்வரூபம்- 1, 2 படங்கள் மூலம், மெகா நடிகையாக்கி இருக்கிறார் கமல். இதனால், என்னை நெருங்க, மற்ற படாதிபதிகள், தயங்கி நிற்கின்றனர். நானும் மற்ற நடிகைகள் போன்று தான், படங்களின் பட்ஜெட்டை பொறுத்து, குறைந்த சம்பளமும் பெற்று நடிப்பேன். அதனால், என்னை தாராளமாக அணுகலாம்...

**- பூஜாகுமார்**

● "மைனா" பார்த்துவிட்டு வெளிவந்த ரஜினி ஆரத்தழுவி, "இந்தப் படத்தில் சின்ன கேரக்டர் செய்திருந்தால் எனக்கு சந்தோஷமாக இருந்திருக்கும்" என்றார். "இன்னிக்கு எனக்கு நல்லா தூக்கம் வரும். ஏன்னா நல்ல படம் பார்த்த சந்தோஷம் அது" என்றார் கமல். "சந்தோஷம்ப்பா... அழகியல் சார்ந்த மண் வாசனை கதைகளைத் தொடர்ந்து எடுத்து வா" என்றார் பாரதிராஜா.

மணிரத்னம் தொலைபேசிப் பாராட்டினார். இப்படி சீனியர்கள் பாராட்டுகிற இந்த சந்தோஷ வார்த்தைகள்தான் எனக்கான எரிபொருள். சாதிக்க வேண்டும் என்கிற வெறி, அது மட்டுமேதான் என் இருப்பை அடையாளப்படுத்தி வைத்திருக்கிறது. வரப்போகும் "கயல்" படமும் அதை நிரூபிக்கும்.

- இயக்குநர் பிரபு சாலமன்

கவர்ச்சி வேடங்களில் நடித்து எனக்கு அலுத்து விட்டது. முக்கியத்துவம் இல்லாவிட்டாலும், கதைக்குப் பொருத்தமான சிறு வேடங்கள் என்றாலும் இனி நடிப்பேன்.

**- ஸ்ரேயா**

தனுஷ் - வெற்றிமாறன் தயாரிப்பில் உருவாகியுள்ள காக்கா முட்டைப் படம், சேரிக் குழந்தைகளை வைத்து படமாக்கப்பட்டுள்ளது. தனுஷ், சிம்பு மற்றும் அட்டகத்தி ஐஸ்வர்யா நடித்துள்ளனர். "படத்தின் கதை, என் மனதை தொட்டு விட்டதால், இதுவரை இல்லாத அளவுக்கு, உயிரோட்டமான இசையைக் கொடுத்துள்ளேன்...

**- ஜி.வி.பிரகாஷ்**

நான் ஆசீர்வதிக்கப்பட்டவன். பல தரப்பிலிருந்தும் வரும் வாழ்த்துக்கள் சந்தோஷம். கேட்டதை விட, நினைத்ததை விட எல்லாமே அதிசயமாக நடந்து கொண்டு இருக்கிறது. இதிலிருந்து கீழே இறங்க கூடாது. இன்னும் மேலே மேலே போக வேண்டும். யாரிடமும் எதுவும் கேட்கத் தோன்றவில்லை. எல்லோருக்கும் நன்றிதான் சொல்ல வேண்டும்.

எல்லாருக்கும் பிடிக்கிறவனாக இருக்க வேண்டும் என்கிற மனநிலைதான் எனக்கு பெரிய வெளிச்சத்தைக் கொண்டு வந்து சேர்த்தது. "எங்கள் வீட்டில் உங்களை எல்லாருக்கும் பிடிக்கிறது" என சில நடிகர்கள் மனம் திறந்து பேசும் வார்த்தைக்கு நான் இன்னும் உண்மையாக இருக்க வேண்டும். வெற்றிகள் ஒரு பக்கம் இருக்கட்டும். விஜய் டி.வி. தொகுப்பாளர் ஓடிஷனுக்காக காத்திருந்த படபடப்பு இன்னும் மனசுக்குள் அப்படியே இருக்கிறது. ஊரிலிருந்து சென்னைக்கு பஸ் பிடிக்கும் போது, நிறைய சினிமா பார்க்க வேண்டும் என்பதுதான் கனவாக இருந்தது. ஆனால் ஒரு நடிகனாக இடம் கிடைத்திருப்பது காலம் நடத்தி வைத்த மேஜிக்.

**- சிவகார்த்திகேயன்**

நான் அதர்வாவை காதலிப்பதாக எழுதியுள்ள செய்தி வெறும் வதந்தி. என் கோலிவுட் நண்பர்களில் அவரும் ஒருவர் அவ்வளவுதான்....


**- ப்ரியா ஆனந்த்**

ந.பிச்சமூர்த்தியை தமிழ் இலக்கிய அன்பர்கள் அனைவரும் அறிந்திருந்தாலும், அவர் ஒரு திரைப்படத்திலும் நடித்திருக்கிறார் என்பது பலருக்குத் தெரியாது. அதைப் பற்றி அவரே சொல்கிறார்: வ.ரா., கதை, வசனம் எழுதி, இராமானுஜர் என்ற, திரைப்படத்தை தயாரித்தார். சீதாலஷ்மி என்ற பெண்மணி அதற்கு நிதியுதவி செய்தார். வ.ரா., டைரக்ஷனில் அந்தப் படம் (பேசும் படம் அல்ல, மௌனப் படம்) உருவாயிற்று. நான் மற்றும் சங்கு சுப்பிரமணியம், வ.வே.சு.கிருஷ்ணமூர்த்தி, ஏ.நாராயணன் ஆகியோர் நடித்தோம். "கும்பகோணத்து வக்கீல் பிச்சமூர்த்தி நடிக்கும்" என்று விளம்பரம் செய்தனர். எனக்கு ஆளவந்தார் வேடம்; படம் இரண்டு மூன்று வாரங்கள் ஓடியதாக நினைவு.

**- 'தீபம்' நவம்பர், 1968 இதழில் ந.பிச்ச[illegible]த்தி அளித்த பேட்டியிலிருந்து.**

# எடையைக் குறைக்கவும் நீரிழிவைத் தடுக்கவும்...

– மருத்துவர் கு.சிவராமன்




**நீ**ரிழிவு நோய் வராமல் தடுக்க அல்லது தள்ளிப் போட உடல் எடையை நீங்கள் கண்டிப்பாகக் குறைத்தே ஆகவேண்டும். தடாலடியாக அது நடக்காது. உணவும் உடற்பயிற்சியும், யோகாசனப் பயிற்சியும்தான் உடல் எடையைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்க முடியும்.

அமேசான் காட்டில் இருந்து ஒரு அரிய மூலிகை வந்து ஸீரோ சைஸ் இடுப்பைத் தந்துவிடாதா எனக் கனவு காண்பது புத்திசாலித்தனமல்ல.

உணவில் பால், தயிர், இனிப்பு, எண்ணெயில் பொரித்தவை ஆகியவற்றை அறவே தவிர்த்து விடுங்கள். நிறைய மோர் குடியுங்கள். பட்டை தீட்டிய தானியங்களைச் சாப்பிடாதீர்கள். அது அரிசி கோதுமையாக இருந்தாலும் சரி, திணை, வரகு, சாமை எனச் சிறுதானியங்களாக இருந்தாலும் சரி. பட்டை தீட்டித் தவிட்டை நீக்கிவிட்டால் பலனும் குறையும். உடலில் வேகமாக வெல்லத்தைச் சேர்க்கத் தொடங்கும். பழுப்பு அரிசி, வண்ணப் பாரம்பரிய அரிசிகள், பட்டை தீட்டாத தினை, வரகு சாமையில் மதிய உணவு அமையட்டும்.

புளிக்குப் பதிலாகக் குடம்புளி பயன்படுத்துங்கள். குடம்புளியின் hydroxy citric acid சத்து உடல் எடையைக் குறைக்க உதவுவதாக மருத்துவ அறிவியல் சொல்கிறது.

சிறிய வெங்காயம் சேர்த்த கம்பங்கூழ், கொள்ளு ரசம், கோகம் பழம் எனும் குடம்புளி ஜூஸ், வெந்தய-கறிவேப்பிலைத் தூள் இவையெல்லாம் எடை குறைக்க உதவும் உணவு வகைகள்.

தீவிர நடைப் பயிற்சியும், மூச்சுப் பயிற்சியும் dynamic yoga எனும் ஆசனப் பயிற்சித் திட்டத்தையும் கடைப்பிடித்தால் எதிர்பார்த்தபடி எடை குறையும். உணவுக் கட்டுப்பாட்டு, உடற்பயிற்சி காரணமாக உடல் களைப்படையாது உற்சாகமாக இருக்க யோகாசனங்கள் கைகொடுக்கும்.



# அப்படியே சாப்பிடுங்கள்!

பழங்களை அப்படியே சாப்பிடலாமா? இல்லை பழச்சாறாக்கி அருந்தலாமா? என்று பட்டி மன்றம் நடத்தாமல், ஆராய்ச்சி செய்தார்கள் இங்கிலாந்தில் உள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அப் பல்கலைக்கழகத்தின் இரத்தக் குழாய் மற்றும் அறிவியல் நிறுவனத்தின் நவீத்சாத்தாரும், டாக்டர் ஜோசன்கில்லும் இதுபற்றிய ஏகப்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்த பின்பு பழத்தை அப்படியே சாப்பிடுவதே சிறந்தது என்று முடிவுக்கு வந்தார்கள்.

என்ன காரணம்?

பழச்சாறில் சீனியைச் சேர்ப்பதால் சீனியின் அளவு அதிகரித்துவிடுகிறது. கால் லீற்றர் அப்பிள் பழச்சாற்றில் 110 கலோரிகள் உள்ளன. 26 கிராம் சீனியும் உள்ளது. அதிகமாகப் பழச்சாறை அருந்துவது நீரிழிவு நோய்க்கான பாதையைத் தடையில்லாமல் திறந்து விடுவதாகும்.

பழத்தை அப்படியே சாப்பிட்டால் பழத்தில் உள்ள நார்ச்சத்து உடலுக்குக் கிடைக்கிறது. பழச்சாறில் நார்ச்சத்து இல்லாமற் போகிறது. உடலுக்குத் தேவையான நார்ச்சத்தைப் பெற பழங்களை உண்பதே நல்லது என்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சிக்காக தினம்தோறும் அரை லீற்றர் திராட்சைப் பழச்சாறை மூன்று மாதங்களாகச் சிலருக்குக் கொடுத்துப் பார்த்தார்கள். மூன்று மாதங்களின் இறுதியில் சோதனை செய்யப்பட்டவர்களில் சிலருக்கு இன்சுலின் சுரப்பதில் தடை ஏற்பட்டு, நீரிழிவு நோய் வந்துவிட்டது. அதைவிட முக்கியமான மாறுதல்: அவர்களுடைய இடுப்பு பெருத்துவிட்டதாம்!

4

# ஆயிரம் வருடங்கள் வாழ்வது எப்படி?

- சுந்தர் வேதாந்தம் -


## அழிவில்லாத ஓர் அமெரிக்கப்பெண்

வருடம் 1951. அமெரிக்காவிலுள்ள மரிலண்ட் மாகாணத்தில் பால்ட்டிமோர் என்று ஒரு நகரம். இந்நகரின் வெளியே புகையிலை பயிர் செய்யும் பண்ணைகளில் கூலித்தொழில் செய்து வாழும் ஒரு ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த இளம்பெண் ஹென்றியேட்டா லாக்ஸ். கறுப்பர்கள், சரியாகச் சொல்லப்போனால் ஆபிரிக்கஅமெரிக்கர்கள் இனத்தைச் சேர்ந்தவரான இவர், ஐந்து குழந்தைகளுக்கு தாய். கொஞ்சநாட்களாகவே கடுமையான வயிற்று வலியினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த அவர், தன் கணவன் டேவிட்டை தன்னை சிகிச்சை பெற அழைத்துச்செல்லும்படி வற்புறுத்தினார்.

டேவிட் தன் மனைவியை பால்ட்டிமோரில் இருந்த ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் என்ற பெரிய மருத்துவமனைக்கு அழைத்துச்சென்ற போது ஹென்றியேட்டாவுக்கு வயிற்றில் ஒரு பெரிய கட்டி இருப்பதைக் கண்டுபிடித்து மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க ஆரம்பித்தனர். கட்டி வந்ததின் காரணம் ஹென்றியேட்டாவை பிடித்திருந்த மிக மோசமான கர்ப்பப்பை வாய் புற்றுநோய் (cervical cancer).

பரிசோதனைக்காக கட்டியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட திசு மாதிரி (tissue sample) ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டபோது, அதிலிருந்து ஒரு பாதி அதே மருத்துவமனையைச் சேர்ந்த, உயிரணுக்களை பீட்ரி தட்டில் வளர்க்க முயன்று கொண்டிருந்த, டாக்டர் ஜோர்ஜ் கய்யின் ஆய்வகத்திற்கும் அனுப்பப்பட்டது. கய்யின் உதவியாளர் மேரி, டசின். கணக்கில் முந்தைய திசு மாதிரிகளை செய்தது போலவே இந்த திசுக்களையும் ஊட்டச்சத்து மிகுந்த ஒரு திரவத்தில் சேர்த்து சரியாக 37 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையையும் தேவையான ஈரப்பதத்தையும் பராமரிக்கும் ஒரு பெட்டிக்குள் அடை காக்க வைத்துவிட்டு வீட்டுக்குப் போனார்.

தொடர்ந்த சில பல நாட்களில் இந்த உயிரணுக்கள் மற்ற மாதிரிகளில் இருந்து



மிகவும் வேறுபட்டவை என்று ஆய்வகத்திலிருந்த அனைவருக்கும் தெரிய ஆரம்பித்தது. ஏனெனில் ஹென்றியேட்டாவின் வயிற்றில் எந்த மருந்து மாத்திரை கதிர்வீச்சு சிகிச்சைகளுக்கும் பணிந்து விடாமல் ஒரு கால்பந்து அளவுக்கு வளர்ந்த அந்த கொடிய புற்றுநோய் உயிரணுக்கள் அதே அசுரவேகத்துடன் ஆய்வகத்திலும் வளர ஆரம்பித்தன.

அது மட்டுமில்லை. சாதாரணமாக நன்கு வளருவதாக கருத்தப்படும் உயிரணுக்கள் கூட இரு பரிமாணங்களில் மட்டும்தான் வளரும். அதாவது ஒரு தட்டிலோ குடுவையிலோ அவை வளரும்போது கிடைமட்டமாக ஒரு அடுக்கு பாத்திரத்தின் சுற்றளவு வரை வளர்ந்துவிட்டு போதும் என்று நிறுத்திக்கொண்டுவிடும்.

ஹென்றியேட்டாவின் உயிரணுக்களோ அடுக்கடுக்காக மூன்று பரிமாணங்களிலும், ஊட்டச்சத்து கிடைக்கும்வரை, வைத்த பாத்திரங்களை பொங்கல்பானைகளாக கருதி வளர்ந்து பொங்கி வழிந்து கொண்டே இருந்தன. உயிரியல் ஆய்வகங்களின் வழக்கப்படி இந்த உயிரணு வரிசைக்கு கொடையாளரின் பெயரின் முதலெழுத்துக்களை சேர்த்து ஹீலா செல் வரிசை என்று பெயர் வைக்கப்பட்டது.

சில மாதங்களில் ஜோர்ஜ் கய் ஆய்வக குடுவைகளை ஓரமாக வைத்துவிட்டு பெரிய கொப்பரை மாதிரியான தொட்டிகளில் ஹீலா உயிரணுக்களை வளர்க்க ஆரம்பித்தார். இதனை கேள்விப்பட்ட ஆனால் இந்த மாதிரி யான ஒரு செல் வரிசையைக் கண்டுபிடிக்க முடியாமல் திணறிக்கொண்டு இருந்த பல ஆய்வகங்கள் தங்களுக்கும் கொஞ்சம் ஹீலா சாம்பிளை அனுப்புமாறு கேட்டுக்கொண்டன. கய் கேட்டவர்களுக்கெல்லாம் சாம்பிள்களை பாரி வள்ளல் போல் வாரி வழங்கினார்.

கய் என்னவோ இந்த செல் வரிசை தயாரிப்பிலிருந்து தனக்கென ஏதும் பணம் சம்பாதித்துக்கொள்ளவில்லை எனினும், சில வருடங்களில் வணிக நிறுவனங்கள் உள்ளே புகுந்து உற்பத்தியை எடுத்துக்கொண்டு விட்டன. தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட ஹீலா உயிரணு சாம்பிள்கள் உலகம் முழுவதிலிருந்தும் வந்து குவிந்த ஓடர்களை பூர்த்தி செய்ததில் பலர் கோடீஸ்வரர்களானார்கள். ஆனால் ஹென்றியேட்டாவின் குடும்பத்திற்கு இதிலிருந்து இன்றுவரை ஒரு ரூபாய் கூடக் கிடைக்கவில்லை. அந்தக் கொடிய நோயை எதிர்த்துப்போராட கொடுக்கப்பட்ட சக்தி வாய்ந்த மருந்துகளையும் கதிர்வீச்சையும் தாங்காமல் மேன்மேலும் உடல்நலம் குறைந்து அந்த வருடமே 31 வயதேயான ஹென்றியேட்டா இறந்து போனார். ஆனால் அவர் உலகிற்கு தந்த ஹீலா உயிரணுக்களோ முதலில் அமெரிக்காவிலும் பின் ஐரோப்பாவிலும் அதன்பின் இந்தியா உட்பட பல ஆசிய நாடுகளிலும் தொடர்ந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இன்றும் வளர்ந்து கொண்டு இருக்கின்றன.

(தொடரும்)

# சல்லாபமும் இலக்கியமும்

- ஜெயமோகன் -



தி.ஜானகிராமனின் அம்மாவந்தாள், மோகமுள், அன்பே ஆரமுதே, செம்பருத்தி, மலர்மஞ்சம் அனைத்துமே ஆண் பெண் உறவைப்பற்றிய நாவல்கள். அவற்றின் பக்கங்களில் பெரும்பகுதி ஊமைக்காமத்தின் பொருமல்களும் சல்லாபமும்தான் நிறைந்திருக்கிறது என இன்று வாசிக்கும் எவரும் உணரலாம்.

தி.ஜானகிராமன் பல முக்கியமான சிறுகதைகளை எழுதியிருக்கிறார். ஒரு சிறுகதையாசிரியனாக அவரது இடத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆனால் அவரது நாவல்களில் மோகமுள் அம்மாவந்தாள் இரண்டும் தவிர பிறவற்றை வளவளவென நீண்டு செல்லும் வெற்றுச்சல்லாபச் சித்திரங்கள், இலக்கியத்தரமற்றவை என்றே எண்ணுகிறேன்.

வெளிப்படுத்தப்படாத காமம் (மோகமுள், செம்பருத்தி) பொருந்தாக்காமம் (அன்பே ஆரமுதே, அம்மாவந்தாள்) என்றுதான் தி.ஜானகிராமன் வாழ்நாள் முழுக்க பெரும் பக்கங்களுக்கு எழுதியிருக்கிறார். பெரும்பாலான பக்கங்கள் காமம் கொண்ட கதைமாந்தர் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். எந்த உளவியல் ஆழமும் தரிசனமும் வெளிப்படுவதில்லை. மறைத்தும் தெளிந்தும் வெளிப்படுத்தப்படும் எளிய காமம் மட்டுமே.

அவற்றை ஏன் அவர் ஆனந்தவிகடன் கல்கி போன்ற பேரிதழ்களில் மீளமீள எழுதினார்? அதற்கு வாசகர்கள் இருந்தனர். அவர்கள் எழுதும்படி கோரினர். அவர் அவர்களை திரும்பத்திரும்ப திருப்திப் படுத்திக்கொண்டிருந்தார். அவர்கள் அதை இலக்கியம் என்று கொண்டாடினர். திரும்பத்திரும்ப சப்புக்கொட்டி இரசித்தனர். இலக்கிய இரசனை என்பது இப்படி மாயக்காமத்தை இலக்கிய மாறுவேடம் போட்டு இரசிப்பது அல்ல. அதன் சவால்களும் சாத்தியங்களும் பிரம்மாண்டமானவை. நாவல் என்பதோ காவியத்தையும் வெல்லும் நவீன இலக்கிய வடிவம். எந்தப்பொருளில் போரும் அமைதியும் அல்லது தனிமையின் நூறுவருடங்களை நாவல் என்கிறோமோ அந்தப் பொருளில் ஜானகிராமனின் நாவல்களை நாவல்கள் எனச் சொல்லமுடியாது.

ஒருபோதும் அசோகமித்திரன் செய்யாதது இவ்வகை எழுத்து. அதுவே அசோகமித்திரனை பெரும்படைப்பாளியாக்குகிறது. அசோகமித்திரனுடன் ஜானகிராமனை ஒப்பிட்டால் இப்படித்தான் சொல்லமுடியும். அசோகமித்திரன் தமிழ் கண்ட பேரிலக்கியவாதி. ஜானகிராமன் நல்ல கதைகளை எழுதிய, சற்று மேம்பட்ட வணிக எழுத்தாளர்

என் வினா, ஏன் தமிழில் இந்த ஆண் பெண் சல்லாபம் மட்டும் இலக்கியத்தின் மையச்சரடாக உள்ளது, ஏன் மீண்டும் மீண்டும் அது ஒரு முதன்மையான கலைநுட்பம் என நம் இலக்கியவாசகர்களில் ஒருசாராரால் கருதப்படுகிறது என்பதே.

வண்ணநிலவன் போன்றவர்களில் கு.ப.ரா வில் தொடங்கி ஜானகிராமனிலும் லா.ச.ரா்விலும் மேலோங்கிய அந்த சல்லாபம் என்னும் கூறு மையக்கூறாக வெளிப்படுவதன் சமூக- உளவியல் காரணியையே நான் சுட்டிக்காட்டுகிறேன். மீண்டும் மீண்டும் அந்த "மோந்துபார்த்து விலகும்", காமம் ஏன் நம் பேசுபொருளாக இருக்கிறது என.

வண்ணநிலவன் எழுதியவற்றில் பெரும்பகுதி ஊமைக்காமம் சார்ந்தவை. அவையே இங்கு இல்க்கியத்தை கொஞ்சம் செறிவான குமுதம் கதையாக நினைத்த வாசகர்களால் கொண்டாடப்பட்டவை. தி.ஜானகிராமனையும் லா.ச.ராமாமிருதத்தையும் இந்த அம்சத்தை கலையழகுடன் எழுதிய படைப்பாளிகள் என்னும்போது வண்ணநிலவனை வணிக இதழ்களில் பாலகுமாரனும் தேவகோட்டை வா மூர்த்தியும் கார்த்திகா ராஜ்குமாரும் எழுதியவற்றை சிற்றிதழ் மொழியில் எழுதியவர் என்றே உறுதியாக மதிப்பிடுவேன். இவற்றை அற்ப எழுத்து என உணரமுடியாத ஒரு வாசகனால் உலக இலக்கியத்தின் எந்தப் பகுதியையும் உள்வாங்க முடியாது. கனமும் ஆழமும் கொண்ட ஆக்கங்களுக்குள் நுழையவும் முடியாது.

இந்த கறாரான மனநிலையுடன் இவர்களை நான் நிராகரிப்பது ஏன் நம்மால் உலகின் முதன்மையான இலக்கியங்களை வாசிக்க முடியாமலிருக்கிறது என்ற வினாவில் இருந்து எழுந்த கவலையால்தான். இன்று தல்ஸ்தோயும் தஸ்தயேவ்ஸ்கியும் எழுதிய பேரிலக்கியங்கள் தமிழில் கிடைக்கின்றன. வங்க, கன்னட, உருது பேரிலக்கியங்கள் கிடைக்கின்றன. உலகமொழிகளில் இருந்து இலக்கியங்கள் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. அவையெல்லாமே இந்த தித்திப்புச்சுவை தேடும் நாக்குகளுக்கு உவப்பாக இல்லை என்பதனால்தான்.

இலக்கியம் என்பது வேறு என்ற போதத்தை நாம் அடையாமல் முன்னோக்கி ஓரடி எடுத்து வைக்கமுடியாது. சென்ற நாட்களில் இந்த அசட்டுச்சுவையை இலக்கியமாக எண்ணிக்கொண்டிருந்தவர்களை (அதற்கான காரணங்கள் அவர்களுக்கு இருந்தன. தெருவில் நடக்கையில் சாளரம் வழியாக தெரியும் பக்கத்துவீட்டுப் பெண்ணின் முகத்தின் பாதியைப் பார்ப்பதையே காதல் சாகசமாகக் கொண்ட ஒரு தலைமுறை அவர்கள்) தாண்டிச்செல்ல வேண்டியிருக்கிறது

நான் இன்றைய படைப்பாளிகளைச் சுட்டிக்காட்டுவது ஒரே நோக்கில்தான். தமிழிலக்கியத்தை மூன்று தலைமுறைக்காலம் பீடித்திருந்த இந்த ஊமைக்காமம் எப்படி சட்டென்று விலகிச்சென்றது என்று சுட்டுவதற்காக.

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

‘Best year of one’s life’ எதுவென்றால் அது பள்ளிப்பருவம்தான்.

# எங்கே போகிறது எமது சந்ததி...?

ஏனென்றால் பிள்ளைகளின் வாழ்க்கையை, எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பருவம் இது. இந்தப் பருவத்தை முறையாகப் பயன்படுத்துபவர்கள் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்ய முடியும். தடுமாறுபவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தொலைக்க நேரிடும். எதிர்காலம் என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கும்.

பொறுப்பற்ற தான்தோன்றித்தனமான வாழ்க்கையை வாழ நேரிடும்.பள்ளிப் பருவ காலத்தில் பிள்ளைகளின் வாழ்க்கையைத் தீர்மானிப்பது பள்ளியும், படிப்பும் மட்டுமே அல்ல. அதையும் தாண்டி பள்ளி தவிர்ந்த வெளியில் இனங்கண்டு கொள்ள வேண்டும். அடுத்து, அந்த ஆற்றலை வளர்த்துக் கொள்ள என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்துக் களம் இறங்கவேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு தனித்திறமை கண்டிப்பாக உள்ளது. திறமையும் ஆற்றலும் ஒருவருக்கொருவர் வேறுபடும். அவ்வளவுதான். திறமையும் ஆற்றலும் உடலை மட்டும் பொறுத்தது அன்று. அது ஒவ்வொரு மாணவரின் உள்ளத்தையும் அறிவையும் பொறுத்தது. எந்த ஒரு மாணவர் தன்னிடம் உள்ள ஆற்றலை அடையாளம் கண்டு அதன்மூலம் தன் திறமையை வெளிக்கொண்டு வருகிறாரோ அவரே வெற்றி காண்பார்.

செய்கின்ற தொழில் எதுவாயினும் அதில் தன் திறன் வெளிப்படுமாறு தன்னை உயர்த்திக்கொள்ளல் என்பதே உயர்வுக்கான வழியாகும். இது பள்ளி மாணவர்களுக்கு மிகவும் பொருந்தும். பொதுவாகவே பள்ளியைத் தவிர்த்து வெளி இடங்களில் நடக்கும் செயல்களினால் கவரப்பட்டு தடுமாறாமல் இடங்களில் அவர்கள் நடந்துகொள்ளும் முறை, ஒழுக்கம், நேர்மை, தன்னம்பிக்கை மற்றும் எதிலும் கவனம் சிதறாமை போன்றனவும் மிக முக்கியம். நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒவ்வொரு மாணவனும் தன்னை அறிதல் வேண்டும். தன்னை அறிதல் என்பது ஒவ்வொரு மாணவரும் தங்கள் குடும்பச் சூழ்நிலை, மாணவரான தன்னுடைய கடமை இவற்றைத் தெளிவாக அறிந்து கொண்டு இருப்பது.

மேலும் மாணவர்கள் தங்களுக்குள்ளே இருக்கும் திறமைகளை முதலில் இனங்கண்டு...

இருக்க மாணவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும்.சில பிள்ளைகள் தன் வயதுக்கு மீறிய சிலருடன் நட்புக் கொண்டாடுவார்கள். இதை “Morbid Relationship” என்று சொல்லலாம். இத்தகைய நட்பினால் சிறு வயதிலேயே சில தேவையற்ற கெட்ட பழக்கவழக்கத்திற்குப் பிள்ளைகள் அடிமையாகின்றார்கள். பெண் குழந்தைகள் இந்த விடயத்தில் மேலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெளி இடங்களில் அறிமுகமில்லாத நபர்கள் உங்களிடம் பேச முற்படுவர். உங்களின் உள் உணர்வு (Intution) பேச்சை வளர்க்காதே என்றுதான் சொல்லும். ஆனால் சிலசமயம் நாகரிகம் காரணமாக நம் உள் உணர்வைப் புறக்கணிதது பேச்சை வளர்த்தால் அது ஆபத்தில் கொண்டுவிடும். அடுத்ததாக இணையத் தளங்களில் வரும் ஆபாச வலைத் தளங்களை நண்பர்களுடன் பார்ப்பது. இது முற்றிலும் தவறான பழக்கம். தன் அறிவை இழந்து சுயசிந்தனையைத் தானே மழுங்கடித்துக் கொள்வது. மேலும் சிறு வயதிலேயே தேவையற்ற பாலியல் சிந்தனைகளை வளர்த்துக் கொண்டு படிப்பிலிருந்து கவனம் சிதறி வாழ்க்கையைத் தொலைக்க நேரிடும். பெற்றோர்கள்தான் தங்கள் பிள்ளைகளின் நட்பு வட்டாரத்தைப் பற்றியும், பிள்ளைகள் அதிகமான நேரத்தை எங்கு, யாரிடம் செலவிடுகின்றார்கள் என்பதைப் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அடுத்தது தொலைபேசி. இதன்மீது மாணவர்களுக்கு இருக்கும் ஆர்வம். தன் தாய், தந்தை வருமானத்தையும் மீறி குடும்பச் சூழ்நிலையை மறந்து எவ்வளவு விலைகொடுத்தும் ‘Cell Phone’ வாங்க பெற்றோரை வற்புறுத்தும் பிள்ளைகள் ஏராளம்.

ஆண், பெண் நண்பர்களுடன் காரணமில்லாமல் உரையாடலை வளர்த்துக் கொண்டு பின் தேவையில்லாத பல பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள். பெற்றோர் அவசியம் தங்கள் பிள்ளைகளின் எதிர்த்தரப்பிலிருந்து பேசுவது யார் என்பதையும் தெரிந்து வைத்திருக்கவேண்டும். பெரும்பாலான மாணவர்கள் இன்று போதை மருந்துகளுக்கு அடிமையாகி உள்ளனர். சங்கிலித் தொடர்போல ஒரு பிள்ளையிடம் இருந்து இன்னொருவருக்கென வெகு சுலபமாகப் பரவி வருகிறது. போதைக்கு அடிமையான மாணவர்கள் பெற்றோரிடமும், குடும்ப உறுப்பினர்களிடமுமிருந்து விலகி, தன்னை மறக்கும் சூழ்நிலைக்கு வந்து விடுவார்கள். அதனால் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வாழ்க்கையைத் தொலைக்கின்றார்கள்.

**‘Best year of one’s life’ எதுவென்றால் அது பள்ளிப்பருவம்தான்.**

மாணவர்கள் அனைவரும் ஒன்றை மட்டும் கவனித்துக்கொள்ளுங்கள். நீங்கள் செய்யும் தவறு, பின் தவறை மறைக்க மேற்கொள்ளும் முயற்சிகள் உங்கள் மனதில் மிருகத்தனத்தை மெல்ல மெல்லக் குடியேறச் செய்து விடுகின்றது. அதனால் உங்களிடம் உள்ள மனிதத்தன்மை வெளியேறி விடும. இறுதிவரை தவறைத்திருத்திக் கொள்ளாவிடில் முழுக்க முழுக்க மிருகத்தனத்திற்கு நீங்கள் ஆளாக நேரிடும் மாணவர்கள் தன் பெற்றோருடன் நல்ல ஒரு புரிதலை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். பள்ளி மற்றும் வெளியில் ஏற்படும் அனுபவங்களைப் பெற்றோருடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களின் துணையோடு உங்கள் வாழ்க்கையை வளமானதாக்கிக் கொள்ளுங்கள்.

---



## புதிர்ப்போட்டி 80

அனுப்பவேண்டிய முகவரி
புதிர்ப்போட்டி
இல: ----------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

கீழ்வரும் எண் தொடர்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட ஒரு விதியை ஆதாரமாகக் கொண்டமைந்தவை. அதே விதியைப் பின்பற்றி ஒவ்வோர் எண் தொடரிலும் கீறிட்ட இடத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.

1) 4, 5, 7, 11, 19, ..........
2) 33, 44, 55, 57, 68, ..........
3) 6, 8, 10, 12, 30, 56, 90, ..........
4) 5, 6, 13, 14, 15, 31, 32, 33, ..........
5) 4, 5, 18, 19, 20, 78, 79, 80, ..........
6) 3/12, 5/30, 7/56, 9/90, ..........
7) 6, 2(16), 6, 1(7), 7, 3(30), 8, 1(..........)
8) 1028, 12 (144), 512, 6 (48), 1000, 9 (90), 216, 3(..........)
9) 2,2 (12), 3,3 (36), 4,4 (80), 6,6 (......)
10) 789, 798, 879, 978, 987, ............
11) 4, 2, 6, 8, 4, 7, 12, 8, 8, ............
12) 45, 90, 30, 120, 24, .........

கீறிட்ட இடங்களை நிரப்புக.

13) 6, 8, 9, ......., 12, ......., 15
14) ......., 24, 29, ......., 33, 34, 35
15) 1, 3, 5, ......., 9, 12, 13, ......., 21, 22
16) 1, 2, ......., 4, 6, ......., 10, 13, 16
17) 0.09, ......., 0.25, 0.5, ......., 0.7

கீழே தரப்பட்டுள்ள ஆங்கில நெடுங்கணக்கு வரிசைகள் திட்டவட்டமான விதிக்கிணங்க ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விடை தருக.

18) Z, X, Y, W, T, ............
19) A, B, B, A, C, C, A, E, ............
20) B, B, D, H, N, V, D, J, N, P, ..............
21) Z, Z, Y, Z, Y, X, Z, Y, X, ?W, Z, Y, X, W, ..........
22) B, T, D, V, F, X, H, Z, J, ...............
23) B, D, H, P, F, L, ..............
24) a/z, x/c, e/v, t/g, .........
25) b/x, u/d, f/r, o/h, ...............

## சென்றவார விடைகள்

1) 35 - 19 x2 -3
2) ஒன்றுவிட்ட எண்களின் வித்தியாசம்
3) 132 = 12 x 11
4) 467 முதல் இரு எண்களின் கூட்டுத் தொகையுடன் 2 ஐக் கூட்டுதல்.
5) 318 முதல் இரு எண்களைக் கூட்டி வரும் பெறுமதிய்ை 2 ஆல் பெருக்குதல்
6) 11/132 மேலுள்ள் எண்ணை அதற்கடுத்த எண்ணால் பெருக்குதல்.
7) 9 முதல் இரு எண்களைப் பெருக்குவதுடன் 2 ஆம் எண்ணின் வர்க்கத்தையும் கூட்டுதல்
8) 18 முதலாவது எண்களின் கன மூலத்தை அருகிலுள்ள எண்ணால் பெருக்குதல்.
9) 252 x 6 x6 x 7
10) 897 எண்களை மாற்றி எழுதுதல்.
11) 16 மும்மூன்று எண்களாக தொடர்பை அவதானிக்குக.
12) 144 (x 2, x 4, + 5, x 6)
13) 11,
14 ஒன்றுவிட்ட 6, 4 என்ற வித்தியாசத்தால் குறைதல்.
15) 6, 17 எண்களுக்கிடையிலான வர்க்க மூலமும், வர்க்கமும்.

36) 3
37) 4
38) 1
39) 2

### குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 வ | 3 சா | ய | ம் | | 4 சோ | 5 தி |
| 6 வே | த | ம் | | | 7 பே | ச் | சு |
| 8 க | ம் | பி | | 9 த | ரி | சி | |
| ம் | | 10 யா | 11 மி | னி | | | 12 மெ |
| | 13 அ | | கி | | | 14 நெ | ய் |
| 19 சி | ப் | ப | ந் | தி | | | ப் |
| ம் | பி | | த | | 16 வெ | ண் | பா |
| 17 பு | ள் | | 18 லை | ட | ன் | | டு |

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ----------------------------
பாடசாலை :- ----------------------------
கல்வி கற்கும் தரம் :- ----------------------------
வீட்டு முகவரி :- ----------------------------
தொ.பேசி இலக்கம் :- ----------------------------

# அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை யாழ்.மாவட்டத்திலும் அமுல்

## அரச-அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரிசிக்கான கட்டுப்பாட்டுவிலை யாழ்.மாவட்டத்திலும் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளதாக யாழ்.மாவட்ட அரசஅதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டசெயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.


அரிசி மீதான நிர்ணயவிலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதன்படி ஒரு கிலோ வெள்ளைப்பச்சை அரிசி 66ரூபாவுக்கும், சிவப்பு பச்சை அரிசி 60 ரூபாவுக்கும், வெள்ளை நாட்டரிசி 68 ரூபாவுக்கும், சிவப்பு நாட்டரிசி 66ரூபாவுக்கும் சம்பா அரிசி 77 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தா.

மேலும் இந்த அறிவித்தலுக்கு அமைவாக வர்த்தகர்கள் தமது நிறுவனங்களின் விற்பனைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தும் நடவடிக்கையில் விலை நிர்ணயசபை அலுவலர்களும்,விலைக்கட்டுப்பாட்டு அதிகாரசபை அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

இதேவேளை உலர் உணவுத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் நலிவுற்றவர்களுக்காக வழங்கப்படும் காசுச் சிட்டைக்கும் மேற்படி குறிப்பிட்ட விலைகளின் அடிப்படையிலேயே பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அரிசியை விநியோகிக்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 600இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு காசுச்சிட்டை வழங்கப்பட்டுள்ளது என்றார். (25)

# செல்வமலர் சுந்தரநேசனின் மணிவிழாச் சிறப்பு



(வடமராட்சி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அதிபர்.திருமதி.செல்வமலர் சுந்தரநேசனின் மணிவிழா பாடசாலை மண்டபத்தில் மணிவிழாக் குழுத்தலைவர். எஸ். கிருஸ்ண சிவம் தலைமையில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது.

பருத்தித்துறை கோட்டடிச் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை ஆராதனைகளைத்தொடர்ந்து விழா நாயகியும் நாயகனும் விருந்தினர்கள் சகிதம் மங்களவாத்தியம் இசை முழங்க ஊர்வலமாக பாடசாலை வரை அழைத்து வரப்பட்டனர்.

பாடசாலை விசேட மண்டபத்தில் நடைபெற்ற இந்தநிகழ்வில் சிவஸ்ரீ.தியாகசோமஸ்கந்த ராஜாக குருக்கள், அருட்தநந்தை றெஜினோல்ட் ஈஸ்வரன் ஆகியோர் ஆசிவழங்கினர்

மணிவிழாக்குழுச்செயலாளர் திருமதி.இந்திராணி ஸ்ரீரங்கன் வரவேற்புரை வழங்கினார். மலராசிரியர். பீ.ரதீஸ் நூல் அறிமுகவுரை நிகழ்த்தினார்.யாழ்.பல்கலைக்கழக சட்டபீடத்லைவர் கலாநிதி ஸ்ரீ கல்ாமணி விழா நாயகியிடம் மணிவிழா மலரைக் கையளித்து வெளியீட்டுரையை நிகழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ் சிவலிங்கராசா நயப்புரை வழங்கினார்.

பிரமுகர்கள்,கல்வியியலாளர்கள், விழாநாயகனைய்யும், நாயகியையும் கௌரவித்து பொன்னாடை போர்த்தினர் விழாநாயகர்களின் வரவேற்புரையையடுத்து நன்றியுரையை ஆசிரியர் திருமதி. ஏ.பாலேந்திரன் வழங்கினார். (01)

# க.பொ.த (சா/த) பெறுபேறுகள் சில பாடசாலை முடிவுகள்

வடமராட்சிகிழக்கு அம்பன் அ.த.க. பாடசாலை

இ.மஞ்சிகா 6எ,2பி,சி, தி.நிசாந்தன் 5எ,2பி,சி,எஸ், த. தயாரூபன் 3எ,3பி,2சி க.சுதனா 3எ, பி,4சி,எஸ் தி.சருபிகா 3எ,2பி,3சி,எஸ், க.சிந்துயா 2எ,2பி,2சி,2எஸ் சி.யசோதா 2ஏ,3சி,4எஸ், ஜெ.தேவதாஸ் எ,பி,3சி,3எஸ், ர.ஜெயகரன் எ,2பி,4சி,2எஸ், ப.டனுஜா எ,பி,3சி,எஸ், கே.தர்சிகா எ,பி,சி,4எஸ், இ.மதுசனா எ,2பி,3சி,2எஸ், ம.கவிதா 2பி,3சி, 3எஸ், லோ.குமணன் எ,பி,2சி,4எஸ் து.கிருஸ்ணபவான் எ,பி,சி,5எஸ்(01)

யாழ். நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்

அருட்செல்வம் உதயமாலினி 8எ,எஸ், குணவண்ணண் திவ்வியா 7எ,பி,எஸ் பரமநாதன் பிரதாபன் 3எ,3பி,2சி கணேசலிங்கம் விந்துஷா 2எ,4பி,சி,எஸ், துயாபரன் கீர்த்தனா எ,பி,2சி,3எஸ், பாலேந்திரா சஞ்சிதா எ,2பி,சி,3எஸ், கந்தசாமி விசித்திரா ஏ,4சி,3எஸ் திருக்குமரன் தாரணி எ,பி,4சி,2எஸ் பஞ்சாட்சரம் சிவசாந்தன் எ,4சி,எஸ், கருணாகரன் நவஜெனனி எ,2சி,3எஸ், (175)

பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள் உயர்தரப்பாடசாலை

(தமிழ்மொழிமூலம்) எஸ்.சோவிகா 9எ, ஜே.றஜீவினி 8ஏ,பி எஸ்.வனஜா 8எ,சி, விவேகா 8ஏ,பி, கோ.ஆர்த்திகா 8ஏ,பி, ஏ.டெனிகா 8ஏ,எஸ் எஸ்.ஜெயலஷ்மி 7ஏ,பி,சி, வி.சங்கீதா 7ஏ,2பி, வி.அபிநயா 7ஏ,பி,சி யூ.கிரிசாந்தி 7ஏ,பி,சி, வி.விதுனா 7ஏ,பி,சி, என்.மனோஜா 7ஏ,பி,எஸ் எம்.ஆராதனா 6ஏ,2பி,சி, ஏ.சங்கீதா 6ஏ,பி,சி, கே.கீர்த்தனா 6எ,2பி,சி, கே. மாதுளா 6ஏ,2பி,சி எஸ்.சிந்துஜா 6ஏ,பி,சி, பி.துஷ்யந்தி 6ஏ,2பி,சி, கே.கௌதமி 6ஏ,பி,2சி, எஸ். ஸ்ரீசங்கவி 6ஏ,பி,சி, எஸ்.எம் லக்ஷிகா 5எ,4பி, ஜே.ஐதுஷா 5ஏ,3பி,சி, வி.கோபனா 5ஏ,3பி,எஸ், பி.மதுஷா 5ஏ,3பி,எஸ், ஜே.ஜெயந் 5ஏ,2பி,2சி, ஏ.பிரிந்திகா 5எ,3பி,எஸ் (ஆங்கிலமொழிமூலம்)எஸ்.சுஜீவா 9எ, ஆர்.நிவேந்தினி 9எ,யூ.நிவிதா 9எ, எஸ். மஜிதா 8எ,பி, ஆர்.ஜஸ்ரிகா 8எ,சி. எல்.லாவண்யா 8எ,சி, பீ.ஆரணி 8எ, எஸ், ஆர் கன்ஜா 7எ, 2பி, பி. துஷ்யந்தினி 7எ,பி, எஸ் எஸ். கஸ்தூரி 6எ,2பி,சி, எஸ்.புவிதா 6எ,2பி, எஸ் விதர்சிகா 5எ,3பி,சி, ரீ.லஷ்மி 5எ,3பி,சி (01)

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மணவாளக் கோலவிழா

(பருத்தித்துறை)

மேலைப் புலோலி வளர் குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்பாள் ஆலய மணவாளக் கோல விழாவும் 1008சங்காபிஷேகமும் எதிர்வரும் மேமாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி நவசக்தி அர்ச்சனையும், எதிர்வரும் மே மாதம் 1ஆம் திகதி திருவிளக்குப் பூசையும் 2ஆம் திகதி வில்வஅர்ச்சனையும் நடைபெறும். 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு விசேட பூசையுடன் வைரவர் சாந்தி இடம்பெறும் (01)

# வாரம் ஒரு காரம்

## ஏதோ பேசுகின்றோம் ஆனால் ஏதேதோ நடக்கப்போகின்றது

உண்மைக்கும், யதார்த்தத்திற்கும் புறம்பான நிலையில் அரசியல் நாடகங்களை அரங்கேற்றுவோரே இலங்கையரசியலில் மக்கள் ஆணையினை வென்று நிலைக்கக் கூடிய தன்மை தலைதூக்கியுள்ளது. இந்திய அரசியலைப் போன்று குப்பைத்தனமான வாக்குரிமைத் தெரிவுகள் இலங்கையரசியலிலும் தலைதூக்கியுள்ளன. அர்த்தமற்ற பிரசாரங்களிற்கு அடிபணியும் நிலை உருவெடுத்து, யதார்த்த சிந்தனைகளுடன் கருத்துக்களை வெளியிடுவோர்க்கு கட்சிகளில் இடமில்லாத நிலை உருவாகியுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித்தலைவராக செயற்பட்ட பிரபல சட்டவல்லுனரும் சட்டத்தரணியுமான என்.குருபரனை அப்பதவியில் இருந்து விலக்கி இருக்கிறார்கள். காரணம், யதார்த்த பூர்வமான, நடைமுறைக்கு சாத்தியமான சில கருத்துக்களை மக்களின் விடிவிற்காக முன்வைத்தமையே ஆகும்.

இலங்கையில் இடம்பெறும் அர்த்தமற்ற அரசியல் பக்கங்களால் அப்பாவித் தமிழ்மக்களின் தீர்வின் திசைமுகங்கள் திரைபோட்டு மறைக்கப்படுகின்றன. இத்திரையினை ஒருசிலர் இணைந்து விலக்கும் பட்சத்தில் பல அரசியல் வாதிகளின் அம்மணங்கள் அந்தரத்தில் ஆடும்.

அதனை அந்த அரசியல் வாதிகளே புரிந்து முற்காப்பு நடவடிக்கைகளாக தமிழர் தலைவிதியை மாற்ற தலையெடுக்கும் கட்சிக்காரரை கட்சியில் இருந்து நீக்கி தற்காப்பைத் தமதாக்கிக் கொள்கின்றனர். இதனடிப்படையில்தான் மனோவின் கட்சியில் இருந்து குருபரன் நீக்கப்பட்டுள்ளார். இக்கட்சி வெளியிட்ட அறிக்கையின் படி கட்சியின் கூட்டுப் பொறுப்பை மீறி அரசைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கையில் குருபரன் ஈடுபட்டுள்ளாராம் இதன் அடிப்படையில் தான் இம்முடிவைக் கட்சி எடுத்துள்ளதாம். இலங்கையில் எது சாத்தியப்படும் எது சாத்தியப்படாது என யதார்த்தபூர்வமாக சிந்திக்கும் அரசியல் வாதிகளிற்கு அரசின் ஒட்டுக்குழுக்கள் என்கின்ற பட்டத்தை சூட்டிவிட்டு வெறும் வீரவசனப் பம்மாத்து அரசியலின் பின்னால் போவதால் தான் இதுவரை தீர்வின் திசைமுகங்கள் எவர்க்கும் தெரியாது நகர்கின்றது.

இது ஒருபறமிருக்க, தமிழர்களிற்கு இறுதித்தீர்வு என்றோ ஒருநாள் கிடைக்குமாம் அதை சர்வதேசம் என்றோ ஒருநாள் பெற்றுத்தருமாம் இவ்வாறு கூறுகின்றார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா. என்றோ ஒருநாள் என்கின்ற வார்த்தைதான் அன்று தொட்டு இன்றுவரை தமிழர்க்கு நிச்சமாச்சு. அது இந்த வழியில் நின்றால் என்றுமே கிடைக்கா தென்பதும் அவருக்கே தெரியும் இருந்தும் அவர் இவ்வாறு பேசாவிட்டால் குருபரனின் நிலைதான் அவரிற்கும் மிஞ்சும்.

**அரசதரப்பு ராஜதந்திரத்தை வெல்லும் விதமாக அரசோடு பேசி அதிகாரங்களை வென்றெடுக்கும் தீர்வொன்றுதான் இலங்கையில் சாத்தியப்படும்.**

அரசோடு பேசி அதிகாரங்களை வென்றெடுக்கும் தீர்வொன்றுதான் இலங்கையில் சாத்தியப்படும். ஆனால் இது அரசெதிர்ப்பு எனும் தமிழ்மக்களின் பூர்வீகக் கொள்கைக்கு முரணானது. இருந்தும் இதைத் தாண்டி எவர் முன்னேறுகின்றனரோ அவர்களால் தான் இலங்கை வாழ் தமிழ்மக்களிற்கான ஓர் அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

தற்போது நிலை மோசமாகி வருகின்றது. வெளிநாட்டில் இருந்து முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இலங்கையின் அரசியல் அமைப்பை மீறி சாட்சியமளிப்போரக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவையும் இரகசிய சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கையாக இருக்குமாம். இதுதான் நாம் எல்லோரும் எதிர்பார்த்த தீர்வா? மனித உரிமை மீறல்களிற்கான நியாயங்களை சர்வதேசத்திடம் கோரினோம், அந்தக் கோரிக்கையே தற்போது மனித உரிமை மீறல்களை உரு வாக்கும் நிலைமையை உருவாக்கியுள்ளது. ஈராக்கின் நிலை இலங்கையிலும் உருவாகப் போகின்றதா? இதுதானா தமிழ்க் கூட்டமைப்பு எதிர்பார்த்த தீர்வு?....

## விவாகரத்து செய்த மனைவியை தொந்தரவு செய்தவருக்கு சிறை

(லண்டன்)

பிரித்தானியாவில் விவாகரத்துப் பெற்ற தன் மனைவியை தொடர்ந்து தொந்தரவு செய்து வந்த இலங்கையர் ஒருவருக்கு 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


பிரித்தானியாவின் நோத் வேல்ஸ் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. மனைவியின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக் பிரித்தானியா சென்ற இவர், இரண்டு மாதங்களில் விவாகரத்துப் பெற்றுள்ளார்.

விவாகரத்துக் கார்ரணமாக குறித்த இளைஞர் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்ததாக வெளிநாட்டு ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

26 வயதான இளைஞர் ஒருவருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட,கிழக்கில் தொடர்ந்தும் நீடித்து வருகிறது வறுமை

### பிரிட்டன் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு கிழக்கில் தொடர்ந்தும வறுமை நீடித்து வருவதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது. மிலேனிய அபிவிருத்தி இலக்குகளில் பல பூர்த்தி செய்யப்ட்டுள்ள போதிலும், வறுமை நீடித்து வருவதாக பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அலன் டொன்கன தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையாக தமிழர்கள் வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கில் வறுமை நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள் ளார்.

தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏனைய மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## 2 ஆம் உலகப் போரில் பங்கேற்ற இராணுவவீரர் அக்கராயனில் மரணம்

(அக்கராயன்)

இரண்டாம் உலகப் போரில் பங்குகொண்ட இலங்கையைச் சேர்ந்த இராணுவ வீரர் அமிர்தலிங்கம்- குமாரசாமி கடந்த புதன்கிழமை 9ஆம் திகதி தனது 97ஆவது வயதில் அக்கராயனில் காலமானார்.

1916 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி மயிலிட்டியில் பிறந்த இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட் டைக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

1936ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் இராணுவத்தில் இணைந்து இத்தாலியில் உலக மகா யுத்தத்தில் பங்குகொண்டு 1946ஆம் ஆண்டு நாடு திரும்பியே இராணுவத்திலிருந்து விலகினார்.

அப்போதைய காலத்தில் யாழ்.குடாநாட்டில் வசித்ததோடு இராணுவத்தில் இருந்து விலகி தபால் நிலையத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றதோடு முதுமைக் காலத்தில் அக்கராயன் பகுதியில் வசித்து வந்தார். இவரின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம் பெற்றன

## அபிவிருத்தியில் முல்லை மாவட்டம் அமைச்சர் ரிஷாத் பெருமிதம்

(முல்லைத்தீவு)


கடந்த நான்கு வருடங்களில் கல்வி, கலாசாரம், தொழில் வாய்ப்பு, உற்பத்தி ரீதியாக பாரிய அபிவிருத்தியினை நோக்கி முல்லைத்தீவு மாவட்டம் வேகமாக முன்னேறிவருகின்றது என வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை முல்லைதீவு நகரில் பிரதேச சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட "வாழ்வின் எழுச்சி" என்ற புத்தாண்டு சந்தையை திறந்து வைக்கும் வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், இலங்கையில் கடந்த முப்பது வருடமாக நடைபெற்ற யுத்தத்தில் முல்லைத்தீவு மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்' அவர்களுடன் இணைந்து பல வேலைத்திட்டங்களை மேற் கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

## ஜின்னா புலமைப் பரிசில் கற்கை கோரப்படுகிறது விண்ணப்பம்



(மட்டக்களப்பு

ஜின்னா புலமைப் பரிசில் கற்கை நெறிக்கான விண்ணப் பங்களை இலங்கை உயர்தர மாணவர்களிடமிருந்து பாகிஸ்தான் அரசாங்கம் கோரியுள்ளது.

கடந்த ஒன்பது வருட காலமாக பாகிஸ்தான் அரசாங்கம் புலமைப் பரிசில் கற்கை நெறிக்காக இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைத் தனது இலங்கை தூதரகத்தின் மூலமாக கோரி வருகின்றது இதனபடி க.பொத.சாதாரண தரம், உயர்தர மாணவர்களிடமிருந்தே இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களிலிருந்து தகுதியான இறுதிப்பட்டியல் தயாரிக்கப் பட்டும் என பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விண்ணப் பங்களை இல. 42,44 புல்லர்ஸ் லேன் கொழும்பு 7 இல் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.pakistanhc.lk என்ற இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 29 ஆகும்.

## குடும்பநல மருத்துவ மாதுக்களின் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு

குடும்ப நல மருத்துவ மாதுக்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக ஊசிமருந்துகளை பெறமுடியாத சிறார்களுக்கு அரச மருத்துவமனைகளில் ஊசி மருந்து ஏற்றிக் கொள்ள முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியாகவுள்ள அரச மருத்துவமனைகளில், இதற கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. குடும்ப நல மருத்துவ மாதுக்களின் பணிப்புறக் கணிப்பு காரணமாக, ஊசி மருந்து ஏற்ற முடியாதுள்ளது. இது தொடர்பாக பல பிரதேசங்களிலிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள தாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச குடும்ப நல சங்கம் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க போராட்டத்திற்கு உடனடித் தீர்வு பெற்றுக் கொடுக் கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இல்லையெனில், மருத்துவ தொழிற்சங்கவியலாளர்களை இணைத்துக் கொண்டு பாரிய தொழில்சங்க போராட்டத்தை முன்எடுக்கவுள்ளதாக அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவீன் த சொய்சா தெரிவித்துள்ளார்.

## 300 மாணவர்களின் பெறுபேறு இடைநிறுத்தம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 300 மாணவர்களின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இவ்வாறு பெறுபேறுகள் வெளியிடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்காமை, மாணவர்கள் தொடர்பில் பரீட்சை மேற்பார்வையாளர்கள் செய்த முறைப்பாடுகள் போன்றன காரணமாக இவ்வாறு பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் நோக்கில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. விசாரணைகளின் பின்னர் பெறுபேறுகள் வெளியிடப்பட உள்ளன.

இன்னும் இரண்டு வாரங்களில் இந்தப் பெறுபேறுகளை வெளியிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலகை சுற்றிப் பார்க்க முற்பட்டவர் கைதானார்

தனது சொந்த விமானம் மூலம் உலகை வலம் வரும், சுவிட்சர்லாந்தின் விமானி ஒருவர் இந்தோனேஷிய விமானப் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இலங்கை விமான எல்லைக் குள்ளிருந்து இந்தோனேஷிய விமான எல்லைக்குள் சட்டவிரோதமான முறையில் உள் நுழைய முயற்சித்த குற்றச்சாட்டில் இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹய்ன்ஸ் பியேர் என்ற 65 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



எவ்வாறாயினும் இலங்கையிலிருந்து சிங்கப்பூர் நோக்கி பயணிக்கும்போது அநாவசியமாக தமது விமான எல்லைக் குள் பயணித்துள்ளதாக இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

ஹய்ன்ஸ் பியேர் இரண்டு வருடத்துக்கும் அதிக காலப்பகுதியில் 30 நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இவர் இலங்கைக்கான விஜயத்தின்போது தலதா மாளிகைக்கு விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## மது அருந்தும் நாடுகளில் இலங்கைக்கு 4 ஆம்இடம்

(கொழும்பு)

உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் நபர்கள் இருக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காம் இடத்தை வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் பிரஜைகளைக் கொண்ட நாடுகளின் வரிசையில் செக்குடியரசு முதலாம் இடத்தை வகிக்கின்றது.

இலங்கையைச் சேர்ந்த



பிரஜைகள் அதிகளவில் மதுபானம் அருந்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள் ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக இலங்கையில் மதுபான உற்பத்தியின் அளவும் உயர்வடைந்துள்ளது.

போதைப்பொருளுக்கு முற்றுப்புள்ளி என்ற அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு புறம்பான வகையில் மதுபான பயனபாடு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி அலுவலரின் வீட்டின் மீது கல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டின் மீது கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கல்வீச்சில் உத்தியோகத்தரின் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் இரண்டு உடைந்ததாக சுன்னாகம பொலிஸார் தெரிவித்தனர்.

உடுவில் பகுதியில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தரின் வீட்டின் மீதே இவ்வாறு கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என குறித்த அலுவலரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளினை மேற் கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கல்வி முரசின் பயிற்சி பரீட்சை -2014

## வெவ்வேறு தரங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள்

### தரம் - 07

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1). அங்கிகளின் அடிப்படை அலகு
1) இழையம் 2) அங்கம் 3) கலம் 4) தொகுதி

2. தலை, நெஞ்சு, வயிறு என மூன்று பகுதிகலான உடலைக் கொண்டது
1) மான் 2) நாய் 3) மனிதன் 4) கரப்பான் பூச்சி

3) மனித சிறுகுடலில் நீளம்
1) 6m 2) 5m 3) 4.5m 4) 7m

4) வளியில் உள்ள தூசிகள் அகற்றப்படும் சுவாசத்தொகுதியின் பகுதிகள்
1) மூக்குத் குழி 2) குரல்வளை
3) வாதனாளி 4) மூக்குக்குழியும் வாதனாளியும்

5) இதய அடிப்பு நிமிடத்திற்கு
1) 70 தடவைகள் 2) 80 தடவைகள்
3) 75 தடவைகள் 4) 72 தடவைகள்

6) உடற்தொகுதிகள் அனைத்தையும் ஒன்றினைத்து செயற்படுத்தும் தொகுதி
1) சமிபாட்டுத்தொகுதி 2) குருதிச்சுற்றோட்டத்தொகுதிகள்
3) கழிவகற்றும் தொகுதி 4) நரம்புத்தொகுதி

7) சுவாசப் பையினால் வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்
1) நீராவி 2) காபனீர்ரொட்சைட்டு
3) நீராவியும் காபனீர்ரொட்சைட்டும் 4) உப்பும் யூரியாவும்

8) நாடியையும் நாளத்தையும் இணைப்பது
1) இழையம் 2) கலம் 3) குருதி மயிர்த்துழையம் 4)தசை

9) தாவரத்தின் பிரதான இனப்பெருக்கத் தொகுதி
1) இலை 2) தண்டு 3) வேர் 4) பூ


10) முதலில் சமிபாடு ஆரம்பிப்பது
1) வாய்க்குழி 2) இரப்பையில் 3) சிறுகுடலில 4) களத்தில்

**பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக**
(காழ், சிறுநீரகம், யூரியா, இதயம், மணிக்கட்டு )

1. முக்கிய கழிவங்கம் ---------------------------------------- ஆகும்
2. வியர்வையில் காணப்படும் நைதரசன் கழிவுப்பொருள் -----------ஆகும்.
3. நீரையும் கனியுப்பையும் கடத்துவது ------------------------------ ஆகும்.
4. இதயத்துடிப்பை அறியும் உடற்பகுதி இடது ------------------- ஆகும்.
5. உடல்முழுவதும் ----------------------------------- குருதியைப் பரப்புகிறது.

5) உயிர்ச்சூழலுடன் தொடர்புடைய தோற்றப்பாடு அல்லாதது?
1) மாலை நேரத்தில் அகத்தியிலை கூம்புதல்
2) இரும்பு துருப்பிடித்தல்
3) விலங்குகள் கூட்டமாகத் திரிதல்
4) பூ அரும்புகள் மலர்தல்.

6) பின்வருவனவற்றுள் அரைச்சமச்சீர் உடைய விலங்கு எது?
1) 2) 3) 4)



7) தாவரங்களிற்கும் விலங்குகளிற்கும் பொதுவான இயல்பு அல்லாதது?
1) உணவு தயாரிப்பு 2) சுவாசம்
3) இனப்பெருக்கம் 4) வளர்ச்சி

8) மனித உடலின் வெப்பநிலையை கெல்வின் அளவுத்திட்டத்தில் குறிப்பது
1) 273 k 2) 37 k 3) 310 k 4) 300 k

9) சமச்சீர்த் தன்மை அற்ற விலங்கு
1) மனிதன் 2) ஒறலியா 3)அமீபா 4) நாய்

10) மாறா உடல் வெப்பநிலையைக் கொண்ட விலங்கு
1) தவளை 2) பாம்பு 3) பல்லி 4) மைனா

**02) சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

1) மண்ணெய் ஒரு சடப்பொருளாகும். ( )

2) தரைவாழ் விலங்குகளின் உடல் வெப்பநிலையை பேண உரோமம் உதவுகிறது. ( )

3) காகம் ஒரு தற்போசணி ஆகும். ( )

4) கழஞ்சு திணிணை அளக்க பயன்படும் எதேச்சையான அலகாகும் ( )

5) திமிங்கிலம் ஒரு நீர் வாழ் முலையூட்டியாகும். ( )


03)
1) அங்கிகளை பாகுபடுத்தப் பயன்படக்கூடிய முறை ஒன்றை குறிப்பிடுக.

2) இம்முறையைப் பயன்படுத்தி பாகுபடுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 2 தருக.

3) இம்முறையால் பாகுபடுத்துவதனால் கிடைக்கும் நன்மை [illegible] தருக.

04) கீழே தரப்பட்ட அங்கிகளை நீர் மேலே குறிப்பிட்ட முறையைப் பயன்படுத்தி பாகுபடுத்துக.


தும்பி, மனிதன், மீன், கிளி, மண்புழு





### தரம் - 06

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) நேரத்தை அளப்பதற்குரிய சர்வதேச அலகு எது?
1) நிமிடம் 2) செக்கன் 3) மணித்தியாலம் 4) கெல்வின்

2) 
அருகே காட்டப்பட்ட கண்ணாடிக் குற்றியின் தடிப்பை அளக்கப் பொருத்தமான அலகு எது?
1) m 2) cm 3) mm 4) km

3) 
தரப்பட்டுள்ள உபகரணத்தை பயன்படுத்தி அளக்கக்கூடிய திணிவு எது?
1) கல்லின் திணிவு
2) மருந்து வில்லையின் திணிவு
3) பால்மா பக்கற்றின் திணிவு
4) அரிசியின் திணிவு

4) பின்வருவனவற்றுள் இடத்தை அடைத்துக் கொள்ளக்கூடியது எது?
1) வெப்பம் 2) நீர் 3) மின்சாரம் 4) ஒலி

## தரம் -8

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக

1) 7, 11, 15, ---------- ------------- என்ற எண் கோலத்தில் அடுத்து வரும் இரு உறுப்புக்களை எழுதுக.

2) சுருக்குக $\frac{1}{7} + \frac{3}{7}$


3) 700 இன் நிரப்பி கோணம் யாது?

4) தீர்க்குக. $3x - 2 = 10$

5) 10 ஆவது முக்கோணி எண் யாது?

6) பொதுக் காரணியைக் காண்க. $6x - 9y$


7)




உருவிலிருந்து x இன் பெறுமானத்தைக் காண்க.

8) சமபக்க முக்கோணி ஒன்றின் சுற்றளவு 36 cm ஆகும். அதன் ஒருபக்க நீளத்தைக் காண்க.

9)




i) கோணம் a இற்குரிய ஒத்த கோணம்யாது?
ii) கோணம் c இற்குரிய ஒன்று விட்ட கோணம் யாது?

10) சுருக்குக (-8) + 5

11) அடைப்பு நீக்கிச் சுருக்குக 3( x + 2) + 5

12) இருபது முகியில் உள்ள
i) உச்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு?
ii) விளிம்புகளின் எண்ணிக்கை எவ்வளவு?


13) $\sqrt{784}$ இன் பெறுமானம் யாது?

14) 20 kg ஐ மெட்றிக் தொன்னில் (t) தருக.

15) (-2)3 இன் பெறுமானம் யாது?

16) $x = 3, y = 2$ எனின் $x^2 + y$ இன் பெறுமானம் யாது?

17)



உருவில் PQR நேர் கோடாகும்.

1) கோணம் a இற்கான அடுத்துள்ள கோணம் யாது?
2) $a + b + c$ இன் பெறுமதி யாது?


18) $\frac{3}{8}$ ஐ சத வீதமாகத் தருக.

19) a இன் 2 மடங்குடன் 5 ஐக் கூட்டுக. இக் கூற்றை அட்சரகணித கோவையாகத் தருக.

20) 16, 24, 20 என்பவற்றின் பொ.க.பெ.யைக் காண்க.

### பகுதி II

01) a) தரப்பட்ட உருவிலிருந்து




1. $A\hat{B}D$ எத்தனை பாகை?
2. $C\hat{B}D$ எத்தனை பாகை?
3. $A\hat{B}D + C\hat{B}D$ எத்தனை பாகை?
4. இதில் இருந்து நேர்கோட்டை பெயரிடுக.
5. $A\hat{B}F$ எத்தனை பாகை?
6. x இன் பெறுமானத்தைக் காண்க.

b) ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் உயரங்கள் பற்றிய விபரம் 9cm) இல் பின்வருமாறு
132, 140, 150, 133, 152, 141, 153, 142, 143, 135, 136, 144, 146, 145, 138

1. வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
2) மிகக்கூடிய உயரம் யாது?
3) மிகக் குறைந்த உயரம் யாது?
4) வீச்சு யாது?
5) இத்தரவுகளைத் தண்டு -இலை வரைபில் குறிக்குக.
6) 135 cm உயரத்திலும் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாகத் தருக.

02) a) 2, 5, 8, 11 ---------, ---------- என்ற எண் கோலத்தின்
1) அடுத்துள்ள உறுப்புகளுடைய வித்தியாசம் யாது?
2) பொது உறுப்பு யாது?
3) 15 ஆம் உறுப்பு யாது?
4) இக்கோலத்தில் 98 எத்தனையாம் உறுப்பாகும்.

b)
1) 7 ஆவது முக்கோணி எண் யாது?
2) 8 ஆவது முக்கோணி எண் யாது?
3) 7 ஆவது முக்கோணி எண்ணினதும், 8 ஆவது முக்கோணி எண்ணினதும் கூட்டுத்தொகை யாது?

## 06.04.2014 மற்றும் 08.04.2014, 10.04.2014 வெளியான பயிற்சி வினாக்களின் விடைகள்

### 11 ஏப்ரல் 2014 வெள்ளிக்கிழமை


| | | |
|---|---|---|
| 1) 3 | 7) 1 | 13) 1 |
| 2) 1 | 8) 2 | 14) 3 |
| 3) 3 | 9) 1 | 15) 1 |
| 4) 1 | 10) 2 | 16) 2 |
| 5) 1 | 11) 3 | 17) 1 |
| 6) 3 | 12) 3 | 18) 3 |

### 08 ஏப்ரல் 2014 செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| 1) 3 | 13) 2 |
| 2) 2 | 14) 2 |
| 3) 3 | 15) 2 |
| 4) 2 | 16) 2 |
| 5) 3 | 17) 1 |
| 6) A | 18) 2 |
| 7) 3 | 19) 2 |
| 8) 3 | 20) 1 |
| 9) நாதஸ்வரம் | 21) 3 |
| 10) 2 | 22) 2 |
| 11) 2 | 23) 3 |
| 12) 1 | |

### 06 ஏப்ரல் 2014 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| 1) 1 | 8) |
| 2) i) P ii) Q | |
| 3) 9 | 9) |
| 4) 8.20 மணி | |
| 5) 450 | 10) 6/900ml/6900ml |
| 6) 231 | |
| 7) i) புதன் | 11) 3.3 cm / 3.16 cm |
| ii) வியாழன் | |
| iii) 160/= | 12) 96cm² |
| iv) 36 | |
| v) 16 | 13) 22 km |
| vi) 196 | |
| viii) திங்கள் - 20 | 14) கட்டுரை |
| செவ்வாய் - 16 | |



யோகர்சுவாமிகளின் குருபூசை தினம் நேற்றுமுன்தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடிக்கு முன்பாக நடைபெற்றது. இதில் யோகர் சுவாமிகளின் திருவுருவப் படத்துக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறுவதைக் காணலாம். (எஸ்.பி)

# சமூக சேவைகள் திணைக்களத்தால் பின்தங்கிய குடும்பங்களுக்கு உதவிகள்

(கரணவாய்)

வடக்கு மாகாணத்தில் சமூக சேவைகள் திணைக்களத் தின் உதவியுடன் பிரதேச செயலகங்களின் சமூக சேவைப்பிரிவால் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்படி பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பயனாளி அல்லது மாற்று ஆற்றல் உடையோருக்கு சுயதொழிலை மேற்கொண்டு வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த 15000 ரூபா நன்கொடையாக வழங்கப்படுகிறது.

மேலும் மாற்று ஆற்றலுடையவர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 50 பேருக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

அத்துடன் மாற்று ஆற்றலுடையவர்களுக்கு கண்வில்லை. மூக்குக்கண்ணாடி முச்சக்கர வண்டி, சக்கரநாற்காலி, செயற்கைக்கால், கை, பாதம், ஊன்றுகால், கலிபர் காலணி, காதுகேட்கும் கருவி, வெள்ளைப் பிரம்பு போன்ற உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

இதற்கு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் பயனாளியின் கோரிக்கைக்கடிதம் மருத்துவச் சான்றிதழ் என்பவற்றுடன் சமூகசேவை பகுதிக்கு சமூகமளிக்க வேண்டும்.

மேலும் இயற்கை அனர்த்தங்களான மழை, கடும்காற்று சூறாவளி போன்றவற்றால் குடிசை வீடுகள் பாதிக்கப்பட்டால் அதனை திருத்துவதற்கு தற்செயல் நிவாரணமாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

இதற்கு பயனாளியின் கோரிக்கை கடிதத்துடன் கிராம அலுவலரின் தினக்குறிப்பு பிரித்தெடுப்பு என்பவற்றுடன் நேரடியாக சமூகமளித்தல் வேண்டும்.

60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டை வழங்கல் இதற்கு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் வயதை உறுதிப்படுத்தும் ஏதாவது அத்தாட்சிப் பத்திரம் (கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்பத்தாட்சிப் பத்திரம். தே.அ.அ.பிரதி முத்திரை அளவிலான இரண்டு படம்)என்பவற்றுடன் வருகை தர வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை கரவெட்டி பகுதியில் வசிப்போர் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# இலக்கிய விருதுக்கு தெரிவான நூல்களின் பெயர்ப்பட்டியல்

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச இலக்கியக்குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்கின்ற 2014 அரச இலக்கிய விருது வழங்கல் விழாவிற்காக கிடைக்கப்பெற்ற நூல்களின் பெயர்ப் பட்டியல் தற்போது அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு வெளிவந்த நூல்கள் அரச சுவடி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் எழுத்தாளர்கள் மூலம் நேரடியாக அரச இலக்கிய குழுவுக்கு ஒப்படைக்கப்பட்ட அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்ட நூல்களின் பெயர்ப் பட்டியலே அனுப்பப்பட்டுள்ளது.

நூல்களின் பெயர்ப் பட்டியலை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக அனைத்து மாவட்ட செயலகங்கள், இலங்கை கலைக் கழகம் தேசிய கலாபவனம்,கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்

# கல்விச் செயற்பாட்டிற்கு உதவி புலம்பெயர் மாணவரிடம் கோரிக்கை

பொலிகண்டி இந்துதமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளுக்காக வெளியிடங்களுக்குச் செல்வதற்கு ஏதுவாக பாடசாலைக்கென துவிச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்வதற்கான நிதியினை புலம்பெயர் வாழ் பழைய மாணவர்களிடம் கோரியுள்ளதாக பாடசாலை அதிபர் ச.சண்முகராசா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வறுமையான மாணவர்களை கொண்ட கிராமப்புற பாடசாலையாக இருந்து புலம்பெயர் வாழ் பழைய மாணவர்களின் உதவியுடன் .இப்பாடசாலை முன்னேற்றமடைந்துள்ளதுடன் மாணவர்கள் கல்வி மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த நிலையில் இப்பாடசாலை மாணவர்களுக்கு தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதிலும் வாகனவசதிகள் இல்லாமல் மாணவர்கள் பங்குபற்ற முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

மேலும் தற்போது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கணித பாடத்தில் குறைந்த நிலையில் உள்ள மாணவர்களுக்கான கணித பாடவிருத்திச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இப்பாடசாலையிலிருந்து 5 மாணவர்கள் இதில் பங்குபற்ற முடியாத நிலை காணப்படுகிறது.

இப்பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கையைமேம்படுத்தும் முகமாக பாடசாலைக்கென 5 துவிச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்து தருமாறு இப்பாடசாலையின் புலம்பெயர் வாழ் பழையமாணவர்களிடம் கோரியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (116)

# நூல் அறிமுக நிகழ்வு.

(மானிப்பாய்)

வவுனியா தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில் நெற்கொழுதாசனின் இரகசியத்தின் நாக்குகள் கவிதை நூல் அறிமுக நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு வவுனியா இந்திரன்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் மாமன்றத் தலைவர் இரா.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நயப்புரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் நா.பார்த்தீபன் வழங்குவார் (48)

# களைகட்டுகிறது நடைபாதை வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

சித்திரை புத்தாண்டுக்கான நடைபாதை வியாபாரம் இம்முறை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக வீதியோரங்களில் இவ்வியாபார கொட்டில்கள் அமைக்கப்பட்டிருந்தன. எனினும் இவ்வருடம் பொது நூலகத்திற்கும் புல்லுக்குளத்திற்கும் இடைப்பட்ட மைதானத்தில் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டு வியாபாரங்கள் இடம்பெறுகின்றன. கடந்த வருடத்தில் இவ்வீதி போக்குவரத்துக்கு தடையாக இருந்தது பொதுமக்கள் இவ்வீதியில் பயணிக்கபெரும் சிரமப்பட்டிருந்தனர்.

இம்முறை இந்நடைபாதை வியாபாரம் தற்போது இம்மைதானத்தில் களைகட்டத் தொடங்கியுள்ளது. (இ)

# இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வசந்தமண்டபத் தீபாராதனையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

இதில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு வசந்தமண்டபத்தீபாராதனையும் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெற்று மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும்.

# கணித உபகரணப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்

(வடமராட்சி)

வடமராட்சி வலயத்தின் கோட்டமட்டத்தில் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கணித உபகரணப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**மருதங்கேணி கோட்டம் பிரிவு i**

ந.நிலக்ஷன் (குடத்தனை அ.த.க. பாடசாலை), க.சஜீவன், ச.டனிதா (அம்பன் அ.மி.த.க. பாடசாலை)

**பிரிவு ii**

ந.கௌசலிகா, சி.சிவிதா (குடத்தனை அ.த.க. பாடசாலை), சி.ரோகினி, க.லிகிந்தா (அம்பன் அ.மி.த.க.பாடசாலை)

**கரவெட்டிக் கோட்டம் பிரிவு i**

ப.சிவ்பாலஸ்ரீ, (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), சே.சதுஸ்ரிகா, தி.மதுஷிகா ச.தனுஷா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**பிரிவு ii**


அ.உமாகரன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), சே.சிந்துகன்(நெல்லியடி மத்தியகல்லூரி), கு.டர்மி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கு.ஜோன்சன், ச.கோகர்ணன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**பருத்தித்துறை கோட்டம் பிரிவு i**

கி. விதுசன் (ஹாட்லிக் கல்லூரி) தி.சோபனா மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) தி.கௌதமி (வடஇந்து மகளிர் கல்லூரி) இ. தர்சனா (மெதஸ்த பெண்கள் உயர்தர (பாடசாலை)

பிரிவு ii

க.தர்சினி, ல.மாதுமை (வட இந்து மகளிர் கல்லூரி), வை.தரணிகா மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை) (01)



பொலிகண்டி மருதாம்புலம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பங்குனித்திங்கள் உற்சவத்தின்போது..... (116)

# தேர்தலில் 300 தொகுதிகளை பா.ஜ.கூட்டணி கைப்பற்றும்

## சந்திரபாபு நாயுடு

மக்களவைத் தேர்தலில் பா.ஜ கூட்டணி 300 தொகுதிகளை கைப்பற்றும் என தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

சீமாந்திரா மாவட்டங்களில் உள்ள பல்வேறு துறைகளைச்சேர்ந்த தொழிலதிபர்கள், தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுவை ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்து தங்களது ஆதரவை தெரிவித்தனர். மேலும் அவர்கள், 'நம் மாநிலம், நம்முடைய எதிர்காலம்" எனும் பெயரில் பேருந்துப் பிரசார யாத்திரை மேற்கொண்டனர்.

இந்த யாத்திரையை நாயுடு தொடங்கி வைத்து பேசியதாவது,

தெலுங்கு தேசம் கட்சியின் ஆட்சிக காலத்தில், தொழில் வளம் பெருகியது. மாநிலம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்தது. ஆந்திர மாநிலத்தைப் பிரித்து, சீமாந்திரா பகுதியினருக்கு தலைநகரம் கூட அறிவிக்காமல் சுய நலமாக காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. சீமாந்திராவில் எப்போதும் இல்லாத வகையில், வளர்ச்சிப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

இது தெலுங்கு தேசம் கட்சியினால் மட்டுமே சாத்தியம். இதற்காகத்தான் பா.ஜ.கவுடன் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில், பா.ஜ கூட்டணி 300 தொகுதிகளை கைப்பற்றி ஆட்சி அமைக்கும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை இவ்வாறு சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

# கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தேர்தலின் பின்வேலையிருக்காது



தேர்தலுக்கு பின்னர் இந்திய அரசியலில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு பெரிய வேலை எதுவும் இருக்காது. என்று ராகுல் காந்தி கூறியுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்துக்காக முதல்முறையாக கேரள மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் பேசிய ராகுல் காந்தி காசர்கோட்டில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியபோது, கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் வன்முறை அதிகம் இருபதாக புகார்கள் வந்துள்ளன. ஜனநாயக அரசியலில் வன்முறைக்கும், அடக்குமுறைக்கும் இடமில்லை.

தேர்தலுக்குப்பின்னர் தேசிய அரசியலில் கம்யூனிஸ்டுகளுக்கு எந்தப்பெரிய வேலையும் இருக்காது. அதேபோல காசர்கோடு அரசியலிலும் மார்க்சிஸ்டுகளுக்கு பெரிய வேலை இருக்காது என்று நம்புகிறேன் என்றார்.

# அந்த கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் யார்?

(முன்னைய தொடர்....)

சிவஜோதி வரதராஜா அல்லது வரதர் பிறந்த இடம் வி.கி, விலாசம ஜேர்மனி. சின்னத்துரை கமலநாதன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜேர்மனி இல. 190, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி, செல்லையா லோகநாதன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: ஜேர்மனி மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, பொன்னையா பாலகிருஸ்ணன் அல்லது செட்டி, பிறந்த இடம் வி.கி, குடியுரிமை: ஜேர்மனி கோண்டாவில் வடக்கு, கோண்டாவில், சின்னையா நாகேஸ்வரன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜேர்மனி திருநகர், கிளிநொச்சி, வீரபாகு நடராஜா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜேர்மனி மந்துவில் ஒழுங்கை, சங்கானை, நடராஜா திருச்செல்வம் அல்லது திருமர் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜேர்மனி சாலந்தை, பண்டதரிப்பு, இளையதம்பி கிருபாலன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜேர்மனி (இலங்கை) நிர்மலன்ரவ் நீ திரன் அல்லது இரும்புரை அல்லது அரவிந்தன் அல்லது இரும்பு, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜேர்மனி, அப்புத்துரை அமலன் அல்லது அமல் அல்லது திருமலையன் அல்லது வசித் அல்லது ஜெஸ்மின் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை:

இந்தியாவில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை): இராசதுரை சசிகரன் அல்லது ராசா அல்லது செந்தூரன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: ஜேர்மனி (இலங்கை): இந்தியாவில் வசிக்கிறார், சிவஞானசுநதரம் சிவகரன் அல்லது எழில் அல்லது சிவா,பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியா யோகநாதன் திலீபன் அல்லது சுபாஷ் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், விலாசம் சந்தியாபிள்ளை அல்வேணுப் பிள்ளை அல்லது ஜெரோம் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், சிவுசேகரம் விஜயந்தன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார் குணசீலன் ரமணன் அல்லது அன்பரசன் அல்லது வசீகரன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், குணேந்திரராஜா ஜெயராஜ் அல்லது அரவிந்தன் அல்லது தர்சன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தி யாவில் வசிக்கிறார்,

அம்பிகைதாசன் ஜனார்த்தன் அல்லது தர்சன் அல்லது ஜனா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார் சந்திரபோஸ் ஜெயரூபன் அல்லது பவுண் அல்லது ரூபன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், பொலிகெப் அலெக் சாண்டர் அல்லது கந்தன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், நவரத்னம் சதீஸ்வரன் அல்லது அருண் அல்லது சதீஸ் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், சுப்ரமணியம் சதீஸ்குமார் அல்லது குமார் அல்லது சதீஸ் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், கமலதாஸ் கௌசல்யா அல்லது மதி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், ரூபசிங்கம் ஜனகாந்த் அல்லது அழகன் அல்லது ஜனா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், ரத்னசிங்கம் நித்தியானந்தன் அல்லது ஆனந்த் பதவி பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார் பரமானந்தன் சிவராமகிருஷ்ணன் அல்லது அன்பு அல்லது ரமணன் /சிவா பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், இளங்குமரன் ரஞ்சிதகுமாரி அல்லது மதுரா அல்லது ஜெயந்தா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார்,

செபஸ்தியாம் பிள்ளை ரவிகுமார் அல்லது மாறன் அல்லது நிக்சன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார்,

தம்பிதுரை சிவசிதம்பரநாதன் அல்லது போல் அல்லது கண்ணன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், கதிரவேலு சிவஞானசெல்வம் அல்லது ஜீவன் அல்லது செல்வம் ஆதர் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், தங்கையா தங்கம் அல்லது சங்கர் அல்லது சுரேஷ் அமலா ரோகேசியாஸ் சந்திரவதனா அல்லது வதனி அல்லது வதனா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக் கிறார், அகநிலா அல்லது ஜெமினி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார் அமுதன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், அந்தரஹென்னதிகே சமிந்த தர்சன் அல்லது ஐஸ்மஞ்சு, பிறந்த இடம் வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், நவாஸ் அல்லது சுரேஸ் அல்லது கபில் மாஸ்டர் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், ராஜேந்திரன் மூர்த்தி அல்லது தேவன் சுதர்சன் கைலாயநாதன் பிறந்த இடம் வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், வேலுப்பிள்ளை ரேவதன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், விக்னேஸ்வரன் பரமேஸ்வரி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், விக்னேஸ்வரன் கந்தப்பு முத்தையாபிள்ளை, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இந்தியாவில் வசிக்கிறார், சிமியன் செபஸ்ரியன் அல்லது வின்சன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலியில் வசிக்கிறார், உயரப்புலம், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம், செல்வராசா கவிதாசன் அல்லது கவி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலியில் வசிக்கிறார் கச்சாய் வீதி,கொடிகாமம்., தவேந்திரன் கமலநாதன் அல்லது பாபு, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய், சின்னதுரை சிவராசா அல்லது ஆனந்தராசா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி கச்சாய் தெற்கு, கொடிகாமம், நல்லநாதன் ஜயந்தன், பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி இல. 12, கனகரட்ணம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். யோகநாதன் அஜிந்தன் அல்லது அஜித் பிறந்த இடம் : வி.கி,குடியுரிமை: இத்தாலி வண்ணான்கேனி, பளை. வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் அல்லது பரமேஸ் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி, தாம்பகம், பளை. ஜோசப் மரியா நொபர்ட் நந்தகுமார் பிறந்த இடம்: வி.கி,குடியுரிமை: இத்தாலி, மணல்காடு, குடத்தனை, செல்லதுரை மூர்த்தி அல்லது மூர்த்தி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி. மாகியபிட்டி, சண்டிலிப்பாய்., இமானுவேல் ரஞ்சித் காசியஸ் கீகன் அல்லது கீகன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி. மொன்கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம், சுவகைபிள்ளை ஜேசுதாசன் அல்லது வசந்தன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி.. நவரத்னம் சுகிதரன் அல்லது சுகி, பிறந்த திகதி:- வி.கி, குடியுரிமை: இத்தாலி. மாவிட்டபுரம். செல்வரத்தினம் ஜெயரத்தினம் அலலது ஜெயம் பிறந்தஇடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி. வட்டுவாகல், முல்லைதீவு., ஜெகநாதன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி கரம்பன், காரைநகர், நடராசா கமலதாசன் அல்லது கமல் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி மந்துவில் பொன்னுத்துரை பிரபாகரன் அல்லது பிரபு, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி. பாடசாலை வீதி, நாவற்குழி, யாழ்ப்பாணம், சிவராஜா ஸ்ரீபவாணி, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி. கச்சாய் வீதி, கொடிகாமம். விக்னேஸ்வரன் சுதாகர் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி பட்டிக்குறிச்சி, பாண்டிருப்பு, தியாகராஜா புலேந்திரராஜா அல்லது ராஜா, பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி வேலணை கிழக்கு, வேலணை, யாழ்ப்பாணம், சுப்ரமணியம் சுரேந்திரன் அல்லது சுரேஷ் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி 4ஆம் கட்டை தபால், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம், சோமநாதர் சிவரூபன் அல்லது ரூபன் பிறந்த இடம் : வி.கி, குடியுரிமை: இத்தாலி இல.174, ஆறுமுகம் வீதி, வட்டகச்சி, இராஜதுரை இராஜநாயகம் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: இத்தாலி அம்மன் வீதி, ஆவரங்கால் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், பத்மலிங்கம் கஜேந்திரன் பிறந்த இடம்: வி.கி, குடியுரிமை: இத்தாலி குரும்பசிட்டி, தெல்லிப்பளை, நீதிகுலசிங்கம் பரமேஸ்வரன், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: இத்தாலி உடுத்துறை வடக்கு, தாளையடி, டேவிட் கிரிஷ்டி ஆனந்தராஜ், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: இத்தாலி புனித ஜேம்ஸ் ஒழுங்கை, இளவாலை, யாழ்ப்பாணம், ஜெயலட்சுமி கோவிந்தசாமி அல்லது ஜெயா, பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: மலேசியா சிவலிங்கம் சரவணன் அல்லது கரிகாலன், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: மலேசியா பெருமாள் சின்னக்குட்டி, இடம்: வி.கி குடியுரிமை: மலேசியா. இராமையா திருமௌலவன் அல்லது பெருமாள், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: ஜெயகுமார் வையாபுரி அல்லது குமார், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நடராஜா லெட்சுமி காந்தன், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: மலேசியா இல 176, பிள்ளையார் கோவில் வீதி, கரையாக்காண்தீவு, கண்ணன்குடா, மட்டக்களப்பு, செல்வமலர் ஐயாதுரை, பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: மலேசியா. மதியரசன் எனவும் சனசந்திரன் என அறியப்படுகின்ற செல்லையா ராமசந்திரன், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: மலேசியா. நாகமுத்து மகேஸ்வரமூர்த்தி அல்லது மகேஷ், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து புலோலி தெற்கு, பருத்தித்துறை, தணிகாசலம் ஜெயரூபன், பிறந்த இடம்: வி. கி குடியுரிமை: நெதர்லாந்து. பட்டிமனை, அச்சுவேலி கந்தையா கிருஸ்ணகுமார் அல்லது அருண் பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து புலோலி தெற்கு, பருத்தித்துறை, வேலாயுதம்பிள்ளை லோகேஸ்வரன் அல்லது லோகேஸ், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து பாண்டியன்குளம், வவுனியா, தம்பி அருள்நேசன் அல்லது நெல்சன் பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து ஆறுமுகம் ஜெயா அல்லது ஜெயா, பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து நவாலி வடக்கு, மானிப்பாய், கணபதிபிள்ளை யோகேந்திரன் அல்லது யோகன், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து முருகன் கோவில வீதி,நெல்லியடி, யாழ்ப்பாணம், குண்டுமணி சற்குணராசா அல்லது சற்குணம், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து கரணவாய் மேற்கு, கரவெட்டி, நவரட்ணம் கோடீஸ் வரநாதன் அல்லது ஈசன், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து பளை தெற்கு, வாசாவிளான், யாழ்ப்பாணம், பஞ்சலிங்கம் நடேசலிங்கம் அல்லது நடா, பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து வட்டுக்கோட்டை, ஆனைகோட்டை, யாழ்ப்பாணம், செல்லதுரை மனோ அல்லது மனோ, பிறந்த இடம் வி.கி குடியுரிமை: நெதர்லாந்து. சங்கானை, யாழ்ப்பாணம், வீரசிங்கம் தயாளன், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் யாழ்ப்பாணம், தேவதாஸ் கொன்ஸ்ரன் சன் மலேரியன் அல்லது கொன்ஸ் பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து குடத்தனை, யாழ்ப்பாணம், குலசேகரம் ரஜினிகாந்தன் அல்லது காந்தன், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: கலட்டி, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், நடராசன் சிவகுமாரன் அல்லது ராசன், நாகராசா ஸ்ரீசங்கர் அல்லது சங்கர், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து சங்கானை வடக்கு, செல்லப்பா நிமலநாதன் பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து மந்திகை, புலோலி தெற்கு, புலோலி, சரவணமுத்து தவராசா அல்லது பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து (இலங்கை): நெடுங்கேணி, வவுனியா, ராமலிங்கம் ஸ்ரீரங்கன் அல்லது ரங்கன், பிறந்த இடம்: வி.கி குடியுரிமை: நெதர்லாந்து ஐயனார் கலட்டி, பருத்தித்துறை, கனகராயர் ரத்னராஜ் அல்லது ரகு, பிறந்த இடம் : வி. கி குடியுரிமை: நெதர்லாந்து மந்துவில், பூநகரி, அரசரத்தினம் சுதாகரன் அல்லது சுதா, பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து அச்சுவேலி, நீர்வேலி, யாழ்ப்பாணம், தம்பையா லிங்கரத்னம், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து இல. 65, சிவன் வீதி, திருகோணமலை, வரதலிங்கம் செல்வசந்திரன் அல்லது செல்வம், பிறந்த இடம் : வி.கி குடியுரிமை: நெதர்லாந்து ஆவரங்கல், புத்தூர், செல்லையா ராஜேந்திரன் அல்லது வசந்தன், பிறந்த இடம் வி. கி குடியுரிமை: நெதர்லாந்து 16ஆம் கட்டை, கண்டி வீதி, பரந்தன்.

(தொடரும்...)

# தீவக மக்களுக்கு வறட்சி நிவாரணம்

# சில்வேஸ்திரி அலன்ரின் எம்.பி. தகவல்

(வேலணை)

தீவகமக்களுக்கு விசேடமான வறட்சி நிவாரணம் வழங்கப்படவுள்ளது என்றும், தீவக மக்கள் எதிர்நோக்கும் அனைத்து சவால்களுக்கும் படிப்படியாக தீர்வு காணப்படும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

வேலணை பிரதேச வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளாக தையல் இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்,

தீவக மக்கள் எதிர்நோக்கி வரும் குடும்ப வறுமை, குடிநீர், போக்குவரத்து, மின்சாரம் போன்ற பிரச்சினைகள் படிப்படியாக நிறைவு செய்யப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருவதுடன், தீவகத்திற்கான



பிரதான வீதியானது தற்போது காபற் இட்டு செப்பனிடப்பட்டு வருகிறது. அத்துடன் தீவக மக்களிற்காக விசேடமாக வறட்சி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இவற்றுடன் மின்சாரம் போன்ற அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றை மக்கள் சரியான முறையில் தமது பொருளாதாரம், பிள்ளைகளின் கல்வி போன்றவற்றை வளர்த்தெடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வேலணை பிரதேசசபை தவிசாளரும் ஈ.பி.டி.பி. வேலணை பிரதேச அமைப்பாளருமான சிவராசா, உதவித் திட்டப்பணிப்பாளர், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சாவகச்சேரி வரை ரயில் சேவை;

## மாத இறுதியில் நடக்கும்

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வடக்கிற்கான ரயில் சேவை சாவக்சேரி வரை நீடிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. தற்போது வடக்கிற்கான ரயில் சேவை பளை வரையே நடைபெறுகின்றது.

அதற்கு அப்பால் கெடிகாமம், சாவகச்சேரி ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி வரையான ரயில் பாதைகளும் போக்குவரத்துக்குத் தயாராகிவிட்டன.

எனினும் பளைக்கும், சாவகச்சேரிக்கும் இடையிலான சில ரயில் தரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி இன்னும் பூர்த்தியாகவில்லை. சாவகச்சேரி வரையான சேவை விஸ்தரிப்புக்குப் பின்னர் காலகதியில் அந்த நிலையங்கள் அமைக்கப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த பத்து நாட்களுக்குள் சாவகச்சேரி வரை ரயில் சேவையை நடத்தக்கூடிய தயார் நிலையில் அத்தடம் ரயில்வேத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. பெரும்பாலும் இந்த மாத முடிவுக்கு முன்னர் ரயில் சேவை சாவகச்சேரி வரை நீடிக்கப்பட்டு விடும் என்பதை உறுதிசெய்ய முடிந்தது.

# யாழில் கட்டுமீறுகிறது குற்றச்செயல்கள்;

# ஒரு வாரத்தில் 168 பேர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ். மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச்செயல்களின் நிமித்தமும் நீதிமன்ற பிடியாணைகளின் பிரகாரமும் 168 பேர் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ் பொலிஸ் பிரிவில் அடிதடிக் காயப்படுத்தியது சம்பந்தமாக 31 பேரும், சந்தேகத்தின் பேரில் 5 பேரும், சட்டவிரோத மின்னிணைப்பு பெற்ற நால்வர் உட்பட 92 பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பிடியாணையின் பிரகாரம் 9 பேரும், சந்தேகத்தின் பேரில் 9 பேரும், ஏனைய குற்றச்செயல்களுக்காக 52 பேரும் உட்பட 76 பேரும் மொத்தமாக 168 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

## பண்டிகைக்கால...

கொடுப்பனவாகிய 5000 ரூபா விசேட கொடுப்பனவுப் பட்டியல் மூலம் அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை அதிபர்கள் இரு தினங்கள் சம்பளப் பட்டியல் பெறுவதற்காக வலயக்கல்வி அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (03)

## வரன்முறை...

இதன்போது விருந்தினர்களின் ஆசனத்தில் அமர்ந்திருந்த குகராசா திடீரென எழுந்து நின்று உரத்த குரலில் சந்தைகளின் செயற்பாடு தொடர்பில் உனக்கு பேச உரிமையில்லை என மாகாண சபை உறுப்பினரை நோக்கி கத்தினார்.

அத்தோடு மேலும் பல சபைக்கு ஒவ்வாத வார்த்தைகளை உபயோகித்த அவர் கரைச்சி பிரதேச செயலரை பார்த்து தன்னை ஏன் இந்த நிகழ்விற்கு அழைத்தாய் எனவும் கூறியவாறு சபையை விட்டு வெளியேறியதோடு நிகழ்வில் கலந்து கொண்டிருந்த கரைச்சி பிரதேசசபையின் செயலாளர் கிருஸ்ணகுமாரையும் நிகழ்விலிருந்து எழுந்து வருமாறு வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றார்.

மக்கள் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிர்வாகங்களினதும் சேவைகள், குறைபாடுகள் தொடர்பில் விமர்சிப்பதற்கு ஒவ்வொரு பொது மகனுக்கும் உரிமை உள்ள நிலையில் இவ்வாறான தவறுகள் சுட்டிக்காட்டப்படுவதை பிரதேசசபை தவிசாளர் ஏற்க மறுத்ததும் சாதாரண சபைப் பண்பாட்டைக்கூட காக்கும் மனநிலையும் பண்பும் அவரிடம் காணப்படாத நிலைகுறித்தும் மக்கள் பெரும் விசனத்திற்குள்ளாகினர்.

இதேவேளை கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட சந்தைகள் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

## பிரதேச சபையை...

திக்கொண்டிருக்கின்றனர்.

இந்தவகையில் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் பதவி வெறிதாக்கப்பட்ட பின்னர் பெப்ரவரி 7 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கும் பொறுப்பை சபைச் செயலாளருக்கு கையளித்த முதல்வர், உப தவிசாளர் தலைமையில் சபை கூடுவதற்கு இதுவரை அனுமதி வழங்காமல் தடைபோட்டு வைத்துக்கொண்டு உப தவிசாளரும் உறுப்பினர் களும் பதவியில் இருக்கும்போது சபையை கலைக்காமலேயே (சபையைக் கலைக்கும் அதி காரம் முதல்வருக்கு இல்லை) ஏனைய மாகா ணங்களில் உள்ளூராட்சி உதவி ஆணையாளரை விசேட ஆணையாளராக நியமிக்கும்போது வலி. கிழக்கில் மட்டும் விதிவிலக்காக சபைச் செயலா ளரை விசேட ஆணையாளராக நியமித்து சபைப் பொறுப்புக்களை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருந்தன.

சபைக்கு புதிய தவிசாள்ரை நியமித்து அறியத்தருமாறு தேர்தல் ஆணையாளரால் தமிழரசுக் கட்சித் தலைமைக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அக்கடிதம் மறைக்கப்பட்டே வலி. கிழக்கு பிரதேச சபையை வடக்கு மாகாண சபை முடக்கி வைத்துள்ளது.

இந்நடவடிக்கையினால் இப்பிரதேச மக்களின் தேவைகள் பாதிப்படைந்துள்ளமை யாரும் அறியாத விடயமல்ல. மக்கள் விரோத சக்திகளை காப்பாற்றுவதற்கே முதல்வர் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். பிரதேச சபைச் செயலாளர் நா.குமணன் செயற்றிறன் அற்ற ஒருவர். எமது சபைக்கு அதிசிறப்பு தரத்திலுள்ள ஒருவரே செயலாளராக நியமிக்கப்பட வேண்டும்.

எத்தனையோ சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இருக்கும்போது சபையை சூறையாடுவதற்கு பொருத்தமாகவும் உடந்தையாகவும் இருக்கக் கூடிய ஒருவரையே தற்போது எங்கேயோ தேடிப் பிடித்து செயலாளராக நியமித்து மக்களுக்கும் சபைக்கும் இடையில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளனர் வடமாகாண சபையினர்.

இந்நிலையில் ஆடத்தெரியாதவள் கூடம் கோணல் என்றாளாம் என்பது போல மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று 6 மாதம் கடந்த நிலையிலும் இன்னும் அரசை குற்றம்சாட்டிக்கொண்டு தேவையற்ற தீர்மானங்களையும், போராட்டங்களையும் மேற்கொண்டு மக்களை திசைதிருப்பி தமது சொகுசு வாழ்வுக்கு பலம்சேர்த்து வருகின்றனர். இவர்கள் கைப்பற்றிய பிரதேச சபைகளிலும் கடந்த 3 வருடங்களாக எதையும் சாதித்துவிடவில்லை என்றும் தெரிவித்தார்.

## யாழ். நிலத்தடி...

நைத்ரேற்று உள்ள குடிதண்ணீரை குடிக்கலாம் என உள்ளது.

இவ்வாறான நிலையில் யாழ். குடாநாட்டு நீர் குடிப்பதற்கு உகந்ததா? இந்த 3 இலட்சம் மக்கள் குடிப்பதற்கு நன்னீர் மூலம் ஏதேனும் இருந்தால் எமக்கு தெரியப்படுத்துங்கள். அது யாரால், எப்போது அறிவிக்கப்படும் என்றார்.

இந்நிலையில் ஊடகவியலாளர் ஒருவர் குறுக்கிட்டு வறட்சி காலத்தில் அதாவது விவசாயிகள் பாதிக்காத வகையில் குடிதண்ணீர் வழங்கமுடியுமா எனக்கேட்டபோது,

எக்காலத்திலும் விவசாயிகள் பாதிக்காத வகையில் நடவடிக்கை திட்டமிடல் மேற்கொள்ளப்படும். மேலும் இரணைமடு குளத்து நீர் பற்றாக்குறையான காலத்தில் அளவிலும் நேரத்திலும் மாற்றீடு செய்து பங்கீடு செய்து வழங்கப்படும்.

அதேநேரம் மிகப் பற்றாக்குறையான காலத்தில் மட்டும் அவசர கால நிலைமைகளில் யாழ். குடாநாட்டு நீர்வளம் பயன்படுத்தப்படும் என்றார்.

மேற்படி ஊடக அமையத்தில் சமூகவியல் நிபுணர் திருமதி பாலகுமாரி ஜங்கரன், பொறியியலாளர் பா.பாலேந்திரா, சமூகவியல் நிபுணர் ரி.பாலசுப்பிரமணியம், பொறியியலாளர் ரி.ஜெயக்குமார் ஆகியோர் 'கலந்துகொண்டனர். (92)

## கோபி உட்பட...

துப்பாக்கிப்பிரயோகத்திலேயே கொல்லப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களமும் உறுதி செய்திருக்கின்றது.

கொல்லப்பட்டவர்களில் மூன்றாவது நபர் அப்பன் என்றழைக்கப்படும் விடுதலைப்புலி சந்தேகநபர் ஏன்று இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாழன் இரவு இடம்பெற்ற சம்பவத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக முன்னர் வெளியாகிய தகவல் தவறானது என்றும் அந்த இராணுவச் சிப்பாய் வேறு ஓரிடத்தில் இடம்பெற்ற இராணுவப் பயிற்சியின் போதே உயிரிழந்ததாக இப்போது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

நெடுங்கேணி வெடிவைத்தகல் பகுதியில் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் விடுதலைப்புலிகளை மீண்டும் ஒன்றிணைக்கும் முயற்சியில் கோபி என்பவர் ஈடுபட்டிருந்ததாகவும், கிளிநொச்சி, தர்மபுரத்தில் இவர் தன்னைத் தேடிச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவரை துப்பாக்கிச் சூடு நடத்தி காயப்படுத்தி விட்டு தப்பியோடியதாகவும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேடப்பட்டு வந்த கோபிக்கு அடைக்கலம் கொடுத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் இந்த சூட்டுச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் பகுதியில் உள்ள தனது வீட்டிலிருந்த ஜெயக்குமாரி என்ற பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, பயங்கரவாதச் செயலில் ஈடுபடுபவர்கள் அல்லது, விடுதலைப்புலிகளை மீளவும் ஒன்றிணைக்க முயற்சிப்பவர்களுக்கு உதவிகள் வழங்கியதாகக் கூறி, 65 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்திருந்தார்.

இவர்களில் 5 பேர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும், மிஞ்சிய 60 பேரில் பத்துப் பேர் பெண்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாய...

அபிவிருத்தி செய்து மேம்படுத்தும் நோக்கில் இந்நூல் அமையப் பெற்றுள்ளது.

முன்பதாக மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் இறுதியாக விவசாய திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விவசாய கண்காட்சியின் ஒளிப்படத் தொகுப்பும் காண்பிக்கப்பட்டது.

நூல் ஆசிரியர் துரைசுவாமி குமரன்தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் திருமதி ஷானிக்கா ஹிரும்புரேகம, பேராசிரியர் றொகான் ராஜபக்ஷ ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்த்தினார்.

தொடர்ந்து நூலை நூல் ஆசிரியர் குமரன் தங்கராசா வெளியிட்டு வைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். இதேவேளை சிறப்புப் பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அமைச்சரின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராஜசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்பிக்க கித்துல்கொட, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.தவராசா, கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் நவாப் ரஜாப்தீன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# மண்டைதீவில் சுற்றுலா மையம் இந்தோனேசிய தொழில் அதிபர் முதலீடு

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு கடற்பிரதேசத்தில் போக்குவரத்து, நீர்த்தடாகம், ஹோட்டல் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய உல்லாச நகரம் அமைக்கப்படவுள்ளது.

இந்தோனேசியாவைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் வாசுதேவன் இராசையா இதற்கான மூன்று சுற்றுப் பேச்சுக்களை கொழும்பில் நடத்தியுள்ளதுடன், இறுதியாக பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவு கடற்பிரதேசத்தை உள்ளடக்கியதாகவும், 2 ஆயிரம் பேருக்கு உடனடி வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய இத்திட்டம் கடந்த 2012 இல் இருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி அனுமதி கிடைத்தவுடன் வடக்கின் ஆளுநர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்க அதிபர், வேலணை பிரதேச செயலர், வேலணை பிரதேசசபை, கடற்றொழில் நீரியல் வள அமைச்சு. சுற்றுச்சூழல் அமைச்சுடன் பேச்சு நடத்தி திட்டத்தை ஆரம்பிப்பதுடன், நான்கு ஆண்டுகளில் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனை, வெளிநாட்டு தொழில்நுட்பத்துடன் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி அபிவிருத்தி திட்டம் குறித்த மாநாடு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மண்டைதீவு அபிவிருத்திக்கு பல மில்லியன் அமெரிக்கன் டொலர் நிதி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. (92)

# வேலணையில் இன்று புத்தாண்டுச் சந்தை

வேலணை பிரதேசத்துக்கான வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை இன்று இடம்பெறவுள்ளது.

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த புத்தாண்டுச் சந்தையில் உள்ளூர் உற்பத்திகள் சந்தைப்படுத்தப்படவுள்ளன.

வேலணை பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேசசபையின் தவிசாளர் சி.சிவராசா உட்பட மேலும் சிலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவின் இலங்கை விஜயம் இரத்து

பிரித்தானியாவின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழுவினர் கொழும்புக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் இறுதி நேரத்தில் இரத்துச்செய்யப்பட்டது. சனல் - 4 இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவின் அனைத்து கட்சிகளிடம் இருந்து கிளம்பிய எதிர்ப்பையடுத்தே இந்த பயணம் இரத்துச்செய்யப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, இலங்கை மீது போர்க் குற்ற விசாரணைகளுக்கு அழைப்பு விடுத்து இரண்டு வாரங்களுக்குள் இந்த பயணம் மேற்கொள்ளப்படவிருந்தமையால் இது சர்ச்சைக்குரிய பயணமாக கருதப்பட்டது.

அதுவும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச விசாரணைகளுக்கு தாம் ஒத்துழைக்கப் போவதில்லை என்று இலங்கை அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குறித்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பயணத்துக்குமான முழுச்செலவையும் தமிழரும், இலங்கை அரசாங்கத்தின் ஆதரவாளருமாக செயற்படும் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் தர்ம அமைப்பு பொறுப்பேற்றிருந்தது என்று சனல் - 4 தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தில் பிரித்தானியாவின் கொன்சவேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே பங்கேற்கவிருந்தனர்.

# இரணைமடு இழுபறி தொடர்கிறது நிபுணர் குழு அறிக்கை எங்கே?

## பொறியியலாளர் பாலேந்திரா கேள்வி

(யாழ்ப்பாணம்)

இரணைமடு குடிநீர் விநியோகத்திட்டம் தொடர்பில் வடமாகாண விவசாய அமைச்சரினால் உருவாக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இன்று வரை வடமாகாண சபையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இரணைமடு நீர் விநியோகத் திட்டத்தின் பொறியியலாளர் பாலேந்திரா தெரிவித்தார்.

யாழ்.நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிபுணர்கள் இத்திட்டத்தை 3 பிரிவுகளாக மேற்கொள்ள வேண்டும் என்கின்றனர். குள அரைக்கட்டு, நீர் விநியோகம், கழிவுநீர் மீளமைப்பு என்பன அவையாகும்.

இத்திட்டத்தில் இம் மூன்றும் ஒரே முறையிலேயே மேற்கொள்ள முடியும். ஆனால் அதை அவர்கள் புரியாதது ஏன் எனப் புரியவில்லை. இதனைத் தனித் தனியாக மேற்கொள்ள முடியாது.

குளக்கட்டை புனரமைக்கலாம் ஆனால் நீரைப் பெற முடியாது என்பது அவர்கள் கருத்து. அது சாத்தியமற்றது. இத்திட்டம் செய்ய முடியுமா செய்யக்கூடாதா என்பது குறித்து வடமாகாண சபையே எமக்கு இறுதி அறிக்கை தர வேண்டும். ஆனால் இன்று வரை அவ்வாறு எதுவும் அளிக்காமையால் நாம் எமது கடமைகளைச் செய்கிறோம். முடிவு கிடைத்தால் அதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம். இத்திட்டத்தின் மூலம் 3 இலட்சம் மக்கள் குடிநீரைப் பெறுவர். அக்குள நீரின் நைதரசனின் செறிவு தொடர்பில் குடிநீருக்கான அளவிலும் குறைவாகக் காணப்படுகின்றது. இது ஆய்வறிக்கையின் மூலம் அறியப்பட்டே இத்திட்டத்திற்கு ஆசிய வங்கி உதவிகளை வழங்குகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சூரியக் கலத்தொழில் நுட்பம் யாழில் அமெரிக்க நிபுணர்கள் கருத்துரை

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சூரியக் கலத் தொழில் நுட்பமும் இலங்கையில் அதனோடிணைந்த தொழில் முயற்சிகளும் என்ற தலைப்பிலான ஆய்வுப்பட்டறையில் அமெரிக்காவைச்சேர்ந்த அறிவியலாளர்கள் கலந்து கருத்துரை வழங்கவுள்ளனர். யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் துறை ஏற்பாடு செய்துள்ள இந்த ஆய்வுப்பட்டறையில் சிக்காக்கோவில் அமைந்துள்ள இலினோயிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஈழத்தமிழரான பேராசிரியர். சிவலிங்கம் சிவானந்தன் தலைமையில், விஞ்ஞானிகளான றிம்கூட்ஸ், றிம்கெசற், ரமேஸ் தேரே, மௌபா:.க் அல்ஜசீம் ஆகியோரே வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். பேராதனை, களனி, ருகுண மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழககங்களுடனான கூட்டு ஆய்வு முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஆய்வு நிறுவனமான சிவானந்தன் ஆய்வகம் வருடாந்தம் பேராதனை, களனி, ருகுண மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொடர் ஆய்வுப்பட்டறைகளை நடத்தி வருகின்றது. அந்த வகையில், இந்தத் தொடர் ஆய்வுப்பட்டறைகள் 2012 ஆம் ஆண்டு கண்டியில் உள்ள அடிப்படைக் கல்வி நிறுவனத்திலும், 2013 ஆம் ஆண்டு ருகுணு பல்கலைக்கழகத்திலும் நடைபெற்றன. மூன்றாவது ஆய்வுப்பட்டறை எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் துறையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கற்மியம் ரெலுரைட் சூரியக் கலத் தொழில் நுட்பத்தில் போதிய அறிவினை வளர்க்கும் வகையில் இலங்கையிலுள்ள துறைசார் ஆய்வு மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக அமெரிக்க ஆய்வு நிறுவனமான சிவானந்தன் ஆய்வகம் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் வளவாளர்களை அனுப்பிவைப்பதோடு, இலங்கையிலிருந்து துறைசார் ஆய்வுமாணவர்களையும், விரிவுரையாளர்களையும் அமெரிக்காவுக்கு அழைத்துப் பயிற்சிகளையும் வழங்கி வருக்கின்றது. இந்நிறுவனத்தின் நிறுவுனரான பேராசிரியர். சிவலிங்கம் சிவானந்தன் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான மாற்றத்துக்கான சாதனையாளன் விருதைக் கடந்த வருடம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கருத்தரங்கின் நிறைவு தினத்தன்று யாழ். பல்கலைக்கழக பௌதீகத் துறையினரால் சூரியக் கலத் தொழில் நுட்பம் தொடர்பான செயல்முறை விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன. இலங்கையில் கற்மியம் ரெலுரைட் சூரியக் கலத் தொழில் நுட்பம் தொடர்பான செய்முறை ஆய்வு உபகரணங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாத்திரமே இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# போதைக்கு அடிமையாகும் மாணவர்கள் அதிகரிப்பு

பாடசாலை மாணவர்கள் மதன மோதகம் என்ற போதை தரும் உருண்டைகளை பயன்படுத்துவது அதிகரித்துள்ளதாக அபாயகரமான மருந்துகளை கட்டுப்படுத்தும் சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு இந்த போதை தரும் உருண்டை பயன்படுத்தும் 94 வீதமான பாடசாலை மாணவர்கள் 16 வயதிற்கும் 20 வயதிக்கும் இடைப்பட்டவர்கள் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

12 வீதமான பாடசாலை மாணவர்கள் தினமும் இந்தப் போதையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களில் 92 வீதமானவர்கள் போதை மற்றும் மகிழ்ச்சிக்காக மதன மோதகத்தைப் பயன்படுத்தி வருவதாக அந்த ஆய்வுத் தகவல் தெரிவித்துள்ளது. மதன மோதகம் என்பது கஞ்சா போதைப் பொருளை சேர்த்து அரைத்து தயாரிக்கப்படும் இனிப்பான ஒரு வகைப் போதைப் பொருளாகும்.

# சமூகப்பிரச்சினைகள் வேகமாக அதிகரிப்பு

இலங்கை மக்களில் 60 வீதமானவர்கள் மனநோயாளிகள் என மேல் மாகாண சமூக நலத்துறை பணிப்பாளர் அனுஷா கோகுல தெரிவித்துள்ளார்.

சமூக சேவை அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்காக கொழும்பு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் இன்று சமூக பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. விவாகாரத்து பெறும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நீரிழிவு நோய் காரணமாக கால்கள் துண்டிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. வீதி விபத்துக்களால் தினமும் பலர் அங்கவீனமடைக்கின்றனர்.

இலங்கையில் வாழும் 10 பேரில் ஆறு பேர் மனநோயாளிகள். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறு வயது பெண்கள் கர்ப்பம் அடைவது, விபசார தொழில், புத்தி சுவாதீனம் இல்லாத பிள்ளைகள் என்பன அதிகரித்து வருகின்றது.

இன்னும் 5 வருடங்களில் நாம் எண்ணிப்பார்க்காத அளவில் சமூகப் பிரச்சினைகள் அதிகரிக்கும். இதனால் சமூக சேவை துறையின் பணிகள் விரிவுப்படுத்தப்பட வேண்டும் என அனுஷா கோகுல மேலும் கூறியுள்ளார்.

# சர்வதேச இளைஞர் மாநாடு கொழும்பில் நடாத்த ஏற்பாடு

கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச இளைஞர் மாநாடு 2014 இற்கு உலகெங்கிலும் உள்ள நாடுகளின் அமைச்சர்கள் பலரும் கலந்து கொள்ள வேண்டுமென்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச இளைஞர் மாநாடு 2014 தொடர்பாக இலங்கையிலுள்ள இராஜதந்திரிக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இந்த இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நிறைவேற்றிய இரண்டு தீர்மானங்கள் மூலம் அங்கீகாரத்தை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இம்மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்காக இலங்கை அரசாங்கம் பரந்த அடிப்படையிலான ஒழுங்குகளை செய்து வருகின்றது.

இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு இந்த உலக மகாநாடு வழிவகுக்கும். பொதுநலவாய இளைஞர் மன்றத்தில் தலைமை தாங்கும் என்ற முறையில் இளைஞர் தொடர்பான விவகாரங்களுக்கு இலங்கை முக்கியத்துவம் அளிக்கிறது.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர இளைஞர் விவகாரங்களில் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றங்களுக்கு இவ்வருடம் நடைபெறும் மாநாட்டில் தொனிப் பொருள் தயாரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.